T. K. Sivagnanam
Apothecary

யாழ்ப்பாணத்து வைத்தியநூல் வெளியீடு 11

Lion S. Sriganeshan

சிவமயம்

BHARANI PHARMACY
456, HOSPITAL ROAD
JAFFNA
DIAL. 7386

பரராசசேகரம்

ஆறும்பாகம்

உதரரோகநிதானம்

குன்மம், பாண்டு, காமாலை, சோகை, வாய்வு, சூலை ரோகங்கள்.

பதிப்பாசிரியர்
ஏழாலை
ஐ. பொன்னையா

திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலை
மல்லாகம்
தாதுஹு புரட்டாதிமீ
1936
விலை ரூபா 2-00

Dr. T. K. SIVAGNANAM
L. A. M. P. (Cey)
Kondavil West
KONDAVIL

உரிமை பதிவுசெய்யப்பெற்றது

Kondavil West.

உ

சிவமயம்

பரராசசேகரம்

பதினொருவது

உதரரோகநிதானம்.

இரசித மான சோதி யெழின்மிகு மலையில் வாழும்
பரசிவ னருளி னாலே பவமறு முனிவ னந்நாள்
உரைசெயு முதர ரோக முறுகுணங் கிரியை சொல்லக்
கரிமுக முடைய முக்கட் கணபதி துணைத்தாள் காப்பே 1

உதர மதனி லுறுரோக பெயரு மதுசெய் குணமேவக
விதன மதுசெய் குறிசேர்வு தெளிவு மிவைகண் முதலாய
விதியின் மொழியை யயனரு மறிய வினிய வயுள்வேத
விதியை யுலகி லறைகூற விரவி யுரைசெய் ததுவாரும்
முதிய முனிவ ரொருநால்வ ரறிய வரனு மொருகால
முதிய மொழியை வடநீழ லதனின் மொழியவுணர்வாய்மை
உதனை யறியு மறிவாளர் பொதிய மலையின் முனிகூறு
முதர கிரியை யறியாதா ரொருசிகிச்சையு மறியாரே 2

உதரரோகத் தொகுப்பு

மருவிய வுதரந் தன்னில் வைகுநோ ரொருநாற் றெட்டாம்
பெரியவ ருரைத்த வுண்மை தொந்தமு மொன்பான் பேசிற்
கருதிய வேது மற்றுஞ் சாத்திய மசாத்தி யங்கள்
உரைசெயுங் குறிகு ணங்கள் சிகிச்சையு முணர்ந்து கொள்ளே

Dr. T. K. SIVAGNANAM
L. A. M. P. (Cey)
Kondavil West

உதரரோகம் உண்டாதற்கு ஏது

கருதிடின் மீனின் முள்ளுங் கலந்துமி நெல்லின் வாலும்
மருவிய கல்லெல லும்பு மங்கையர் மருத்தி னீடும்
பருகுசோ றறாமை யாலும் பழமல நிற்கை யாலும்
மருவுரோ மயிர்க ளாலும் வயிற்றினி னோய்கள் சேரும் 4

புரையற வுண்கை யாலும் பொருமநீர் கொள்கை யாலும்
சுருளவே முடக்கிக் கொண்டு சுகமறக் கிடக்கை யாலும்
மருவிய மேடு தாழ்வின் மனமற வுறங்கை யாலும்
பெருகவுண் டோடி னாலும் பெருத்திடும் வயிற்றி னோயே 5

செரித்திடப் பொறுத்த லின்றித் தின்றிடு பேதத் தாலும்
உரைத்திடு நெய்யை நன்றா யுருக்கியே கொளாமை யாலும்
அரித்திடுங் கிருமி யாலு மதிமல நிற்கை யாலும்
பெருத்திடு முதரந் தன்னிற் பேசுநோய் வளருங் காணே 6

பசித்தபோ தருந்தா தாலும் பசியிலா தருந்த லாலும்
நசித்திடு வெறிநீ ராலு நாரியர் வருத்தத் தாலும்
இசைத்திடு வாத பித்த சேற்பன மிவைமுன் றெல்லை
திசைப்படு தொந்தத் தாலுஞ் சேர்ந்திடும் வயிற்றி னோயே 7

உண்டுட னடவா தாலு முடனோடி நடக்கை யாலும்
அண்டிடுந் தண்ணீர் தன்னை யடுத்தடுத் தருந்த லாலும்
பண்டுள போச னத்திற் பழமலஞ் சிக்கை யாலும்
கொண்டிடு முதரந் தன்னிற் கூடுமே பலவா நோய்கள் 8

தும்பி தேரை யிடுநீராற் றேஷங் கொண்ட சுணைநீராற்
கம்பிலுவமியானெல்லுமியாற்கறிமுள்ளெலும்பாற்கரைசோற்றால்
அம்பார் கடையா ருகிர்தன்னா லாறுஞ் சோற்றா லரைப்பசியால்
வழ்பார் முலையா ரிடுமருந்தால் வருமே யுதரந் தனினோய்கள்

மனமற வுண்கை யாலு மகிழுமூண் குறைத லாலும்
கனமலஞ் செறிந்து நின்று கழலுத லிலாமை யாலும்

தனமிகக் கெடுகை யாலுந் தானுறு மோகத் தாலும்
சினமிக வுறுத லாலுஞ் சேருமே வயிற்றி னோய்கள் 10

இப்படி யுதர ரோக மெய்துநூற் றெட்டு மிங்ஙன்
மெய்ப்படு மேதுத் தம்மான் மேவியே தோன்று மென்று
செப்பினன் முனிவ னம்மா சேருநோய் குறிகு ணங்கள்
முற்படத் தெரிந்து கொண்டு முறைப்படி சிகிச்சை செய்யே 11

சொல்லிய வுதரந் தன்னிற் றோன்றிடும் வியாதி பேரும்
எல்லைசேர் குணம சாத்தியஞ் சாத்திய மிசைம ருந்தும்
அல்லியங் கோதை நல்லா ‡ யறிவொடிவ் வாறுந் தானே
வல்லவ ருரைத்து வைத்தார் வாகட நூலோ ருக்கே 12

உதரரோகம் 108 ன் வகை

அனிலத்தால் வந்த நோய்க ளவையைம்ப தாகு மென்பர்
தனிவரு பித்தந் தன்னாற் சாருநோய் முப்ப தாகும்
துனிதரு கபங்க டம்மாற் றோன்றுநோ யிருபத் தெட்டாம்
எனவரு முறைக ளாய்ந்தே யியம்பினன் முனிவ னம்மா 13

பாடபேதம்

அனிலத்தால் வந்த நோய்க ளறியைம்பத் தாற தென்று
தனிவரு பித்தந் தன்னாற் சாருநோய் முப்ப தாகும்
துனிதரு கபங்க டம்மாற் சொல்லிரு பத்தி ரண்டாம்
எனவரு முறைக ளாய்ந்தே யியம்பினன் முனிவ னம்மா 14

வாதத்தால் தோன்றுவன

குடற்கழலை யண்டவிர்த்தி குலைந்த பக்கசூலமும்
அடலெழுந்த குன்மமோ டழுந்துநாபி சூலமும்
உடல்முடங்கு வாதமு மூதியேறு சூலமும்
அடலெழுந்த பிலிகையும் மதிப்படுங் கவுசியே 15

---

‡ அறிவு—இரட்சை—சடுகல்

உதரரோகநிதானம் எழுதிய பிரதிகள் 10 வரையிலிருக்கின்றன. இருந்தும், அவற்றைக்கொண்டு பெயர் முதலியவற்றை நன்கு தெரிந்துகொள்ள முடியவில்லை. பிரதிகளுட் பெரும்பாலன மிகப் பழைமைவாய்ந்தன. ஏனையவும் பலவேறுபாடுகளோடு காணப்படுகின்றன. இச்செய்யுளின் முதற்பகுதி, குடல்கவர்கண்டவிர்த்தி, என்றும், குடல்கவரண்டவிர்த்தி என்றும், குடற்கழலையண்டவிர்த்தி என்றும், குடற்கழலைகண்டவிர்த்தி என்றும், குடல்கவராணிவிர்த்தி என்றும், குடல்கவராவிர்த்தி என்றும், பலவாறு காணப்படுகின்றது. இப்படியே பிறவும். பாடபேதங்கள் எல்லாம் காட்டலுறின் மிகவிரியுமென்றஞ்சி ஒருபிரதியிற் கண்டவாறே சிற்சில பாடபேதங்களோடுமட்டும் பதிப்பிக்கப்படுகின்றது. அன்பர்கள் யாரேனும் இந்நிதானம் முழுவதிலும் கிடைத்தமட்டில் சரியானபாடம்குறித்தனுப்பிவைப்பின் அவர்களது பெயரோடு உடனே அச்சிட்டு இதிற் சேர்த்துக்கொள்ளப்படும்.

வெய்யபாவை யட்டலிகை வீங்குதர சூலமும்
துய்யா வாதக் கிராணியுந் தொடர்சலக் கூர்மமும்
பையவிற் பழுங்கியும் பரந்த வாத சூலமும்
கொய்குசப் புரோணியுங் கோளுறுப்ப சூலமே 16

கற்பழுவு கண்டியுங் கடைக்குட ல்டசியும்
மெத்தறற் புணைச்சலும் மேவுசந்து குத்தியும்
சொற்புணைப் பிரவாசியுஞ் சொல்லுமங்க சூலியும்
அற்பழுக்கு ளடசியும் மடிப்பழுச் சொருகியே 17

கடியவாத ரோகியுங் கனத்தகல் லறைப்பனும்
அடிவயிற்றி லடசியும் மங்கமேரு சூலையும்
வடிவகன்ற நாபிக்கீழ் வல்லுயிரை வாங்கியும்
கொடியமெய்ப்ர கண்டியுங் கோபசிங்க சூலையே 18

உற்றடி முதுகினி லுளோந்த சூலமும்
பெற்றதன் மேலினிற் பிரண்ட கேசியும்

மற்றதன் னடியிலே மரண மன்னியும்
சற்றதன் மேலினிற் சதுரசூல காலியே 19

அதிலுற மேலெழு மத்தி சூலமும்
பதியுறு செறுவினிற் பன்னுவ கேசியும்
கதுவுமுன் ளெலும்பினிற் கனத்த காலியும்
முதிரிட வயிற்றினின் முழங்கு சூலையே 20

பாடபேதம்

அதிரமேலுங் கீழுமா யழற்றுமத்தி சூலமும்
பதியதாக வேகுடற் பன்னுகேசி யானதும்
கதுவுமுள் ளெலும்பினிற் கனத்தெழுந்த காலியும்
முதுவடி யுறழுநால் விரலிற் கொள்ளுமே 21

கையடி நால்விரற்கீழ்க் கருவழி கேசியுமடர்ந்திடும்
மெய்யுறப் புறத்துமே லங்கிதாவி யுளைந்திடும்
துய்யமதி கெடக்குளிர் சோர மயக்கி வலித்திடும்
மையமார் பிணில்நடு முனைசோர வலிக்குமே 22

பாடபேதம்

கையடியி னால்விரல் கருவடர் கேசி யடர்த்திடும்
மெய்யநாடி பரந்துற மீதுற வங்கியா யுளைந்திடும்
குய்யநாடி மத்தியங் கூடியே சோர வலித்திடும்
மையமாக மார்பினி லுறவ லித்துக் குத்துமே 23

இடப்புறத்தி லேறிடு மிழுத்திறங்கும் வாயுவும்
படப்படக் கொதித்திடும் பக்கமா மெகுத்துவம்
சுடப்பிரண்டு சிவணைத் தொட்டிழுக்கும் பீலிகை
அடர்ப்படுங் குடகி ரியாமழற்று வாயுவும் 24

குண்டலத்தின் வாயுவோடு கூடுகின்ற வாயுவும்
மண்டையேறு கெண்டையின் வலியதான வாயுவும்

கொண்டவா மயக்குடன் குடல்வரண்ட வாயுவும்
மன்றிலாடு நாதன்முன் வகுத்துரைத்த நோய்களே 25

எதிர்மூல சூலம்

ஆணவ னடியை யுற்றே யழன்றுகீழ் முதுகைப் பற்றிப்
பாண்கடைக் குடலைச் சுற்றிப் பரவியே வலிக்கும் போது
நாண்படு நாபி தன்னை நடுவுறச் சுழித்து வாங்கில்
எண்படு மதனை நீயு மெதிர்மூல சூல மென்னே 26

கோப சூலம்

நாவிக்கீ ழிரண்டு பக்க நடுப்பெற வழன்று பற்றிச்
சோகமே மிகவுண் டாகிச் சோர்ந்திட வலித்துப் பின்னைத்
தாவியிப் படிய தாகிற் றன்கோப சூல மென்று
கோபமே யாற லுற்ற குறுமுனி யருளிச் செய்தான் 27

கேசி ஆமசூலம்-வத்திரகேசி

தானதே யுதர மெல்லாந் தயங்கவே வலிக்கு மாகில்
ஆனதே கேசியாம சூல மென் றறிந்து கொள்ளும்
ஊனுறு முதரத் தோடு முளைந்திடு நாபி கொண்டு
வானுற வலித்து விம்மில் வத்திர கேசி யென்னே 28

பேய்ச்சூரை கிருமி

நாபியைச் சூழச் சுற்றி நடுவுற வலிக்கு மாகில்
கோபிபேய்ச் சூரை யென்று குடசமா முனியுங் கண்டான்
லோபமே யுடம்பு நைய வுடலது புரள வோங்கித்
தாபமே கொண்டு நோகிற் றனது கிருமி யென்னே 29

§நாடி சூலம்

அண்ட மூல நடுவுற வசைவு கூட வலித்திடில்
பண்டு §நாடி சூலமென் பதுவிளங்கு நீயுமே
கண்ட வைம்பத் தாறுடன் கலந்த வைம்ப தாமிவை
கொண்டெ ழுந்த நோயெலாங் கொடிய வாத ரோகமே 30

---

§ நாடி சூலம்—நாவிசூலமென்றும்

பழுவிழுங்கி

அண்டத்தி னடுவுண் மேலா யசைந்துற வலிந்து விம்மிற்
பண்டைய தாமிந் நோயைப் பழுவிழுங் கியதா மென்பர்
கன்றிட வீங்க மாகிக் கடுஞ்சலஞ் சீயாய் வீழிற்
கொண்டெழு வியாதி வாத ரோகமாக் கூறி னாரே 31

ஆமசூலம்

நாபியைச் சூழ்ந்து ளைந்து நடுவுந்தி புண்ணை போலச்
சோபமே மிகவுண் டாகிச் சோர்ந்திட வேவ லிக்கும்
கோபமாய்ப் புளித்தேக் கிட்டுக் குடல்புரிந் திடவே நோகும்
தாபமாய் வரண்டு முற்றிற் சாற்றுவ ராம சூலம் 32

ஆமசூலத்திற்கு
சிகிச்சை

இக்குணங் கண்டாற் றீர்தற் கியம்பிய மருந்து கேண்மின்
சுக்கொடு மரிசு நீரிற் ¶சுடவிரண் டொன்றாய்க் காய்ச்சி
ஒக்கவே தெளித்துக் கொள்ள வுறுமாம சூலை தீரும்
மிக்கிள முருக்கின் பன்னை மேவுப்புங் கூட்டிக் காய்ச்சே 33

இப்படிச் செய்ய மாறு மில்லாதே லிந்து காயம்
வெப்பறு கழற்சிச் சாற்றில் விரவியே குடிக்கத் தீரும்
மெய்ப்புற மாறு தாகின் மிகுமுரா விச்சா றுப்பும்
தப்பறக் காய்ச்சி யுண்ணத் தணிந்திடு மாம சூலை 34

உடம்புற வுழற்றிப் பின்னை யுறுகெண்டை தானு மேறிக்
குடைந்துற வெதுத்து மாகிக் குமட்டியே வயிறுங் காலும்
தடம்படு முடல மெல்லாந் தானுறு கொடிபிடித்துக்
கடந்தனிற் காடி காய்ச்சிக் காலுறக் கழுவு மென்னே 35

உற்றவப் பாதந் தன்னை யுறமிகக் கழுவி மாற்ற
மற்றுமவ் வுதரந் தானு மறுகவே யுளைந்து நோகில்

¶சுட—வறுத்து

முற்றுநற் காடி தன்னை முறுகவே காய்ச்சி நீற்றிற்
பற்றுறப் பிசைந்து கூட்டிப் பழுப்பெருக் கலையான் மூடே 36

பழுப்பெருக் கலையின் மேலே பையவே சீலை மூடி
அடுப்பதில் வைத்து நன்று யறவுமே வேது காட்டி
எடுத்ததை பொலங்க ரைத்தே யியல்புடன் சேர்த்து நீயும்
கொடுத்திட வாம சூலங் கும்பிட்டே யோடுங் காணே 37

உற்றொரு சட்டி தன்னி லுப்புழக் கிட்டெ ரித்து
மற்றதைக் கொட்டிப் போட்டு மறித்துழக் கரிசி யிட்டுப்
பற்றுற வரிசி நீந்தாற் பகருரி நீரை விட்டுச்
சற்றுற வடித்து நீரைத் தானுணப் பாகமாமே 38

தானதி தாக மாகித் தாழ்ந்துஞ்க வரண்டு நாவும்
ஊனைவிட் டுயிர்போம் போல வுழத்திய தெண்டை யேதில்
ஆனவப் பாகந் தன்னிற் றூழ்வரை யதனிற் சுட்டால்
மேனிதா னுழறறி யாறி மீண்டதி பாக மாமே 39

இப்படித் தெகிக்கும் போதே யியல்புடன் சுட்ட ழற்றி
ஒப்புறக் காலிட் டொற்ற வுளைவெலாந் தீரு மென்று
செப்பினர் முன்னோ ரித்தாற் றீர்ந்திடா திருக்குமாயின்
மெய்ப்படி கண்ட சூலம் மீள்வது மில்லைக் காணே 40

உற்றுளே யிரைந்த சீத முறச்சிவந் துளைந்தி ருக்கில்
மற்றச மோதஞ் சுக்கு வறுத்துமோர் விட்ட ரைத்துப்
பற்றுறக் கரைத்து மோரிற் பருகிட மாறு மின்னும்
சொற்றிடு மரிசி தன்னை வறுத்துடன் குழையப் பொங்கி 41

எடுத்ததைப் பிசைந்து மோர்விட் டியம்பிய பொடியுங் கூட்டிக்
குடித்திட மாறு மல்லாற் கூறுமுக் கடுகோ டோமம்
அடுத்திடு மிருசீ ரிந்துப் பவைசமன் பொடித்து மோரிற்
குடிப்பினும் வெல்லப் பாகிற் கொட்டியே கிளறிப் பாகாய் 42

செய்துபாக் களவ தாகத் தின்னினுங் குடிநீ ராகச்
செய்துதா னுவி னெய்யுஞ் சேர்த்தருந் திடினு மாறும்
எய்துமோர் சுக்குக் காடி யிசையவே காய வைத்து
மைதிகழ் கண்ணாய் கொள்ள மாறிடு மாம சூலம் 43

குடகரி

கடைக்குடன் முதுகந் தண்டு கலந்துகை யடியிற் குத்தி
மிடைப்பட வலித்துப் பின்னை மிகவடி வயிற்றி னின்றே
புடைத்துற வெரித்த முன்று புரண்டுடன் மறுகி நோகும்
இடப்புறந் தன்னி னிற்கு மிதுகுட கரியென் றோதே 44

சிகிச்சை

குடகரி தனக்கு நன்றாய்க் கூறுவன் கிரியை தன்னை
உடல்விலா முதுகு நெஞ்சி னுறைத்திட வெண்ணெய் நெய்யும்
கடமதிற் காய வைத்துக் கலந்துற வொற்றி மாற்றிச்
சுடமிகக் கொள்ளுஞ் சாற்றிற் சொற்*குளங் கூட்டிக் கொள்ளே

உற்றுற வலித்துப் பின்னை யோடியே யெரிக்கு மாகிற்
சொற்பெறு மெண்ணெ யிங்கு சுகத்துட னுகர மாறும்
பற்றுற வலித்துப் பின்னைப் பரந்தடி வயிற்றெ ரித்தாற்
சர்க்கரை யிந்து தேனிற் றானுறக் குடிக்க நன்றாம் 46

உதரமும் விம்மி விம்மி யுரமுற வலிக்கு மாகிற்
பதறவே வேண்டா நீயும் பகர்ந்ததோ ரெண்ணெய் தன்னாற்
சிதறவே யொழுக்கி யொற்றிச் செயபுள வுள்ளி யிந்து
விதமுள சுக்கு நீரும் விரும்பியே கூட்டி யுண்ணே 47

இந்துவு நெய்யுங் காய்ந்தங் கியல்புடன் குடிக்கி லேகும்
இத்துவுஞ் சுக்கு நீருங் கடுகுடன் குடிக்கி லேகும்

*குளம்—வெல்லம்

இந்துவு முள்ளி கொற்று னிசைவுடன் குடிக்கி லேகும்
இந்துவும் பாலுங் கொள்ளி விக்குட கரிபோங் காணே 48

குடிநீர்

முருங்கை ‡வன்னி யுள்ளியு முரண்ட வேலி சாரணை
பெருங்கொ முஞ்சி சுக்குடன் பரித்திரண்டு நாழி நீர்
வருந்திபிங் குழக்கதாய வயந்தகால மிங்கினில்
விரும்பியுட் குடித்திடில் விடுங்குட கரியதே 49

எண்ணெய்

கொடிக்கழற் பருப்பொடுள்ளி கொடியவித்து காயமும்
வடித்தெரண்ட வெண்ணெய்சுக்கு வாளநன் மரிசமும்
பொடித்தரைத் தெடுத்துமே புகழ்ந்துநீ குடித்திடில்
வெடிப்பரந்த சூரைகுன்மம் விடுங்குட கரியுமே 50

ஆமணக் கெண்ணெ யிந்துப் பளாவியே குடிக்கி லேகும்
ஆமணக் கெண்ணெய் பாலோ டளாவவு மகன்று போகும்
ஆமணக் கெண்ணெய் கொற்றான் சாறருந் திடவு மாகும்
ஆமணக் கெண்ணெய் வேர்க்கொம் பவித்தநீ ரதுவு மாமே 51

அங்கவை தம்மி னாலே யக்குட கரிபோ காதேல்
துங்கநல் லெண்ணெய் நெய்யாற் றுவளவே யொழுக்கி யொற்றி
இங்கிவை தம்மி லேற்க விலவண வத்தி கட்டில்
சங்கைய தின்றி மாறு மென்றனன் தமிழ்வல் லோனே 52

கழற்சிமாத்திரை

கழற்பருப்பு வெள்ளுள்ளி கடியகாய மிந்துடன்
பழுத்தசுக்கு நாகணத்தி னோடுபாத ரசமும்
பழக்கமுற்ற படியரைத்து முத்துவளாவி யுண்டிடில்
அழுத்திநின்ற குடகரியி னோடுசூலை யகலுமே 54

---

‡ வன்னி — கொடுவேலி

குடல்வாதம் கழல்வலிக்கு

சிகிச்சை

புகை

வியனுறு கழல்சு ருங்கி மெத்தவே வலிக்கு மாகில்
நயமுறு மெண்ணெய் நெய்யால் நாடியே யொழுக்கி யொற்றி
மயமுறு முள்ளி மஞ்சள் மகிழ்விதை நிம்ப வித்துத்
துயரறப் பொடிய தாக்கித் தூவியே புகைப்ப தென்னே 54

இதமுறு குந்து ருக்க மியல்புடன் கூட்டிக் கொண்டு
மதமுறப் புகைகள் காட்டி மருவிய கிரியை சொல்வன்
விதமுறு கொற்றா னுள்ளி வியன்கழ லிலையுங் கூட்டிக்
கதமற விடித்தே யொற்றிக் கட்டிடின் மாறு மன்றே 55

எண்ணெய்

உத்தமா காணிச் சாற்றி லோர்கழ லுள்ளி சுக்கு
நெய்த்திடு சயிந்த மிங்கு நேர்பட வரைத்துக் கொண்டே
ஒத்தவே ரண்ட நெய்யி லுண்டபி னண்டத் தொற்றக்
கத்திடும் வலியுஞ் சூலங் கனங்குறைந் தேகுங் காணே 56

சுரசம்

கொத்தான் ற னிலையிற் சாற்றிற் கொடிக்கழற் பருப்போ டுள்ளி
உத்தமா காணி நொச்சி யுடன்சாறு கூட்டிக் காய்ச்சி
மெத்தன வோர்சி றங்கை விதிப்படி தேன்விட் டுண்ணக்
கத்திய சூலை குன்மங் குடகரி கடிதிற் போமே 57

கட்டுமருந்து

புங்குசங் குப்பி நிம்பமுங் கொற்றான்
புனலிக ளுடன்கிலு கிலுப்பை
அங்கையிற் பிறங்கை தன்னிலு நாறி
யிலையடம் புள்ளிமால் வசம்பு
இங்கிவை யெல்லா மிடித்தபி னீர
மறவறுத் தொற்றியே கட்டிக்

பொங்கிய கழலில் வலிகளும் விட்டுப்
பொருமலும் போமெனப் புகன்றார் 58

முற்றியே புதரந் தன்னின் மோதிய வலிவி யாதி
பற்றற மாறு தாகிற் பகருவன் கிரியை யொன்று
சித்தியா நிம்பே ரண்டந் திலமெண்ணெய் சமன தாக
ஒத்தியே சூடு காட்டி யுறத்தேய்த்து ரட்சை செய்யே 59

இரட்சை

உற்றாக வனுவாதி மூலந் தொடங்கி
யுறவூரு மடிகளிவை யொக்கவே யுன்னில்
பற்றாக வந்தாதி கொண்டே தெகித்துப்
பதருமல திலிரண் டங்குலத் தேறச்
செற்றாக முற்சூடு பொட்டாக வைத்துச்
சேருபஞ் சாக்கினித் தைலமது தேய்க்க
முற்றாக விட்டோடு மரியகுடல் வாத
முதிர்வாய்வு வலிகளிவை யோடியே போமே 59

கொம்மடிக் காயி னோடு குமரியாம் பயளை மூன்றும்
விம்முற வவித்து மேலே வீக்கத்தி லொற்றிக் கட்ட
அம்முதல் கரைந்து தாகி லதன்மேலே தெகிப்ப தாகும்
இம்முறைப் படியே செய்ய விறங்கிடு மண்ட வாயு 61

இயந்திரிப்பு

இப்படித் தெகிக்கும் போதே யியந்திரிப் பதனைக் கேளும்
மெய்ப்பட வாயுத் தன்னை மிகவுமுள் வாங்கிக் கொண்டு
செப்பிரு கழலை விட்டுச் சேர்ந்தசே வடியிற் கட்டி
அப்படித் தெகிப்ப தென்றே யருண்முனி யருளிச் செய்தான்

இன்னமு மிதற்குச் சொல்வ னியலிரு பாத நீட்டி
மன்னிய கரமு நீட்டி மல்லாந்து படுத்துக் கொண்டே
உன்னியுள் மாருத் தன்னை யுற்றண்டஞ் சுருங்க வாங்கிப்
பின்னிரு கழலை விட்டுப் பிடித்துறத் தெகிப்ப தாமே 63

இரத்தம் குத்திவாங்க

அரியயன் றேடிக் காணு வமலன்ற னருளை யுன்னித்
திரமுள வண்டந் தன்னிற் சேர்வுற வடியிற் கட்டிப்
பிரமெழு கனத்த நாடி யிதின்முளைப் பிரிவை யூன்றத்
தரமுற வேபு டைக்குந் தன்னிலே குத்து வாயே 64

குத்திய வாயி னாலே கொள்ளுஞ்செந் நீரை விட்டால்
இத்தினை மாற்றிப் பின்னை யிசைந்தவப் புண்ணின் மேலே
ஒத்துற வசம்பு நாக முறவரை யிச்சஞ் சாற்றில்
வைத்துற விட்ட போதே வன்றன மழிந்து போமே 65

கட்டுமருந்து

உற்றிது செய்த பின்னை யுன்னுசன் மலியின் றோலைப்
பற்றுபஞ் சதுபோற் குத்திப் பையவே வதுத்துக் கட்டி
மற்றதிற் றேனு ரித்து மகிழவே கட்டிப் பின்னை
ஒத்திடு கிலுகி லுப்பை யுறவிடித் ததிலே கட்டே 66

நீருறு முள்ளி கொற்ற னீள்சிந்தில் கிலுகி லுப்பை
சீருறச் சுட்டுச் சாம்பல் சேர்த்ததின் மேலே கட்டிற்
காருறு குழலி னாளை கனங்குறைந் தேகிப் பின்னை
வாரிபற் றற்றுச் செல்லும் வகையிது கண்டி டாயே 67

குடிநீர்

கனலியே குறிஞ்சா கந்தான் கான்றைசா ரணையின் வேரும்
புனமுருங் கையுங்கொற் றானும் புங்குசங் குப்பி யோடு
வனமிரண் டுழக்காய்க் காய்ச்சி வற்றிட வண்டந் தன்னில்
அனலுறு வலிகள் நீக்க மடசுத லகலுந் தானே 68

காந்தக்குளிகை

காந்தமோ டுள்ளி யிந்து கழல்மணி சுக்குக் காயம்
ஏய்ந்தநேர் வாள வீச மேரண்டத் தயிலம் விட்டுச்
சாந்தெழ வரைத்துப் பின்னைத் தயிலத்தி லேகளைந்து
மாந்தவே விருத்தி குன்மம் வாய்வண்ட சூலை போமே 69

அரிதாரக்குளிகை

முக்கடு பலையே பாள முந்துகெந் தாரங் காயம்
நச்சினங் காரஞ் சூத நல்லிந்து சமன தாக
வைச்சரை கரிப்பான் சாற்றில் வருந்தன்றி போலுருட்டி
முற்பட றாகிலன்றே முறிந்திடுங் குன்மஞ் சூலை 70

எருத்து

உற்றுறு முலையின் கீழே யுன்னியங் குலநால் விட்டு
மற்றொரு பழுவு டாகி மயங்கிடக் குத்தி விம்மிக்
பற்றுற வலித்துப் பின்னைப் பையவூண் கெடுத்துச் சேரில்
முற்றுமே பித்தனை நீயு மூன்றெருத் தென்று கூறே 71

இப்படி மூன்றெற குத்து மிருபழுச் சொருகு மாயின்
மெய்ப்படு பெலனுங் குன்றி மேனியு மெலிவு காட்டும்
மைப்படு குடலைக் கவ்வி மரணமே யாகச் செய்யும்
தப்பற மருந்து செய்யச் சாற்றினர் முனிவர் தாமே 72

எருத்துக்குக் கிரியை
இரத்தம்குத்திவாங்க

இங்கெருத் தினுக்குச் செய்யு மியையுள கிரியை யெல்லாம்
கந்தமா முனிவ னந்நாட் கழறினன் றமிழி னாலே
நொந்திடக் கனத்துத் தன்னில் நகையவே வெண்ணெய் நெய்யால்
சிந்திட வொழுக்கி யொற்றிச் சிதறவே பிசைந்தி டாயே 73

சிதறவே பிசைந்த பின்னைச் சேர்ந்தகல் லால முத்தி
அதிரவே யுருவிக் கொம்பா லமரவாய் தன்னி லொற்றிப்
பதிவிடங் காந்து கொண்டு பையவே நரம்பு தன்னில்
முதிரவே யுந்தி தன்னின் மூண்டுசீ லையினாற் கட்டே 74

கட்டிய பின்பு தானுங் கலந்தெருத் ததனி லெண்ணெய்
விட்டுறத் தேய்த்துக் கொண்டு விரகினால் வாள வொற்றி

முட்டவே யியந்தி ரித்து முன்னிய நாடி பார்த்து
மட்டுறக் குத்தப் பாடும் பயிலெகுத் தற்றுப் போமே 75

இன்னு மிவையான் மாறாதே லெகுத்து மிகவுங் கோபித்துத்
துன்னு முடலி லேமிருந்து துயரந் தன்னை யுண்டாக்கும்
முன்னு பெருத்து வாயுவதின் முதிரு மவத்தை தனையறிந்து
பின்னுங் கிரியை செய்திடுகிற் பிரிந்தே போகும் பெண்மயிலே

பின்னுஞ்சிரைவிட

சூத்திர மாக வேதான் சொல்லுவன் கிரியை தன்னைப்
பாத்தவந் நரம்பைக் கண்டு பழுவினிற் பித்திற் குத்திச்
சேர்த்திடு முதிரந் தோடு செந்நீரும் பாய வாங்கி
மாற்றிட வெருத்துத் தீரும் வல்லப மாகச் செய்வாய் 77

கொம்பு வைக்க

இந்தநற் கிரியை செய்தா வியன்புடன் மாறா தாகிற்
கொந்தியே வற்கம் பூட்டிக் குவிந்திடக் கொம்பை விட்டுச்
சிந்தநேர் விரிகை கொண்டு சிக்கென மூண்டு குத்தி
முந்தவே கொம்பு தன்னால் முறியசெந் நீரை வாங்கே 78

மூண்டிடு முதிரம் வாங்கி முதுமஞ்ச ளோரண் டெண்ணெய்
ஈண்டவே விட்டுப் பின்னை யிசையவே கொம்பை விட்டு
வேண்டவே குறைந் தெருத்து விரையவிட் டேகு மென்று
பூண்டமா தவத்தை யாற்றும் பொதியமா முனிசொன் னாரே

இப்படிக் கொம்பை வைத்தே யிடுசவர்க் காரமிங்கு
மெய்ப்படு கோடைக் காந்தம் வெதுப்பிமேற் கட்டி வைத்தே
அப்படி மூன்று நாளு மடுத்திடு கிரியை செய்க
தப்பிடா திந்த வண்ணந் தான்செய்து பின்னைக் கேளே 80

கட்டுமருந்துகள்

இலைக்கள்ளி யிலைப றித்தே யிதுகழு நீரில் வெந்து
குழைத்திடப் பிசைந் தெடுத்துக் கொண்டதிற் கட்டிப் பின்பு

கழற்கொடி யிலையு முப்புங் கருதுபுன் கிலையு மின்னும்
நிலக்குமி ழிலையுங் கூட்டி நெகிழவே கட்டி டாயே 81

‡ஊற்றின்மேற் கொற்றான் றன்னை யிடித்துவா யுலரக் கட்டி
ஏற்றிடு முள்ளி மஞ்ச ளிண்டிலை யதுவுங் கூட்டி
மேற்படக் கட்டி லன்றே விட்டெகுத் தோடிப் போகும்
சாற்றிடு மிவையே யன்றித் தருமுறை யின்னுங் கேளே 82

முக்கணன் குளிகை

கள்ளியின் பால்க றந்து §கனத்ததேங் காயுள் ளிட்டே
உள்ளிவெண் கார மிந்துப் புடன்சவர்க் கார மிங்கு
தெள்ளுமக் காரவி னோடு திரிகடு பொடித்துள் ளிட்டுத்
துள்ளுகோ மயமேற் பூசி யெருவினிற் சுட்டி டாயே 83

அப்படிக் கோம யந்தீய்ந் தோடள வாக வெந்தால்
செப்பிடு தீயை மாற்றித் தேங்காயை யெடுத்துக் கொண்டு
மெய்ப்பட வரைத்து நன்றாய் வியனுற வழித்துக் கொண்டு
செப்புபா வட்டங் காய்போற் றிரட்டியே விழுங்கி டாயே 84

திரளவே விழுங்கி யிட்டாற் றீர்ந்திடும் வியாதி கேளாய்
விரகுறு மெகுத்துக் குன்மம் விலகிடாச் சூலை கட்டி
கரவுறு கெர்ப்ப வாயு கவுசிகை யாமை யாம்பல்
பெருகுட கரியே யாதி பிசகறத் தீர்ந்து போமே 85

உள்ளிக் குளிகை

கள்ளியின் கட்டை வெட்டிக் கருதுட னுள்ளே தோண்டி
உள்ளியு மிங்கு நல்ல வுப்புடன் சீனக் காரம்

---

‡சில பிரதிகளில் இச்செய்யுள்:
“தோற்றுபொற் கொன்றைப்பன்னந் தொகுத்திடித் ததிலே கட்டி” என்ற அடியுஞ்சேர்ந்து ஐந்தடிச் செய்யுளாகவுமுண்டு.

§முற்றிய தேங்காயைக் கண்திறந்து இளநீரையூற்றிவிட்டு அதனுள் கள்ளிப்பாலையும் சரக்குகளையும் இட்டடைத்துச் சாணம் பூசிச் சுடுக.

ஒள்ளிய வெண்கா ரத்தோ டொருநிறை யாகக் கொண்டு
துள்ளுகோ மயமேற் பூசி யெருவினிற் சுட்டி டாயே 86

சுட்டிடு கள்ளி தீந்தாற் சுகமதா யெடுத்துக் கொண்டே
இட்டதைக் கல்வத் தாட்டி யினியபா வட்டங் காய்போல்
மட்டுறத் தின்பீ ராகில் வல்லெருத் தாமை சூலை
தொட்டகுன் மங்கள் வாயு தோற்றிடு முண்மை யாமே 87

வெண்காரக் குளிகை

கள்ளியின் கட்டை வெட்டிக் கருதிய வுடலைத் தோண்டி
வெள்ளிய வெண்கா ரத்தில் விரசியப் பாலை வார்த்துத்
தள்ளிவா யடைத்து மேலே தயங்குகோ மயமும் பூசித்
துள்ளவே யிதனை நீயு மெருவினிற் சுட்டி டாயே 88

அந்தநற் பதம தாக வவிந்ததற் பின்னெ டுத்து
வெந்திடு வெண்கா ரத்தை விரகுறக் கல்வத் தாட்டிச்
சந்தமார் குளிகை குன்றி தன்னைப்போ லேயு ருட்டி
முந்தவே தேனிற் கொள்ள மூன்றெருத் தேகு மன்றே 89

இங்குவெண் கார முள்ளி யிந்துநேர் வாள மிஞ்சி
பொங்குநற் காந்த மோடு புதியமுக் கடுகுங் கூட்டிப்
பங்குட னோதி றுத்துப் பழுப்பெருக் கலையிற் கட்டி
அங்கதிற் சாண மப்பி யளவதாய்ப் புடத்திற் போடே 90

போடுகோ மயமுந் தீந்து புதியெருக் கிலையும் வெந்தாற்
பீடுற வேயெ டுத்துப் பேய்ச்சுரை யிலைபின் சாற்றால்
ஆடவே கல்வத் தாட்டி யரியது ளங்காய் போல
நாடியே குளிகை செய்து நன்னிழல் தன்னில் வையே 91

(பாடபேதம்)

பூசுகோ மயமுந் தீந்து புனைந் திலை யதுவும் வெந்தாற்
பேசுகைத் தகரைச் சாற்றிற் பேணியே யரைத்தே தெத்து
மாசில்*தே றதுவே போல மன்னிய குளிகை செய்து
வீசுமே ரண்ட நெய்யில் விரசியே யுண்ணு வாயே 92

வைத்தவிக் குளிகை தன்னை வளருமா நெய்யி னுண்ணா
முற்றிய வெகுத்து மூன்று மூராறு குன்மஞ் சூலை
குத்திய வாயு பீலி குடகரி வயிற்று ரோகம்
இத்தனை நோயுந் தீரு மென்றுமா முனிவர் சொன்னார் 93

இரட்சை

இப்படி யெகுத்தி னுக்கா வியம்பிய கிரியை செய்ய
மெய்ப்படி மாறா தாகின் மீண்டுமோர் கிரியை சொல்வன்
ஒப்புறக் கனத்து விம்மி யொக்கவே வலிக்கு மாகில்
செப்பிடு முதாரந் தன்னிற் றெகிப்பது பொட்டி ணலை 94

அதனினோர் முதுகு தன்னி லங்கிரு சூடு சுட்டே
இதனினல் லெண்ணெய் மஞ்ச ளொருக்கம் பால்தம்மை விட்டே
மிதமுறப் புண்ணா தாக்கி மேவியே கொதித்துப் பொங்கில்
இதமுற வோடு மென்றே யியம்பினார் முனிவ ரம்மா 95

குடிநீர்

அரமுறி சுக்கு நத்தை யானசூர் கொடுவேல் கொற்றான்
உரைகழ லுள்ளி ‡புங்கொன் றேரள வாயி டித்து
விரவிநீ ரிரண்டு நாழி வெந்துழக் காயி றுத்துப்
பருகுமே ரண்டத் தெண்ணெய் கூட்டிடப் பறக்கு மன்றே 96

புணமுறு முருங்கை வேரும் புதியமா விலங்கைத் தோலும்
இனியசா ரணையின் வேரு மிதுகழ லுள்ளி யிங்கு

---

‡பிங்கொன் என்றும். இங்கு-பெருங்காயம்

வினவியே யிடித்துக் காய்ச்சி வியன்பெறக் குடிப்பீ ராகில்
மனமுறச் சூலை குன்ம மாறிடு மெருத்துந் தானே 97

பெருகிய வெகுத்தி னுக்குப் பேணியிங் குரைத்த வண்ணம்
மருவிய பதாமு கற்கு மன்னியிப் படிச்செய் யென்று
கிரணவெண் மதியின் கீறல் கிளர்சடை வைத்த வெம்மான்
அருளிய வண்ணந் தேர்ந்தே யகத்தியன் புவியிற் சொன்னான்

உத்தம மாகச் சொன்ன வுறுபல கிரியைக் கெல்லாம்
சத்தியந் தீர்ந்து போகுந் தவறியே தீரா தாயின்
பத்திய தொந்த மென்று பலதான தருமஞ் செய்து
சித்தியாற் சிவனை வேண்டத் தீர்ந்திடு மறிந்தி டாயே 99

இன்புறு முதரந் தன்னி லெழுகின்ற ரோக மெல்லாம்
துன்பமாய்த் துயர்வி ளைக்குஞ் சோரவே யுயிரை வாங்கும்
மின்பயி லெருத்துப் போல மிகக்கொடி தான தில்லை
என்பது முன்னு ளீச னகத்தியற் கியம்பி னானே 100

*கோபிச்சூரை

நாபியைச் சூழச் சுற்றி நடுவுற வலிக்கு மாகிற்
*கோபியாஞ் சூரை யென்று குடசமா முனியுங் கண்டான்
தாவியே யிதற்கு நீயுந் தான்மறை மந்தி ரத்தால்
ஓதியே பார்க்க மீளு மூனது கண்டி டாயே 101

†இந்தமந் திரத்தி னாலே யியல்புற மாறா தாயிற்
சிந்துசா ரடையின் வேருஞ் சிறுகுறுந் தொட்டி வேரும்
கொந்துசே ருள்ளி யிங்கு குணமுடன் காயங் கூட்டி
இந்துநேர் மணக்கி னெண்ணெ யியல்புடன் கூட்டிக் கொள்ளே

(பாடபேதம்)

†இந்தமந் திரத்தி னாலே யியல்புற மாறா தாகிற்
சிந்துசா ரணையின் வேருஞ் சிறுகுறுந் தொட்டி வேரும்

---

*பேய்ச்சூரை—என்றும். †இந்தமந்திரத்தை இங்கு சேராதுநீக்கினோம் குருமுன்னிலையிலறிக.

கொந்துகொள் ளுள்ளி யிங்கு குடிநீரா யவித்துக் கொண்டு
தந்தவே ரண்ட வெண்ணெய் சமன்கூட்டிக் குடிக்க நன்றே

நாபிமே லங்கு லத்தே நடுமிக வேபு டைத்துத்
தாவியே மூலத் தோடு தான்குத்தி மேன்மூச் சானல்
நீவியே புதுநல் லெண்ணெய் நெய்யிலு னெகிழ வொற்றிக்
கோபியாங் குன்மம் போகக் கொட்சாறு குளமுங் கூட்டே 104

உள்ளியாமணக்கெண்ணெய்

கொ[illegible]சாறு மிளகு சுக்குக் கொள்ளிங்கு வெள்ளை யுள்ளி
மட்டாயிந் தோரண் டெண்ணெய் வடித்துடன் குடித்த போது
கட்டின மலங்க ழிந்து கனசூல மெகுத்துக் குன்மம்
விட்டேகும் வயிற்று ரோக விதமென விளம்பி னாரே 105

தேங்காயெண்ணெய்

தேங்காயிரண்டுதனைத்துருவித்தெளிவாய்த்தன்பாலாவெடுத்துப்
பாங்காம் பிரமிச் சாறுள்ளி பரிவி னுடனே சமன்கூட்டி
நீங்கா தடுப்பி லேகாய்ச்சி நெய்தான் பிறந்த போதிதனை
வாங்கா யளவாய்க் குடித்திடுகின் மாறுஞ் சூலை வலியதுமே

அப்புறு தேங்காய்ப் பாலை யளவதாய்ப் பிழிந்து கொண்டு
நெய்ப்பெழக் காய வைத்து நிகழவே மரிசந் தன்னை
ஒப்புறப் பொடிய தாக்கி யுற்றதன் மேலே தூவி
மெய்ப்புறக் குடிக்கிற் குன்ம மிகுமலங் கழியுங் காணே 107

குளிகை

அம்முறு தேங்காய் தன்னி லமரநேர் வாள மிட்டு
மும்மைசேர் கடுக மூன்று முப்பலை தானுங் கூட்டிச்
செம்மிச்சுட் டாவின் பாலாற் செறியவே காய்ச்சிக் கொண்டு
இம்மருந் ததனை வாங்கி யிசையவே யரைக்கும் போது 108

இந்துசா திலிங்கங் கூட்டி யேகமா யரைத்துப் பின்னை
வந்தகுன் றியின்வித் தைப்போல் வளமாக வுண்டை பண்ணிச்
சொந்தமா மதுவி னுண்ணச் சூலைபவ் வெருத்துக் குன்மம்
நொந்திடு முதரக் கன்னிற் குடகரி வாயுப் போமே 109

வெந்தவத் தேங்காய் தன்னை வேறுவே றாகக் கீறி
முந்தநற் §குளிகை கூட்டி முறித்துமே கடித்துத் தின்றால்
உந்தியிற் கிருமி குன்ம முடன்வெப்புப் பாவை சூரை
சிந்திடு முதர சூலை செறிமலர்க் குழல ணங்கே 110

பாற்குடிநீர்

கொற்றா னிலைகற் றாழைமடல் கொடியின் கழற்சி யிலையுடனே
சிற்றா மணக்கினிலைகுறிஞ்சி சேரு முள்ளி யிலையொன் றாய்க்
கற்றா வின்பால் நாழிவிட்டுக் காய்ச்சி யுழக்கா யேவடித்துப்
பற்றா ரிந்து வுடனருந்தப் பறக்குஞ் சூரை குன்மமுமே 111

முற்றுமாண் பனையின் பாளை முறுகச்சுட் டெடுத்த சாம்பர்
அத்துடன் றேங்காய்ப் பாலு மதிற்குளங் கூட்டி யேழ்நாள்
திற்றிடச் சூலை குன்மஞ் சேர்ந்திடு மூல ரோகம்
சற்றுநில் லாது தீருஞ் சாற்றினார் முனிவர் தாமே 112

காயம்

பிரமியின் சாற்றி னோடு பேசுபொற் கொன்றைச் சாறு
உரமிகு தைவே ளைச்சா றொருசம னாக விட்டு
மருவுபேர் காய முள்ளி யிந்துப்பு மதிற்க லைத்து
விரவிய வேரண் டெண்ணெய் விட்டுறக் காய்ச்சி யுண்ணே 113

உண்ணவே குன்மஞ் சூலை புடனாறு மெருத்து மூன்றும்
நண்ணுறு கெர்ப்ப ரோக நாபியின் வலியண் டத்திற்
கண்ணிய வாயு சூலை கனத்திடு ரோக மெல்லாம்
விண்ணிலே யோடிப் போகு மெனமுனி விளம்பி னாரே 114

---

§குளமுங்கூட்டியென்றும் பாடம் குளம்—பனைவெல்லம்

காந்தக் குளிகை

காந்த மிரச மரிதாரங் கழல்முக் கடுகு திரிபலையும்
ஏய்ந்த வாள மிந்துப்பு மிசையும் விடமு மிடங்கணும்
வாய்ந்த சீனக் காரமுடன் மதித்த நீலிச் சாற்றிலரைத்
தேய்ந்த குளிகைதூ தளவா யிசைய வுருட்டி நிழலு லர்த்தே

இப்படிச் சமைத்த நல்ல லேகாந்தக் குளிகை தன்னை
மைப்பட வெண்ணெய் தன்னின் மத்தித்து நுகர்ந்த போது
மெய்ப்படு சூலை குன்மம் வியன்குட கரியெ குத்து
மைப்பட நில்லா தோடு மயிலியன் மடமின் னாளே. 116

எண்ணெய்

உள்ளிச்சா றரியி னோடே யுறுமோரண் டெண்ணெய் நாழி
கள்ளிப்பா லுழக்கு மல்லாற் *கடுதிரி யோரு ழக்கு
¶வெள்ளையிந் துப்புப் பத்து விராகனு யரைத்துள் ளிட்டுப்
§பிள்ளைக்கற் றாழைச் சாறு பேணியே விட்டுக் காய்ச்சே 117

உற்றநற் பதத்தைப் பார்த்தே யுறுதிய தாய்வ டித்து
வெற்றிவே லவனைப் போற்றி மிகாமலோர் கரண்டி யுண்ணப்
பற்றிய குன்மஞ் சூலை பரவுத ரத்து ரோகம்
முற்றுமே தீர்ந்து போகு மொழியுரை பொய்த்தி டாதே 118

பித்தசூரை

உந்தியை யெரித்த முற்றி யுளைந்துடல் மறுகி நொந்து
சிந்திட வாய்நீ ரூறித் தேகமு நெஞ்செரித்து
முந்திய அழற்ற லுண்டாய் வயிறுகால் முகத்தி னோவாய்
இந்தமா குணங்கள் கண்டா லிதுபித்த சூரை யென்னே 119

---

*கடுப்பொடி என்றும். கடுப்பொடி—கடுக்காய்ப்பொடி.
¶வெள்ளையிந்துப்புப்பத்து மிராவிடமைங்கழஞ்சு என்றும்
§கற்றாழைச்சாறு உரி

குடிநீர்

பித்தமாஞ் சூலை யென்று பேசிய குணத்தை நங் கண்டாற்
குத்துநெற் பொரியுஞ் சுக்குங் கூவிளை வேருங் கூட்டி
ஒத்தகொட் பருப்பும் காய்ச்சி புழுகுளந் தானுங் கூட்டி
மெத்தவெச் செனக்குடித்தால் மீளுமே பித்த சூலை 120

சத்திக்கு

பயற்றினிற் பருப்பைப் பொங்கிப் பருகிள நீரை விட்டு
வியப்புற விரசி யிங்குப் பிழிந்துநீ ரூற்றிக் கொண்டு
நயப்புறு சீனி கூட்டி நன்கி தாய்க் குடித்த போது
தியக்கிடு சத்தி பித்தந் தீர்வது திண்ணந் தானே 121

எரிப்புட *னுடம்பு ளெங்கே யிறுகியே மறுகி நிற்கிற்
பருத்தசுக் கைங்க ழஞ்சு பற்பமே யாக்கிக் கொண்டு
தெரிப்புறு வெந்நீர் தன்னிற் றின்றிடப் பித்த சூலை
தரித்திடா தேகு மென்று தமிழ்முனி சாற்றி னாரே 122

துய்யவா வெண்ணெய் தன்னைத் துவக்கறக் கழுவிக் கொண்டு
வெய்யமா சயிந்தந் தூளாய் விரைந்தரைத் ததனிற் கூட்டிப்
பையவே விடியற் காலை பருகிடிற் பித்த சூலை
உய்திற மில்லை யென்றே யுடலைவிட் டேகுங் காணே 123

குடிநீர்

சீந்திலின் றண்டு சுக்குச் செங்குறுந் தொட்டி பின்வேர்
ஆய்ந்திரு வேலி லாமிச் சதிபிக நல்ல சந்தம்
வாய்ந்திள நீரிற் காய்ச்சி வடித்துடன் மதுவிட் டுண்ணப்
பேர்ந்திடுங் குன்ம வாயு பித்தமாஞ் சூலை தானே 124

பயற்றுடன் சூரி சுக்குப் பகரொரு பிடியே கொண்டு
வயற்சுரைத் தண்டு தானும் வருகுறுந் தொட்டி வேரும்
நயக்கடு வெட்டுங் கூட்டி நலம்பட வறுத்தெட் டொன்றாய்
இயற்பட நுகரி லன்றே யேகிடும் பித்த சூலை 125

*னிளைப்புங்கூடி என்றும்.

குமரிவேர் கொற்றான் சுக்குக் குலநத்தந்த கடுகு ரோணி
சமமுறக் கிளத்து பாலை சிந்தி மதுரங் கூட்டி
அமரவே நாழி நீர்விட் டாக்குவா யுழக்க தாகக்
குழறிபெ ருடன்ம றக்குங் குன்மமுஞ் சூரை போமே 126

சூரணம்

நெற்பொரி மிளகு சுக்கு நெல்லிக்கா யோடிந் துப்பு
திப்பலி சமன்பொ டித்துத் தேனுடன் குழைத்த ருந்த
அற்புகூ விளையின் வேரு மரியசீ ரகமுஞ் சுக்கும்
திற்பலி நெல்லிக் காயுந் தின்னவு நன்க தாமே 127

சுரோணிதம்-சிகிச்சை

உந்திக்கீ ழுதாம் புக்கி யுயர்விலா வெரிந்து சிக்கிச்
சந்துகள் விருவி ருத்துத் தானுட னடுங்கும் வேர்க்கும்
இந்துவோ டாவின் வெண்ணெ யினிமையாய் நுகர்ந்த போது
வந்திடு சுரோணி தந்தான் மாறுமென் றருளி னோர் 128

பூச்சு

நண்ணிய மருந்து தன்னை நலம்பெறக் கொண்டு பின்னர்
எண்ணெயு நெய்யுங் கொண்டே யிணங்கிட வொழுக்கியொற்றிக்
கண்ணிய வெள்ள ரைத்துக் கருத்துடன் வழித்து நீயும்
திண்ணிய நோவின் மேலே செறியவே பூசி டாயே 129

பூசிய மருந்தின் மேலே பூமத்த மிலையைப் போட்டு
மாசற விதனை மாற்றி மன்னுபேய்ப் பீர்க்கின் காயை
வீசியே பிளந்து கட்டி விரவியங் கிபிலே வைத்துக்
காசறக் கரைந்து வெந்தாற் கரைந்திடுங் கட்டி தானே 130

இரட்சை

கட்டினு லெட்டு நாளுங் கரைந்தது மாறு தாகில்
முட்டியே செளுகஞ் செய்து முறைப்படி யுதிரம் போக்கிக்
கிட்டிடுங் கொல்லன் கோவைக் கிழங்கினைத் துவைத்து மேலே
கட்டிறக் கட்டு வீரேற் சுரோணிதக் கட்டி போமே 131

¶சிரைகுத்த

கட்டிய மருந்துக் கெல்லாம் வாடியே கரையா தாகிற்
சுற்றியே கிழித்துப் பின்னைச் சோர்வுற நனைத்துக் கொண்டு
குத்தியே கொம்பு வைத்துக் கொடியநீர் தன்னை வாங்கில்
வைத்திடுஞ் சூலைக் கட்டி யெகுத்துவு மாறுந் தானே 131

குடிநீர்

கருக்குவாய் கோவை யின்வேர் காரைவேர் காய்ந்த சுக்குப்
பருத்திசா ரணையின் வேரும் பையவே தறித்தி டித்துப்
பெருக்கநீர் குறுணி விட்டுப் பின்னது நாழி யாக
எரித்துறக் கொண்ட போதே யெகிடுஞ் சுரோணி தானே 132

கரியதாஞ் சூரை புன்னை கழற்கொடி யாலின் வேரும்
பெரியசா ரணைக்கி ழங்கு பேணுசுக் குள்ளி மஞ்சள்
உரியநீர் நாழி வற்றி யுழக்கதா யுண்ட போதே
வருசுரோ ணிதவா தங்கள் வயிற்றுநோ வகலப் போமே 133

கொள்ளுட னுள்ளி தானுங் கூறெருக் கிலையிந் துப்பும்
எள்ளுக்காய் நத்தை யின்வே ரெழில்பெறு சுக்குக் கூட்டி
உள்ளதாய் நாழி நீர்விட் டேயெரித் துழக்கத் தாக்கிக்
கொள்ளவே யோடுங் கெர்ப்ப சுரோணியும் வாய்வுந் தானே 134

இலைக்கள்ளி யெண்ணெய்

கள்ளியி னிலையிற் சாறுங் கழற்கொடி யிலையிற் சாறும்
உள்ளியுஞ் சிவதை வேரு முத்தமா காணிச் சாறும்
அள்ளுவெண் கார மிந்துப் பரைத்தொக்க வேக வைத்து
வெள்ளையே மண்ட நெய்யில் வெந்துற வடித்தி டாயே 135

வெந்திடு மெண்ணெய் தன்னை விரவியே காண்டி வீதம்
அந்திசந் தியிற்றப் பாம லருந்திடு நாட்பத் துக்கு

¶ சிரை—காரித்தோட்டநரம்பு

வந்திடு கெர்ப்ப சூலை வாயுவுஞ் சுரோணிக் கட்டும்
தொந்தமா மெகுத்துக் குன்மஞ் சூலையு மகலுந் தானே 136

எண்ணெய்குடித்தபின் குடிநீர்

இப்படி யெண்ணெய் கொண்டா லிணங்கவோர் குடிநீர் கேளும்
ஒப்புறு மஞ்சள் தானு முயரிஞ்சி கழல்வ சம்பு
தப்பில்சா ரடைவேர் சுஞ்சாத் தன்விதை சமன வித்து
வெப்புற வுண்பீ ராகிற் சுரோணித விதனம் போமே 137

இராமபாணத்தூள்

வெண்கார மிரசந் திப்பிலி காந்த
மிளகுவசநாவிகொம்பு நெல்லிக் கெந்தி
பண்பான வரிதார மிந்து மோதம்
பசுமஞ்சள் முக்கடுகோர் கழஞ்சு வீதம்
நண்பான நேர்வாள மைங்க ழஞ்சு
நசியவே கல்வத்திற் றூளா யாட்டி
உண்பாய்வெந் நீரினிலே வயிற்று ரோக
மோடிவிடு மதின்வீர முரைசெய் வாயே 138

உரைசெய்த மகோதரங்கள் கவுசி கெண்டை
யொழியாத சூரைவெப்புப் பாவை குன்மம்
விரைசெய்த வலிசூலை கெர்ப்ப வாயு
விரைவாத மெகுத்துவலி குடலீ லேற்றம்
கரையான சுரோணிதத்தின் கட்டி யின்னுங்
கரைந்தோடி யொழியுமந்தங் கடிய வாமை
தரைசெய்த பாக்கியம்போ லிம்ம ருந்து
தானறியா தலைந்திடுவர் சனங்கள் தாமே 139

சூரியகாந்திப் பற்பம்

கள்ளிப் பாலு மோருழக்குக் கழஞ்சி யிரசம் பெருங்காயம்
உள்ளிப் பொடியு மரிபாக வுயர்நற் கெந்தி யிருக ழஞ்சு

கள்ளிப் பால்விட் டேபரைத்துக் கருது நொச்சி யிலைச் சாறு
மெள்ளக் கூட்டி நாழியதில் விரவிக் காய்ச்சி வெயிலில் வையே

வைத்தே காய்ந்து பொடியாக்கிவகையாய்க்கழஞ்சு நேரமொன்று
மெத்தா னெடுத்து வெந்நீரில் விரும்பி யருந்திப் புளிபுகையும்
கைப்பு முப்பு நீக்கிவிடிற் கவுசி யாமை யட்டவிஃ
வெப்புப் பாவை பலரோகம் விட்டுப் போகு மெல்லியலே 141

காந்தக்குளிகை

வாய்ந்த வுதரந் தனில்வருத்தம்வந்தேசாய்க்குமருந்துசொல்வன்
காந்த மிரச நற்கெந்தி கடுகு மிளகு கடுக்காயும்
சேர்ந்த வுள்ளி கடுரோகணி திப்பில் நாவி சாதிலிங்கம்
ஏய்ந்த சரக்குக் கழஞ்சுவகை யேறக் குறையக் கூட்டாதே 142

ஏறும் வாள மிருகழஞ்சு மிளநீர் விட்டுத் தானரைத்துக்
கூறுங் குளிகை தூதளவாய்க் குணமாய்த் திரட்டி நிழலுலர்த்தி
மீறுஞ் சுக்குச் சாற்றிலிட விட்டுப் போகு முதரத்தில்
ஊறும் வாயு புரட்டிவடித் துள்ளே குமட்டுங் குத்துகளே 143

குத்துக் கொளுவல் தனைக்கண்டாற்கொடுப்பீர்நிம்பநெய்யதனில்
சற்றே கெர்ப்ப வாயுவிற்குச் சாரணை வேரின் சாறதனிற்
சித்த மயக்குஞ் சன்னிக்குச் ¶சிந்து வாரத் திலைச்சாற்றில்
மெத்து வீக்கந் தனைக்கண்டான் மிகுநீர் முள்ளிச் சாகமதே

சாகந் தன்னிற் கொண்டபின்பு தண்ணீர் வெந்நீர்தனிற்கொள்ளு
வேகித் துத்தான் பொருமியது மிகவே கழியு மறுக்கவெனில்
தாகத் துடனே யறும்பச்சைத் தண்ணீர் கூட்டு மருந்துடனே
பாகத் துடனே கழிச்சலும்போம் பலவா நோய்கண் மாறிடுமே

மாறு திருக்கின் மோர்குடியும் வயிற்றுக் கழிச்ச லுடன்மாறும்
வீறு மாவினிலைச்சாற்றை வெயிலில் வைக்கத் தானுறையும்

¶ சிந்துவாரம்—நொச்சி

தேறுந் தொப்புழ் தனில்வைக்கத் தீராக்கழிச்சல் தீர்ந்துவிடும்
பேறு மிதனைச் செய்வீரேற் பெரிய வயிற்றிற் பிணிபோமே

நீராமை

மார்பின்கீழ் வயிறு தாழ்ந்து வகைபட வலிப்பு முண்டாய்
நேரொத்த காயம் வற்றி நிறமது வெளுத்து நாவும்
நீர்வற்றித் தண்ணீர் தேடு நினைவற்று மலமுங் கட்டும்
வார்கட்டு முலையாய் கேளாய் வயிற்றில்நீ ராமை தானே 147

உடம்பு முலர்ந்துள் ளிருமலுண்டா யுதரம் வீங்கி காவரண்டு
தடங்கண் வெளுத்துப் பிறங்காலுந் தடித்து வீங்கித்தாகமுமாம்
அடர்ந்த மூச்சுத் தொடர்ந்தோடு மனந்தல் மிகவு முண்டாகும்
மடந்தாய் சொன்னோ நீராமை வருத்துங் குணங்க ளிவையாமே

நாபிமே னெஞ்சு ளாக நடுவயி றாமை போலச்
சோகமாய் மிகவ லிக்குஞ் சோர்ந்திடுங் கண்கள் தாழும்
தாகமா மன்றி நிற்குந் தன்னுடல் கொள்ளா தன்னம்
கோபமாய்ப் பொருமும் வாயு கொடியநீ ராமை தானே 149

பேராமை

மோதிடு முதரம் விம்மு முழங்கிடு மூதை மென்மேற்
பேதமாய் மேன்மூச் செய்தும் பெருகிடு மிளைப்புத் தாகம்
வாதையா யோங்கி வீங்கு மலசல மடைத்துக் கொள்ளும்
பேதமே செய்யு நீகேள் பேராமைக் குணமி தாமே 150

வீங்குஞ் சலமு மிகக்கோர்க்கு மிகுந்துபொருமு முடம்பெங்கும்
தூங்குங் கண்ணு மேன்மூச்சுந் துன்னும் புளியிற் றுகிக்கும்
வாங்கு முதகந் தனைத்தேடு மறுகித் துயர மிகுந்திருக்கும்
தேங்கு மதுவே பேராமை செய்யுங் குணங்க ளறிவாயே 151

இவற்றின் அசாத்தியக்குறி

நெஞ்சுமே லுடம்பு வற்றி நிலைபெறு நரம்பு தோன்றிப்
பஞ்சுபோல் நாவுங் கண்ணும் பாண்டுறும் வெளுப்ப தாகி

வீஞ்சிய வண்டம் வீங்கிக் குமுறியே மலமுந் தீயிற்
றிஞ்சுவ துண்மை யென்று சொற்றனர் கலைவல் லோரே 152

பெருவயிறு

கருவியு மந்தம் பற்றிக் காயமு முடம்பும் வற்றிப்
பெருகிய வுதரந் தானும் பெருகிடப் பொருமி விம்மும்
மருவிய வுண்டி மாறி மலத்தையு மடிப்ப தென்னில்
பெருகிய வுதர தோஷம் பெருவயி றென்ன லாமே 153

சலமலஞ் சிக்கிக் காட்டித் தாகமு மதிக மாகிப்
பலபட மயக்க மாகிப் பழஞ்சுர மருதே நின்று
குலவிய வயிறு விம்மி யவைபவங் குழைந்து காட்டிப்
பெலமிகக் குறைந்து காட்டும் பெருவயி றென்ன லாமே 154

அகுவை

கல்லென வீர லோடே கனத்திடும் புகைந்து காட்டும்
புல்லிய வசனந் தானுங் குறைந்திடும் பொரும லாதும்
பல்பல வலியே யாகும் பசியின்றி மந்தம் பற்றும்
வல்லியே மலமுந் தீயு மகுவையாம் வாயு வாமே 155

மேனி வரண்டே யுதரத்திற் கனத்து வீங்கி மெய்வெளுத்து
வாய்நீர் சுழற்றி நெஞ்செரித்துக் கண்ணு முகமும்வரண் டுலர்ந்து
ஊனை யுருக்கு ஞ்சுரமாக வுடம்புங் கனக்கு மிவைகண்டால்
மானே யகுவை வாயுவிது மண்ணோ ரறியச் சொன்னோரே 156

கவுசி

ஈரலிற் கனத்தே யுந்தி யிருவிலாப் புதைய வீங்கிக்
கூரிய வூதை மூலத் துள்ளிலுங் குறுகிக் காணும்
சீரிய வசனந் தானுஞ் செறுத்திடும் வலிமே வாங்கும்
மார்பது குளிர்ந்து காட்டுங் கவுசியாம் வாயு வாமே 157

இருபுய மார்பு வற்றி யெழுநரம் புதர மீது
பொருமிடும் வயிறு தானும் புடைத்தெழு நாபிச் சுற்றில்

மருவிய விலாவி ரண்டில் வருந்திடக் குத்தி நோவாம்
இருகரங் காலும் வீங்குங் கவுசியின் குணமி தாமே 158

கெண்டை

சுத்தநீரைக் கலந்த நீராற் சூழலிற் சீத நீரால்
வருத்திய கொடுஞ்சு ரத்தான் மந்தத்தா லூதை தன்னாற்
பறித்துறு மசீர ணத்தாற் பசியினாற் றிரிதோ ஷத்தாற
பெருத்திடு மீர லோடுட் கெண்டைநோ யென்று பேசே

இருவிலா நரம்பு தோன்றி யீரலோர் பக்கந் தன்னிற்
பொருமிடுங் கொழுப்போ லின்று வலித்திடும் புளித்தேக்காரும்
மருவிய வன்னந் தானு மறுத்திடு மாளுடம் வற்றும்
பெரியவ ருரைத்தார் கெண்டை நோயெனப் பேச லாமே 160

சுரத்தினா லுடம்பு வற்றித் துடியென விடிக்கு நெஞ்சும்
உரைத்திடை யீரன் மேலே யிருபுறங் கனப்ப தாக
வருத்திடும் வலியு முண்டா மலமுலர்ந் துருண்டு வீழும்
பெருத்திடு தவத்தோர் கெண்டை வாய்வெனப் பேசி னாரே

பிலிகை

மலத்தை யிறுக்கி மந்தித்து வலுவா யுதரந் தனிற்புரளும்
பெலத்தைக் குறைக்கு மீரலொடு பெருகக்கனத்துத் திரண்டேறும்
உலர்த்து மசனங் குறைந்துவரு மோங்காளிக்கு மேப்பமுண்டாம்
குலத்திற் பெரிய பிலிகையினிற் குணத்தைப் பேசுங்குறியாமே

வெப்புப்பாவை

அப்புங் காற்று மங்குரித்தே யடைபட் டீர லிடைப்பற்றி
வெப்புத் தோன்றி யகட்டங்க மிகுந்து வளர்ந்து மேல்வற்றும்
எப்போ தைக்கும் வாராம லிடையே யொருவற் குண்டானாற்
தப்பில் வெப்புப் பாவையென்பர் தடித்து வயிறு பொருமிடுமே

(பாடபேதம்)

அய்யுங் காற்று மிகவுண்டா யந்தித் திருந்தே யுடல் வற்றும்
கையுங் காலு நரம்பெடுத்துக் கைப்பும் புளிப்பு மிகத் தேடும்

உய்யும் வயிறு வலித்திருக்கு மொருபக் கத்தே தான்கிடக்கும்
வெய்ய வெப்புப் பாவையிது வென்றே முனிவர் விளம்பினரே

மகோதரம்

வந்திடு மகோதரத்தில் வாயுவு நேரே யோடா
சிந்திடு முடலும் வாடி யுதரமு மூதிக் கொள்ளும்
நொந்தடி பிறங்கால் வீங்கு நட்பமாய்க் கண்டு பின்னும்
தந்திடு மகோதரத்தின் குணங்களைச் சாற்று வோமே 165

வரண்டுகண் வெளுத்துக் கொள்ளும் வாயுவும் பொருமிக் காட்டும்
திரண்டிடுங் குடலைப் பற்றிச் செருமிடும் புதைய வீங்கும்
கரங்சழல் தடித்து வீங்குங் கனத்திடும் பொருமிக் கொள்ளும்
தெரிந்திடுங் குணங்கள் கண்டால் மகோதர மென்று தேரே

பசியின்றிச் சோப மாகிப் பழமலங் கருகி வீழும்
அசைவுக ளெல்லா நோவா மடிவயி றதைத்துக் காட்டும்
இசையவே யூதை விம்மி யிளைத்திடும் வாளு நாவும்
வசையுறு குணங்கள் கண்டால் மகோதர மென்னலாமே 167

வயங்கெட வெளுக்குமேனி வாயுவு மிகுந்தூன் வற்றும்
தியங்கிடச் செய்யு மெத்தச் சிறுத்திடு வாயு மென்மேல்
அயர்ந்திடுஞ் சந்து கைக ளண்டமும் வயிறும் வீங்கும்
வயங்கிழை மின்னே கேளாய் மகோதர மென்ன லாமே 168

அங்கமும் புடைக்க வீங்கி யழலின்மேற் றூப மாகி
மங்கியே யுதரந்தன்னில் வாயுவுஞ் சலமுங் கோத்துக்
கங்குல்சேர் நேரமானாற் கடியதோர் வாதை பண்ணும்
மங்குல்போ லளக மானே மகோதர மென்ன லாமே 169

இருமிடு மிளைக்கும் வாந்தி யெதிர்த்திடும் பொருமிக் கொள்ளும்
வெருவிடுங் கண்கடாமும் வீங்கிடும் வயிறுங் காணும்
இருவிலா விசிய விம்மி யிரைந்திடு மூதை மென்மேல்
கருகிநீர் மலமுஞ் செம்முங் கண்டுகொண் மகோதரங்கள் 170

மகோதரத்தில் அசாத்தியக்குறி

மேவிய மலச லங்கள் விடாமலும் பிளப்பி னோடு
பாவிய சுர முண் மூச்சுப் பற்றறுக் குணங்க ளாகிக்
கோபமாய் மிகவும் வீங்கிக் குறைத்திடுங் குணங்கள் கண்டாற்
சாவது திண்ண மென்று சடக்கென விட்டுப் போகே 171

சாத்தியக்குறி

மலமொடு சலமு முண்டாய் வாயுவுங் கீழே நோக்கிக்
குலவிய வயிறு தானுங் குழைந்துதாழ்ந் திருக்கு மாயின்
பெலமிகு மருந்தி னோடு பேசிய கிரியை தானும்
நலமுறச் செய்க வென்று நாகமா முனிவர் சொன்னார் 172

பேசிய மலச லங்கள் கழிதலும் பெருத்த வீக்கம்
வீசிய விடங்கள் தாழ்ந்து குழைதலும் விரவிக் கண்டாற்
கூசிட வேண்டா மிந்தக் குறிகளுண் டான போது
மாசிலா னருளை யுன்னி மருந்துசெய் மாறு மன்றே 173

†கிரிச்சை

காடி

இயங்கமிலைச் சாறுடனே பிரமிச் சாறு
மினியகரி சாலையினிற் சாறு தானும்
வயங்கியநல் வீழியிலைச் சாறு மிஞ்சின்
வருருருகின் சாறுபனைக் குருகிற் சாறு
நயப்படுசம் பீரத்தின் பழத்திற் சாறு
நவின்றபடி யோரொன்று படிதான் கூட்டித்
தியங்கிடுமாண் பனைக்களுப் படியி ரண்டு
சிவந்தபுதுக் கலசத்திற் சேர்த்தி டாயே 174

---

†மருந்துகள் பிரதிகள் தோறும் வெவ்வேறாய் நூற்றுக் கணக்காகக் காணப்படுகின்றன. விரிவஞ்சி ஒருசிலவே இங்கு எழுதப்படுகின்றன.

சேர்ந்திடுமூ சிக்காந்தங் கீச்சுக் கிட்டஞ்
செய்யவரப் பொடியுமிவை பலமோ ரொன்று
சார்ந்திடித்துச் சீலைவடி கொண்டு தூவிச்
சாற்றுடனே கலக்கிவைத்துத் தீயின் மேலே
ஆர்ந்திடவே சிறுகொதியிட் டிந்த வண்ண
மடுத்துவரு நாடோறுங் கொதியிற் காட்டி
மாந்தியிட வேழுநாட் பத்தியங் கார்
மகோதரமுட் பாண்டுகா மாலை போமே 176

கடுக்காய்க்குழம்பு

உண்டிதாஞ் சாதிலிங்கம் காயங் காந்த
மோமமில வங்கமதி மதுரங் கோட்டம்
¶சுண்டியவை பொடிமிளகு தொடுத்த சீரந்
தும்பல்நவச் சாரமல்லி சவர்க்கா ரந்தான்
*இண்டிசைதிப் பிலியிவையோர் நிறையிற் கொண்டே
யிளநீரு மொருநாழி கடுக்காய் நூறு
§குண்டை கொச்சை யருந்தாதார் குருகுமீஞ்சின்
குப்பையடர் காஞ்சோன்றி பிரமி கூட்டே 177

கூட்டுமேலு மிச்சங்காய்ச் சாறு நாழி
குழம்பாக்கிக் கழஞ்சருந்தக் காலை மாலை
வாட்டரிய நீராமை பிலிகை யட்டி
மகோதாஞ்சே ரெருத்தினைப்பு வருத்த சோகை
ஊட்டுசம்பா வுப்பிலியூண் கோழி முட்டை
யுள்ளருந்திற் சலமூறு மூறு தாகிற்
காட்டுமுல்லை களப்பணிவேர் கன்முரிசு
காராவின் கோமயத்தி லுள்ளே கொள்ளே 178

¶சுண்டி—சுக்கு *இண்டு—ஈயச்செடி §குண்டை—சேங்கொட்டை.

கும்மடிக்காய்க்குழம்பு

அலகையெனுங் கும்மடிக்காய்ச் சாறு நாழி
யதினளவே சம்பீரப் பழத்திற் சாறு
குலவுசெறி நொச்சியினிற் சாறு நாழி
கொள்ளிவைவெள் ளுள்ளியிஞ்சிச் சாறு நாழி
சலமறவே காய்ந்து வற்றி நாலொன் றாறு
றன்னோடு சாதிலிங்கஞ் சூதங் காயம்
நலமுடைய வெண்காரஞ் சோம னுப்பு
நற்கடுகு மோதகமு நயந்து கொள்ளே 179

கொள்ளுவது வெந்தயமு மிளகு மஞ்சள்
குலஞ்சேரு நேர்வாளங் காந்த மோரொன்
றுள்ளபடி நிறைமூன்று கழஞ்சு கொண்டே
யொன்றுபட விடித்தரைத்துத் துளாவிக் காய்ச்சி
மெள்ளவது பழப்புளிபோ லிறக்கி வைத்து
மிகாமற்றா துளங்காய்போ லுண்ணே கொள்ள
உள்ளபடி குன்மமெட்டு வாயு வர்க்க
முதரமுறு தோஷமெலா மோடிப் போமே 180

கும்மடிக்காய்க்குழம்பு-2

பேய்க்கொம்மடிக் காயினுறு சாறு நாழி
பேசெலுமிச் சம்பழத்தின் சாறு நாழி
நாய்க்கடுகு மேனிசா ரணைபி ரண்டை
¶நாறுவெண் ணொச்சிசிறு தும்பை யுள்ளி
வாய்ப்புறுநற் கொழுஞ்சியிஞ்சி யுவாய்மை வேளை
மருக்கொன்று சீர்நாழி வற்றக் காய்ச்சிக்
காய்ப்புறவே நானாழி யாக வெந்தாற்
கடுகுரோ கணிசிவதை கருஞ்சீர் காயம் 181

¶நாறு—இலைக்கள்ளி

காந்தமுட னுப்பைந்து சார மைந்து
காரமைந்து துரிசு துத்தங் கருஞ்ச மஞ்சள்
ஏந்திழையே சாதிலிங்கஞ் சூத நாவி
யிருவிநெல்லிக் கெந்தகமு மினிய மோதம்
போந்ததிரி கடுகுதிரி பலைவெள் ளுள்ளி
பூவையே வெந்தயமுங் கடுகு பூவில்
ஆய்ந்துநிறு முக்கழஞ்சு சுத்தி வாள
மதுவுநிறை மூன்றுகழஞ் சரைத்து மானே 182

வேலிமேவர் வன்னிநில வாகை வேரு
மிக்கவுவாய் நன்னாரி வீழி வேரும்
ஆலவிழி மானேசா ரணைகொ மூஞ்சி
யவையொன்று பலம்பத்துக் கடுக்காய்த் தோலும்
ஏலுங்நீர் தூணிவிட்டே யெட்டொன் றாக்கி
யிறுத்ததிலே விட்டோரண் டத்தி லெண்ணெய்
கோவியொரு படிவிட்டுப் பனையின் வெல்லங்
கூட்டியொரு பதின்பலமுங் குறுகக் காய்ச்சே 183

காய்ச்சுபழம் புளிபோலப் பதமே வந்தாற்
கருதுமுண்டை சுண்டைக்கா யளவு கொள்வாய்
கூச்சமற மண்டலங்கொ ளுதர தோஷங்
குன்மமகோ தரமெகுவை பிலிகை கெண்டை
ஓச்சுமுறு நீராமை கெர்ப்ப சூலை
யுடன்சூலம் பெருவயிறு வுந்து வாதம்
வாய்ச்சுதொரு கவுசியிவை யெல்லாந் திரு
மலையமுனி யருளியதா மதித்துக் கொள்ளே 184

ஏரற்குழம்பு

பெருத்துவளர் பெருவயிறு வெப்புப் பாவை
பீடுடைய வயிறூதல் பிணிகட் கெல்லாம்
திருத்தமுற நேர்வாளஞ் சீனக் காரஞ்
சிறப்புடைய லோர்க்கொம்பு கடுகு தானும்

உரைத்திடுமூ சிக்காந்த மிந்துப் போடு
முற்றபெருங் காயமினு மிளகு நல்ல
அருத்தியுள கன்மதமுங் கடுகு ரோணி
யையங்கழஞ்சு வகையொன்றுக் களவு கூட்டே 185

கூட்டியிடு சாரணையின் கிழங்கு தன்னைக்
குறையாமல் நாலுபலங் கூட்டிக் கொண்டே
ஈட்டியிடு வெள்ளாட்டுப் பாலும் வார்த்தே
யிதமுடைய வக்கினியிட் டவித்து லர்த்தி
நாட்டமுட னோரலையும் பலமி ரண்டாய்
நன்றாக வவித்துலர்த்தி யிடித்துத் தூளாய்
வேட்டமுள தேங்காய்ப்பால் விட்டுக் காய்ச்சி *
வெந்துவரு மளவினினல் லெண்ணெய் சேரே 186

சேருநல்ல பதமதிலே யிறக்கி வைத்துச்
செவ்விதாய் நாடோறுந் தின்பீ ராகில்
நாரமதிற் றுகமெனில் வெந்நீர் கொள்ள
நலமற்ற புளியுப்புக் கைப்புத் தள்ளப்
பாரமுறு பெருவயிறு வெப்புப் பாவை
பகருதர வளிசூலை வலிக ளெல்லாம்
காருடைய விருள்முனே கதிரோன் சென்றாற்
கருமையெல்லாங் கரைந்ததுபோற் கரைந்து போமே

ஏரற்குளம்பு-2

எருமைமுல்லை யிலைச்சாறு சங்கங் குப்பி
யிணையந்திடுபேயக் கொம்மடியின் காயிற் சாறு
தருமிவைகள் படியொன்று பேய்க்க ரும்பின்
சாறுமெனு மிசையினிற் புளியும் பாதி
வருமஞ்சட் கிழங்கின்சா றதுகாற் கொத்து
வகுத்திட்ட வோற்றாள் கொத்திற் பாதி
பரியசது ரக்கள்ளிப் பாலா ழாக்குப்
பகர்சிவதை வே§ரிரண்டு பலமுங் கூட்டே 188

§சிவதைவேர்பத்துப் பலமும் என்றும்.

வெள்ளைபுள்ளி மூன்றுபல மிந்துப் பொன்று
விளம்பியசுக் கரைப்பலமாஞ் சாரம் பாதி
உள்ளபெருங் காயமுட னரத்தை யோம
மோரிரண்டு கழஞ்சரைத்துக் குழம்பாய்க் காய்ச்சிக்
கள்ளமறு மாண்பணியிற் கட்டி கூட்டிக்
கழஞ்சருந்தப் பத்தியமாய்ப் பிறநீர்க் கோவை
எள்ளுறு முதரநோ பெருத்துக் குன்ம
மிவைதீருந் தேன்முலைப்பா லனுபானத்தே 189

N.B.

காந்தக்குழம்பு

திப்பிலி மதுரஞ் சுக்குச் சீரகங் கரிய சீரிந்
துப்பரே ணுகங்க ராம்பு சொல்பெருங் குறும்பை காயம்
தப்பறு விழால்வெட் பாலை தான்றிக்காய் குலக்காய் கோட்டம்
வெப்பறு கண்டில் வெண்ணெய் வெள்ளுள்ளி வசம்பு மஞ்சள்

கார்புகாச் சிறிய மூலங் கருதுசந் தனமே மல்லி
சீர்பெறு வெளுத்தல் குப்பை சிவந்தசா திலிங்க நெல்லி
பேர்வசு வாசி யேவா லுளுவையு மக்க ரூவும்
நீர்பெறு சீனக் கார நவச்சரஞ் சவர்க்கா ரந்தான் 191

இங்கிவை கழஞ்சி ரண்டோ டியன்மனோ சிலைக ழஞ்சு
செங்காந்த முக்க ழஞ்சு சேரப் பொடியும் பத்துப்
பங்கமில் மிளகு தானும் பகரிலோர் பிடியுங் கூட்டித்
தங்குநா யுருவிச் சாம்பல் சாருமாண் பணியின் பாளை 192

சுட்டிடு சாம்பல் தானுஞ் சொல்லிலோர் நிறையாக் கூட்டி
மட்டுறு தேசிக் காயில் வருபுளி கடுக்காய் நெல்லி
அட்டிடு சாறு தம்மி லரைத்ததைக் கரைத்து வெந்தால்
விட்டிடு நெய்யுந் தேனும் விரவிடக் குழம்பாய்க் காய்ச்சே 193

காய்ச்சியே யந்தி சந்தி கழஞ்மணி யளவு கொள்ளக்
காய்ச்சலின் வெப்புப் பாவை கடுமகோ தரநீ ராமை

பேச்சுறு பாண்டு சோகை போராமை யட்ட வீகை
தீச்செறி பஞ்ச போலத் தீர்ந்திடு மென்று தேரே 194

சிந்தாதிக்குழம்பு

புளியிலை தூணி சாற்று கடுக்காய் போந்திடு நானூறு
போற்றிய சிவதையு முள்ளியுமஞ்சள்புகழ்பெறு மவுரியுடன்
களிதரு மூசி மல்லிகை சாறடை கனமுத் தக்காசுங்
கடுகொடு வேலியும் வேப்பம் பட்டை கருங்கிழ்காய்நெல்லி
தெளிதரு வில்வக் காய்தூ தூளையுந் திகழ்நா யுருவிவளஞ்
சேர்தரு வட்டத் திருப்பொடு சந்துந் தேசமூ லந்தான்
துளிதரு செங்கொட் டைநல் வசம்புஞ் சொற்சிறு மட்டியுமே
சூழ்பேர் மட்டி கரும்பு கரிப்பான் சொற்றிரி பலையதுவும்

வகைக்கிவையோ ரொன்றுபத்துப் பலமுங் கிட்ட
மருவபல நூறிரும்பு பலமு நூறு
சுகப்படவே கூட்டியெட்டு மரக்கால் நீருஞ்
சொல்லரிய கோமியமப் படியுங் கூட்டி
வகைப்படவே யெட்டொன்றாய் வடித்துக் கொண்டு
வளமான பனைவெல்ல மிடைதா னென்று
முகைப்படுமாண் பனைக்கள்பேய்த் தும்பை முள்ளி
முதிருமஞ்சள் கொடுவேலி வேருங் கூட்டே 196

கூட்டுபுளி யம்பட்டை கிரைத் தண்டு
குளிர்புரோ சின்சருகு சுட்ட சாம்பல்
வாட்டமற நாழி யதனிற் றண்ணீர்
வளமாகக் குறுணிவிட்டு வடித்துக் கொண்டு
நாட்டமுட னாரத்தம் பழத்திற் சாறு
நாழி சதுர்க்கள்ளி யவுரி தானும்
ஈட்டமுறு நொச்சியிலை குப்பை மேனி
இனியதோர் வண்டிலைசா றடையுந் தானே 197

சங்கிலைகல் லூரியுடன் பிரமி தானுங்
தடித்தவிஞ்சி சாறிவைகள் வகைக்கோர் நாழி
பொங்கமுறு நெய்நாழி யெண்ணெய் நாழி
போதவே காய்ந்துபத மான போது
தங்குகரி சாலைச்சாற் றினில்வ றுத்த
சாருமர பொடியதுவுஞ் சிங்கி தானும்
துங்கமுறு திரிபலையுங் கடுக மூன்றுஞ்
சொற்றவிரு சீரகமு மிலவங் கத்தோல் 198

தானுமில வங்கபத்ரி யிந்துப் போமந்
தந்திடுவாய் விளங்கமுடன் றேவ தாரம்
ஆனதொரு திப்பிலிமூ லந்தா னெல்லா
மடைவாகப் பலமொன்று பொடியாய்ப் பண்ணி
மானமுட னேதூவிப் பதத்தி லாற்றி
வளமாக விருநாழி தேனும் விட்டே
ஊனமறக் கலந்தெடுத்துக் கழஞ்சு கொள்ள
வுதரநோய் பாண்டுகா மாலை போமே 199

இலைக்கள்ளிக்குழம்பு

இலைக்கள்ளி யிலைச்சாறு படியி ரண்டோ
டியனுமதன் பாலதுவும் படியி ரண்டு
குலப்பசுவின் மூத்திரமோர் படியு மாகுங்
கோவின்னெய் யரைப்படியுங் கூட்டிக் கொண்டு
விலக்கறுசா ரணைவேர்த்தூள் படியு மாகும்
வேறுகுள வட்டைத்தூ ளொருசி றங்கை
இலக்குறுமாண் பணைப்பாளை சுட்ட சாம்ப
லீந்தினது குருகுகிட்ட மயத்தின் றூளும் 200

தூளிவைக ளொவ்வொர்பிடி குந்து ருக்கஞ்
சொற்பெரிய காயமுடன் றுரிசு துத்தம்
வாள்விழியா யிந்துப்புச் சீனக் காரம்
வகுத்தபொரி காரமுடன் சவர்க்கா ரந்தான்

நீள்கடுக்காய் நவச்சார மிவைக ளெல்லாந்
நிறுத்திரண்டு கழஞ்சுநேர் வாள வித்து
மாளாது சுத்திசெய்தங் கிருபான் கொட்டை
வருசாதி லிங்கமரைக் கழஞ்சு மாமே 201

ஆகுமே யிவையெல்லா மரைக ரைத்தே
யருப்பதத்திற் குழம்பாக்கி யருந்தக் கேண்மின்
சேருமொரு வெருகடி தான் னெய்யிற் றேய்த்துத்
தின்னவுத ரத்தினுறு நோய்கள் யாவும்
தீருமே யெருவையட்டி யாமை யாம்பல்
தீராத பெருவயிறு பலவுந் தீரும்
போதுவு மிலைக்களிக் குழம்பா மென்று
பேசினார் மலையமுனி பெட்பாய்த் தானே 202

சாரணைக்குழம்பு

சாரணை சமூலந் தன்னிற் சாறது நாழி யொன்று
வேர்தனை யரைத்தெடுத்து விளாங்காயி னளவு கூட்டி
ஏருறு கோமயந்தா னுரியதன் னெய்யு ழக்குப்
பாருறு கள்ளி யின்பா லாழக்குப் பரிந்து சேரே 203
சேருமிந் துப்பு மூன்று கழஞ்சதைச் சேர்த்த ரைத்து
நேருறு சட்டி யொன்று நிகழவே காப்புக் கட்டிப்
பாரிதிற் காய்ச்சி யொட்டும் பருவத்தி லிறக்கி வைத்து
நேரமொன் றரைக்க ழஞ்சு நினைந்துணா நன்ற தாமே 204

புளியிலைக்குழம்பு

குலம்படு புளியி லுற்ற விலைமூன்று குறுணி கூட்டிப்
பலம்படு காடி தானும் பகருழக் குறுணி யாக
நலம்படு மிலைத்து வைத்து நற்காடி தனிற்பி சைந்து
கலம்பட வடித்தி ரும்பின் பொடிபலங் கலந்து கொள்ளே 205

கொள்ளுமம் மருந்து தன்னைக் குறுகவே துளாவிக் காய்ச்சி
விள்ளுமோர் குறுணி யாக விதிபெற வடித்துக் கற்கம்

உள்ளியோ ருழக்குப் பின்னு முறுகடு கோரு ழக்குத்
தெள்ளிய மிளகு ழக்குச் சேரவே யரைத்துக் காய்ச்சி 206

பசுவினெய் கூட்டி நல்ல பருவத்திற் காய்ச்சிக் கொள்ள
விசியுறு பொருமன் மந்தம் வியன்மகோ தரமும் போகும்
கசியுறு வெப்புப் பாவை கழிந்திடு நீரும் வற்றும்
பசியறும் முனிவர் முன்னாட் பகர்ந்தசா தனம தாமே 207

சாதனங் கண்டு பின்னுஞ் சாற்றிய ‡மருந்திற் †காட்டு
மேதிப்பா லுரியுங் கூட்டி மிகுதுளம் பலமொன் றாகும்
காதிடு மிளகு சுக்குக் கடுவசம் புள்ளி மிக்க
நீதிநேர் வாளங் கம்பிப் பிசினுநேர் கழஞ்சு கொள்ளே 208

கொண்டதோ ரடுப்பி லேற்றிக் குறுகவே துளாவிக் காய்ச்சிக்
கண்டதோர் பதத்தைப் பார்த்துக் கலந்தற வெடுத்தேயுண்ணப்
பண்டுமால் தேடிக் காணாப் பரமனா ரருளி னாலே
விண்டதோர் மகோத ரங்கள் விரையவிட் டேகுங் காணே 209

காந்தக்குழம்பு

காந்த மிதராஞ் சாதிலிங்கங் கடிய நவசீன சவர்க்காரம்
போந்த வெண்கார மிருசீரம் புகலு மோம மிளகுள்ளி
வேந்த திப்பிலி வேர்க்கொம்பு வெந்தயங் கொத்த மல்லிகிட்டம்
மாந்த ரராவு மரப்பொடியு மன்னுங் குப்பை மேனியுமே 2 10

மேனி கறுத்த கைத்தகரை மீறுஞ் சிறுகாஞ் சோன்றியுடன்
காணி லாடு மருந்தாத கடிய பாலை பிரமியதும்
கூனி லீச்சங் குருகுமெலு மிச்சம் புளியுங் குழம்பாக்கித்
தேனி லினியா ரேயருந்தத் தீரும் வியாதி செப்புதுங்கேள் 211

‡முன்சொல்லிய புளியிலைச்சாறும் இரும்பும்வடித்த கஷாயத்தில், †காட்டுமேதிப்பால்—கள்ளிப்பால்

செப்பிய மகோதர முடன்பிளிகை யட்டி
சேர்குடலில் வாதமுட னேகெண்டை தானும்
வெப்புமிகு பாவையறு மேகுநீ ராமை
மேவுமுத ரத்திலுயர் நோய்வகைக ளெல்லாம்
தப்பற வகன்றுவிடு மென்றுமுனி வோர்கள்
சங்கர னளித்தமுரு கேசனரு ளென்றே
இப்புவி நரர்க்குறு பிணிக்கென வியம்பு
மேதமற வேயிதனை யெண்ணியறி வீரே 212

காந்தக்குழம்பு-2

இரசங் கழஞ்சொன் றரையூசிக்காந்தமியம்புமதுமூன் றினுட னே, யிதமானவரைபொடியுமூன் றிட்டத்தூளிதுவுங்கழஞ்சுமூ ன்று, வரதன்கலந்தசாதிலிங்கங்கழஞ்சொன் றுவலியவரிதாரமொ ன்று, வருமிந்துவொன் றுநவசீனசவர்பொரிகாரைவகைநாலுமரை யரையதாய், விரதங் கொளுங்கடுகு ரோகிணியு மிருசீர் வேர்க் கொம்பு திப்பிலியு மோமம், மிளகுள்ளி யோரொன் றிருகழஞ் சரிதகி விளங்குற்ற நெல்லிநாறு, சரதங் கொளுங்கா யிரண்டு மூறிடுநீர் தனிலரைத் தேசரக்கைச், சயமான கொன்றையச மருந்தாத பாலைபாற் சோற்றி தயவுற்ற வல்லாரலும். 213

வல்ல சொன்றி கன்முரிசு வயங்குறு துளிரோர்பிடி
நல்ல சாறு மெனுமிச் சிலங்கு புளியு மோரளவு
மெல்லக் கரைத்துக் குழம்பாக்கியிரையக்காய்ச்சியருந்துவிரேல்
கொல்லக் கொடுத்த மகோதரமுங் குலவு முதரப் பிணிபோமே

காந்தபற்பம்

அரிதாரஞ் சாதிலிங்க மனோசிலை யிந்துப்பு
மதிவிடயங் குருசாணி பெருங்காயங் கோட்டம்
பெரிதான கொத்தமல்லி திப்பிலிவேர்க் கொம்பு
போரான மிளகிருவி கடுகுலுவா வுடனே

பரிதான நெல்லிக்காய்க் கெந்தகமு மிருசீர்
பண்புடைய பகர்பஞ்ச காரமொன்றோர் கழஞ்சாய்
அரிதான வரபொடியு மீரெட்டுக் கழஞ்சா
யயக்காந்த முக்கழஞ்சி ரசங்கழஞ்சு கொள்ளே 215

கொள்ளுவது காந்தபற்பங் கற்தகனைச் சாற்றிற்
குணம்பெறவிட் டேயரைத்துப் புதுச்சட்டி தப்பி
மெள்ளவது வுலர்ந்தபின்னர்ப் பொடியாக்கி யெடுத்து
வெருகடியி னளவாகத் தேனதனிற் கொள்ள
உள்ளமகோ தரமுடனே யட்டிவெப்புப் பாவை
யூதுகா மாலைநீ ராமையொடு பாண்டு
எள்ளளவு மில்லாம லேபறந்து போகு
மென்றுமுரு கேசனரு ளான்முனி யியம்பும் 216

ஏரற்பற்பம்

வயிறு பொருமல் வலிகுன்ம மாறுச் சோகை காமாலை
எயிறு மேரல் சாரணை வே ரிரண்டுங் கூட்டிப் பொடியிட்டு
வயநல் விங்கு நேர்வாள மருவுங் கடுகு ரோகணியும்
பயபேர் கராம்பு மிளகுலுவாப் பகரிந் துப்புச் சீரகமே 217

சீனக் காரம் வேர்க்கொம்பு செறிந்த கடுகு கன்மதமும்
தானிற் கழலுஞ் சவர்க்காரஞ் சமனேறு ரொன்று நாற்கழஞ்சு
காணிற் றழலிற் பொடியிட்டுக் கதித்தகாய முடன் கூட்டி
வானுற் றெழுந்த தேங்காய்ப்பால் மருவச் சேர்த்து வாட்டுவரே

வாட்டிக்காரெள்ளெண்ணெய்தனில்வாளவெரித்துப்பொடியிட்டே
யூட்டுங் காலை மாலைகழஞ் சருந்தப் பஞ்ச குன்மமுடன்
மீட்டுங் குடலிற் கற்சூலை மிகுத்த சூலை மெல்லெலுத்து
மூட்டுங் கனலிற் பஞ்சடைபோல்மூண் டேறெகுத்தும்வேராறுமே

கொம்மடிக்காய்த்தயிலம்

கொம்மடிக்கா யினிற்றயிலங் கூறக் கேளுங்
கூனியெனுங் கொம்மடிக்காய் துண்ட தாக்கிச்
செம்மையுட னதுவிருக்கக் கற்கஞ் சொல்வன்
சிறந்தவிந்து வுள்ளிகுள விந்த மஞ்சள்

வெம்மையுள நேர்வாளங் கடுகு வோமம்
வெந்தயஞ்சா திலிங்கநெல்லிக் கெந்தம் வேர்க்கொம்
பிழ்மெனவே மிளகுதிப்பி லியுங் காந்த
மிதமான வசம்பொன்றே ரிருக ழஞ்சே 220

சழஞ்சுடனே யிதுவெல்லாம் பொடிய தாக்கிக்
காய்க்குள்ளே பொதிந்துமொரு மிடாவில் வைத்து
வளஞ்சேரு மெட்டுநாட் சென்ற பின்னர்
வருத்தவதை யெடுத்துலர்த்தி மறுகாற் கள்ளி
உளஞ்சேரும் பாலதனி னனைத்துப் பின்ன
ரொருபானை தனிலிட்டே வெயிலில் வைத்து
அழன்றுவிழுந் தயிலமருந் திடப்பி லீகை
யட்டிபெரு வயிறுகுன்மம் பாவை போமே 221

உள்ளியாமணக்கெண்ணெய்

உதரந் தனிலேறுவுக் குள்ளி யெண்ணெய் கேண்மின்
அதாஞ் சிவந்த வழுகாய்-அதாவரிசி
கொள்ளிரு நாளி கொடிக்கழற்சி யின்பருப்பு
வெள்ளவொரு நாழி விளம்பக்கேள்-தெள்ளுநீர்
தூணிதனை வார்த்துத் தொகைபெறவே காய்ச்சிநீர்
பாணியாய் நாழி பதமானால்-பேணிப்
பிசைந்து வடித்திதுவும் பேணியதோல் போக்கி
இசைந்தவெள் ளுள்ளிபல மீர்பான்-அசைந்த
கொடுவேலி யின்வேர் குறுகத் தறித்தே
இடித்தைதம் பலநீர் தூணி-படிமுறையே
நாலொன்றாய்க் காய்ந்தபின்னர் நச்சிப் பிழிந்ததனை
மேலொன்று கற்கம் விளம்பக்கேள்-சாறும்
பெருங்காய நல்விழால் பேணுஞ் சிவதை
பெருஞ்சவர்க்கா ரமபொரி காரம்-வருஞ்சொத்த
மல்லிமர மஞ்சள் வளர்திப் பிலிமிளகு
சொல்லாற்ற லுப்புமுத்தஞ் சூடனே-மெல்லிய
வெண்கடுகு வெங்காயமு மேற்கடுகு ரோகணியும்

பண்புசெறி கொற்றுணிற் பாக்கொழுந்து-நண்பாக
ஓரொன்றொருகழஞ்சா யொக்க நிறுத்திவற்றைச்
சேரொன்ற வேகவைத்துச் சேர்த்துமே-பாரொன்றும்
கள்ளிதரு பாலுழக்குக் காட்டியசிற் றாமணக்கின்
தெள்ளுமெண்ணெ யும்முழக்குச் சேர்த்திடுவாய்-ஒள்ளிதாய்
வெந்துபதங் கண்டதின் மேற்கடுகைத் தான்வடித்துக்
கொந்துலவுங் கோதையரே கூறக்கேள்-வெந்தவெண்ணெய்
காசளவு நக்கக் கடியநோய் தீரும்வகை
பேசுகிறேன் பெண்ணணங்கே பெட்புடனே-கேசி
குடல்வாதங் சுழல்வாதங் குன்மவலி குன்மம்
அடலெழுந்த வட்டி பிலிகை-உடலடங்கும்
வாதம் வயிற்றெரிப்பு வாதகுன்மம் பித்தகுன்மம்
சீதஞ் சுருண்டுசிக் கென்றவையும்-போதவே
அந்தர வாயுவது மான கவுசியுடன்
எந்தியநீ ராமை யினுங்கேளாய்-செந்தமொரு
கோளுறுப்ப சூலமுடன் கொய்குசப்பு ரோணியதும்
தாளுறுப்பு நோவதுவுஞ் சத்திகுன்மம் மீளுநோய்
பக்கசூ லம்மெகுத்துப் பார்நாபி சூலமினும்
தக்கவெப்புப் பாவையுந் தான்மீளும்-மிக்கெழுந்த
ஆமசூ லம்முடனே யார்கெண்டை நோயதுவும்
சேம மகோதரமுஞ் சென்றகலப்-போமேதான்
என்று முனி வோருரைத்தா ரேற்ற மருந்திதனை
நன்றுறவே செய்வீர் நலம் 222

இலவணக்கடுகம்

சேருஞ் செந்நீர் சிறுகுடலிற் றிகழு மெகுத்து மிடப்புறத்திற்
சாருஞ் சடரிற் றடித்திறுகித் தன்னி லருந்துந் தாமரையை
ஊரு நகில்மேற் றுடர்ந்தேறி யுதர முறவே மிகச்சுழிக்கும்
காருஞ் செறிந்த விடஞ்சேரிற் கவுசி யணுகுங் கண்டாயே 223

கண்டாய் சடரிற் பிலிகையட்டி கடிய சுரத்திற் கனத்தகுன்மம்
பண்டே யடுத்த பழமலத்திற் படரும் வாயுப் படர்சூலை

விண்டேமெலியு மேல்வற்றும் வெளிறுமிளைக்கும்பொருமலுண்டாம்
தண்டே ஐறபூந் தடிக்குமுந்தி தாகஞ் செய்யுந் தழலெழுமே

சாய்ந்தவுடல் தனில்வெளிறு மிளைப்புக் காணுந்
தணிந்துபின்னு மேகமுடல் தன்னில் வாடும்
சேர்ந்துடலிற் றினவாகுஞ் §சேருந் தாகஞ்
செறிந்துடனே யுடல்குளிரும் வெப்பு மாகும்
ஆர்ந்தபடி முகமுந்தி யடிவ யிற்றி
லானபுற வடிவீங்கும் பித்த பாண்டு
சார்ந்துடலிற் றடித்துந்தி தாம ரைக்காய்
.... 225

அறிந்துடலில் வெப்புதா மந்தம் வந்தா
லறிவழிக்குங் கவுசிமகோ தரநீ ராமை
செறிந்தெகுவை பிலிகையட்டி சிறுகற் சூலை
தீராத வெண்சூலை சேரும்வாயு
முறிந்திடுமா மருந்திலவண நாழி கூளி
முகிழ்முலையுந் தெசமியுரி யூமைசேமம்
பிறந்திடுபேய்க் கரும்புபெருங் காயமோமம்
பேரரத்தை யிருகழஞ்சு பெருகா தென்னே 226

பெருகியவெண் காயமிரு நாழி சுக்குப்
பெருகாம லொருபலத்திற் பிறந்தோல் சீவி
உருகியதோர் நவச்சாரஞ் சங்கங் குப்பி
யுறுமேதி முல்லையிரு நாழிச் சாற்றில்
வருசிவதை யிருபலங்கொள் மஞ்சட் சாறு
வளர்நீலிப் பாலுழக்கில் வாளத் தேய்த்துக்
கருதுபனங் கட்டியினிற் கழஞ்சு கொண்டாற்
காய்ச்சியநீ ருடனருந்திக் கருது நீரே 227

§சோர தாகம்-என்றும்.

கீரான பஞ்சகுன்ம நிறையெ குத்து
நீளுடலில் வாயுவுறிற் றேனிற் கொள்க
வாராத சத்திகுன்ம வகைமி குத்தால்
மாமேதி மோரதனில் மருவத் தீரும்
சோராத கவுசிகுன்ம வகைமி குத்தாற்
றுடியிடையார் முலைப்பாலி னுள்ளே கொள்க
ஆராத மண்டலமொன் றருந்து நாளி
லாற்றுமருந் தீரவுள்ளி யடைவு கொள்ளே 228

சேய்சடர் குக்கில் தாத்தந் தெளிந்துட னனேக மெல்லாம்
போய்நடு வுதர மிண்டிப் பொருமல்நேரெ குத்து முண்டாம்
வேயுட னிடத்தி லேறின் மீளும்பின் வலமும் வந்தால்
காயமேல் நோக்கி புண்டி கழிந்துடல் நோக்கு நோயாம் 229

ஆமவ ருடலி லுண்ட வசீரண மெய்யி லூறித்
தாமதி சுரத்திற் குக்கில் தண்டித்துள் வெப்பு மாகி
வாமனே ராகும் பாகம் வடிவுநாற் சதுரம் வட்டம்
தாமமேற் கவுசி கீழே துடர்வது சாற்றுங் காணே 230

சாற்றும் பிலிகை சடர்பெருத்துத் தடிக்கு மிடத்தில் நீராமை
ஏற்று மெகுத்து வலமேறி யிளைப்பு வெளுப்பு முட்கழியும்
காற்றின் பொருமல் கால்கையுங் கனலுங் கண்ணுமொளிகுன்றும்
.... 231

உற்றதோர் மூல ரோக முதரநோய் தடித்தே யண்டம்
முற்றிய வத்திக் காய்போல் முளைக்கிலுட் சலத்தைச் சிக்கும்
சுற்றையை வாத பித்தந் இடர்வது பிரமே கத்தின்
பற்றிய தாரை நேரே படர்வது வெகுத்தா மன்றே 232

எகுத்துமே லிளைப்பு மேனி பிறுகுமெல் வடிவு வற்றும்
வகுத்துநீ ராமை போலும் வரிவிழி மயங்குந் தாளில்
மிகுத்துறக் கனத்து வாடும் வெளிறுமுள் ளென்பு தோன்றும்
பகுத்தற விடத்திற் பற்றிப் படர்வது சாருங் காணே 233

மருந்து

காணு ரிங்கு வெள்ளுள்ளி கரியமிளகு குயில்மொழி வேர்
நாணு ரொன்று நாலிரண்டு நாலு மூன்று வெள்ளாட்டின்
ஊணுர் பாலி லுள்ளருந்து மொழுங்கே நாளு மண்டலமே
பேணீரண்டாமடைவுகொள்ளிற்பெருஞ்சாரணையுமுருங்கையுமே

முதியாள் கூந்த லிருவேலி முற்றாஞ் சந்தம் வெள்ளுள்ளி
மதியா ரோம மாமஞ்சள் மருவு மிங்கு முலுவாவும்
பதியா ரூணைச்சி வெள்ளாட்டுப் பாலிற் காய்ந்து பருகிப்பின்
விதிசேர் மூன்று மடைவுகொள்ளின் மிளகு நாழி யுள்ளியிங்கே

இங்கொரு பலத்தி னேரே யிளையவர் கொடிசேர் மங்கை
செங்கொடி வேலி மூலந் தேனுவின் பாலிற் சேர்த்துப்
பங்கொரு நாழி நெய்யும் பதத்தினிற் காய்ச்சிக் கொள்க
திங்களி னுப்பு நேரே சேர்த்துட னருந்து வாயே 236

கழித்தெருவை பிலிகைபட்டி கருநீ ராமை
காயமுற்ற கெளிசைமேற் கவுசி யென்றே
பழித்தமெல்லைப் பாலுடனே பனையின் கட்டி
பருகியபின் மருந்துசுக்கு மிளகு வுள்ளி
சுழித்தகுயில் மொழிவேருஞ் சமனிற் கொண்டு
சோற்றுடனே காட்டிக்கூ ழாக்கி யுண்டே
கழித்தகஞ்சா விருப்பூறல் நிமிளை சொண்டி
கார்செறியா மணக்குடனே வாள மஞ்சே 237

அஞ்சாத வசம்புலுவா வடைவே கொண்டே
யறப்பழுத்த சாரணை வேர்ச் சாறு நாழி
மின்சார வரைத்ததனைக் கரைத்துக் காய்ச்சி
வேப்பெண்ணெய் விட்டிறக்கி நாளிற் கொள்ளே
துஞ்சாத சாரணைவேர் முருக்கு முள்ளித்
துளிர்பூலா விலைச்சாறு நாழி நாழி
நஞ்சார வுண்டைமெல்லை நீரும் பாலு
நாழியிரண் டாமெனவே நல்கு நீரே 238

நல்கியவிந் துப்புநாற் கழஞ்சு வள்ளி
நாழியொன் று மிளகுமொரு நாழி சுக்குச்
சொல்லியசீ னக்கார மரத்தை யோமஞ்
சொற்பெரிய காயமொரு பலமோ ரொன்று
வல்லபடி யாலரைத்துக் காய்ச்சிப் பாதி
வற்றியபின் சாரணையின் பொடியுந் தூவி
செல்விபெறு கெந்தகத்தோ டிரசங் காசு
நிறைதனிலே சேர்த்துள்ளே நாளிற் கொள்ளே 239

கொள்ளவினி தானபனங் கட்டி தன்னிற்
குறையாம லொருகடுக்காய்ப் பிரமாணத்தில்
உள்ளருந்தி யொருமிடறு வெந்நீர் கொண்டா
லுருதமெழு கெனுமெருகை பிலிகை யட்டி
தள்ளியகீ ரானைவரு மாம்பல் கெண்டை
தங்கியதோர் கேசியுடன் சூரை யெல்லாம்
வள்ளலுட னீரிழந்த கஞ்ச வெய்யோன்
மதியமுற்ற துகள்பொடிபோன் மருவுஞ் சொல்லே

சொல்லு மெருக்கி னிலைச்சாறு தோற்று மலைகைக் காய்ச்சாறு
வெள்ளை யறுகி னிலைச்சாறு மேதி மோரு மிரண்டொன்றாய்
வல்லபடியொன் றுருநாழி வகையிற் கூட்டும் படிவெள்ளை
உள்ளி மிளகு மொருபலந்தோ டோமஞ் சுக்கு மொருபலமே

பலஞ்சேர் நேர்வா ளப்பருப்புப் பரிந்தே யாறு கழஞ்சுடனே
நிலஞ்சே ரெருக்கி னிலைச்சாறு நேரே யுழக்கி லரைத்துப்பின்
கலந்தே யரக்கி னீர்நாழி கரைத்துக் காய்ச்சிக் குழம்பாக
உலர்ந்தே யருந்தக் கவுசிகுன்ம முடல்விட் டோடும் பார்தனிலே

பார்நீ ரெருத்துக் குக்கில்சடர் பரிந்தேநிற்குங் குணங்களும்
நீராய்த்திரளும் பயோதரங்கீழ் நிற்குமாறு வங்குலத்தில்
வோரா மிடத்திலெதிர்மீளும்வலமேயேறித்திரண்டுருண்டால்
கோராக் கவுசி குடகரிமேற் றிரண்ட பொருமன் மாறுதே 213

மாறுத குன்ம ரோகம் வலியுறு மயக்க மாகில்
வீறுன சதுரக் கள்ளி மேவிய பாலு முக்கிற்
சீறுத வாட்டின் பாலுந் தெரிந்தொரு நாழி கூட்டித்
தூறுன சிறுகுறிஞ்சித் தூளியு நாழி தேடே 244

நாழிவெள் ளுள்ளி சொண்டி நற்பெருஞ் சீரகத்திற்
தாழ்வறு மிளகு முக்குச் சரிகடு குரியிந்துப்பு
மீளவும் பலமீன் கச்சல் வெண்டலை பலமு லர்த்தித்
தூளியுந் நாழி தேங்காய்த் துருவலு நாழி தானே 245

நாழியெள் ளிற்பிண் ணாக்கு நல்கிய பனையின் கட்டி
மீளவும் புடத்திற் றூளி மேவிய தேங்காய்ப் பூவிற்
றூள்படி கலசந் தன்னிற் சுருக்கியுட் சேமஞ் செய்து
நாளொரு புன்னைக் காய்போல் நல்கியே யருந்திடாயே 246

அருந்துநீர் கவுசி குன்ம மமர்சூலை மாங்கிஷஞ்சேர்
பெரும்பிலி கையுமே யட்டி பெருகுட கரியெகுத்து
வருந்துகற் சூலைமேனி வரிவெளுப் பாண்டுரோகம்
மருந்துண்ணில் மாறுமென்று வாகடர் சொல்லுமாறே 247

மாதேகேள் மிளகுசொண்டி யாட்டுப் பாலில்
வாரணைவெச் சங்கள்ளிப் பாலுங் கூட்டி
மீதேகே ளக்கினியிற் குழம்ப தானால்
மிகுந்தபனங் கட்டியிலே யுள்ளை கொள்ளப்
போதேநற் பிண்ணாக்கு வெள்வெங் காயம்
பொடித்தபனங் கட்டியொரு கடியுங் கொண்டாற்
தீதேவா ராதுபிற நீருண் டார்க்குத்
திருமென வாகடநூல் திருந்தச் சொல்லே 248

புகை

சொல்லா மீயந் தரிசுலிங்கஞ் சூதஞ் சிவந்த பாஷாணம்
நல்லா ருண்மாங் கிஷபேதி நவஞ்சேர் காரஞ் சவர்க்காரம்

கல்லாம் வெளிறு பாஷாணங் கலுழன் கல்லு மாவித்துப்
பொல்லா வற்ச நாவியகில் போற்றும் பெருங்கா யமுந்தேடே

தேடுங் கல்நார் காரரிசி செவ்வை கள்ளிப் பாலெருக்கு
நீடுஞ் சேர வோர்கிறைகொள் நீர்சேர் முதலை நெய்யுளுவை
வாடுந் தசையு மூளையும் வளர வரைத்தே யுண்டைசெய்து
சாடு நிம்ப நெய்தன்னிற் றணிய வுதரப் புகைநீட்டே 250

உதரங் கடுக்கில் வெள்ளாட்டி னுள்ளிற் றசையு மூளையினிற்
தசையு மிலவின் பிசினுடனே சமூல மூன்றிற் றுடகைய
மருவ வரைத்தங் குள்ளருந்தி மாட்டின் கொம்பு முதலைநெய்யும்
கருசப் புகைந்தக் கணந்தனிலே காரந் தன்னைக் காட்டுவரே

காட்டும் வீழி வேரளவு காய்ச்சுக் கட்டி யவ்வளவு
கூட்டும் விளாவின் பிசினுமங் கொடிய காய மிளகுள்ளி
நாட்டும் வசம்பு முலைப்பாவி னல்கி யரைத்தே யுள்ளருந்த
வாட்டு மூல ரோகமெலா மாறு மென்று சொல்லுவரே 252

வாட்டியகற் றுழைநீர் சூதமது தன்னில்
மருவுதிரி கெந்தகத்தோ டரைபொடியுந் தசமாம்
கூட்டியரைத் துக்கலையு ளடக்கிமலை யதனின்
¶குடுமியுளே யிருத்தியவர் மேலுமலை யிருத்தி
நாட்டுமஞ்சு கடிகைசென்றால் நல்கியுடனெடுத்து
நற்றிரியோ டாமமுட னேர்வாளங் கழஞ்சு
தேட்டு முதல் மருந்துடனே சேர்த்துடனே நாளுந்
தினமுமொரு தெருகடிதான் சிறுமலருந்தே 253

அருந்துமதன் குடிநீரி லடைவே கொள்ளு
மானபிடி கையளவு கடுக்கா யைந்து
இருந்தகும ரிச்சருகு பிடிதா னீரி
லெட்டொன்றாய்க் காய்ந்ததனை யுள்ளே கொள்ளும்

¶பிரதிகளிற் கண்டபடி இதனைப்பதிப்பித்தோம் பொருள் விளங்கவில்லை.

மருந்துடன்சிற் றுமணக்கி லெண்ணெய் நாளு
மருவிடுமேற் பொடிதூவி வளர்ந்தா னுண்டால்
பொருந்துநவ குன்மமுற்றித் திரண்ட சூலை
பொரிபடுதீக் கலையெனப்போய் மறையு மாதே 254

மாதேகேள் விரசங்கெந் தகங்கடுக்கா யோமம்
வளிரும்பிற் பொடிசெய்பிற் பொடிசிவதை வேரும்
மீதேகேள் பெருங்காயம் வெண்கார மிளகு
மிகுந்தகருஞ் சீரகந்திப் பிலியுடனிந் துப்புப்
போதாய நாகணநந் திக்கிழங்கு கடுகு
பொருந்துள்ளி சரிநிறுத்துக் கர்ப்பாணி லரைத்துத்
தாதாக வளர்ந்தேறு விரைப்படியுள் ளருந்தச்
சட்டெகுத்துப் பிலிகையட்டி தன்னில்விரைந் திடுமே

விரைந்தேகா திருந்தாலே மருந்து கேண்மின்
வேலியுடன் செருப்படிபா வட்டை நொச்சி
வரைந்தாரை கொடிப்பாலை முள்ளி யர்க்கு
மாதுபிரா யிலைக்கள்ளி முருங்கை கொற்றான்
பரந்தகை யாந்தகரை யிலையோ டொன்று
படி தகர்த்துச் சாறுழக்கு முல்லை வேரும்
அருந்தாத பாதிரிவேர் வில்வம் வட்டு
டன்னெருஞ்சி கொடுவேலி யங்கு வேரே 256

வேருடனே கொடிக்கழலின் பூறல் நொச்சி
மிகப்பழுத்த சாரணைவேர் கொளுஞ்சி சிந்தில்
பாரில்நில வாகைவேர் குறிஞ்சா வேரும்
பருத்ததழு தாழைவேர் நிறுத்துத் தூணி
நீருடனே யதனிலொன் றாகக் காய்ச்சி
நிறையாக வடித்துப்பின் கடுக்காய் நாலு
சேரவிடித் தூத்தூணி யோரிற் காய்ச்சிச்
சிதக்கவொரு நாழிகண்டா லிறக்கிக் கொள்ளே 257

சிறக்கவிரு நாழியுள்ளி காடி தன்னிற்
செறியவரைத்துக் காய்ச்சி நாழி செய்து
பிறித்தபடி யோரொன்று நாழி தானும்
பெருகாமற் கூடவிட்டங் கெள்ளி லெண்ணெய்
முறித்திடுநீர் நானாழிக் கிரண்டா மெண்ணெய்
முற்பட்ட மருந்துடனே கரைத்துக் காய்ந்தால்
அறுத்தமேற் பொடிகுப்பை தேவ தார
மதிமதுரஞ் சீரகத்தோ டோமங் கொள்ளே 258

கொள்ளுநந்திப் பிலிமஞ்சள் மிளகு சுக்குக்
கூறுநெல்லி கடுநான்றி கொத்த மல்லி
மெள்ளவிடித் துப்பொடித்துக் காய்ச்சி யெண்ணெய்
மேல்வீசிப் பொடியுடனே பனையின் கட்டி
உள்ளருந்தும் படிகடுக்கா யொன்று நேரே
யுதரமிண்டில் நேர்வாள முடனுட் கொண்டால்
விள்ளவொணுப் பஞ்சகுன்மம் விரைந்தே யோடி
விடுமென்று வாகடநூல் விதித்த தன்றே 259

விதித்தசிறு குறிஞ்சியிரு நாழி தூளி
வெள்ளுள்ளி நாழிமிள குரியிந் துப்புக்
கதித்தபல நாலுகருஞ் சீர கந்தான்
கருதுமுரி வேர்க்கொம்பு நாழி யோமம்
மதித்தகடு குரிகச்சல் மச்சங் தன்னில்
வன்சிரத்தைக் களைந்துபொடி தூளி யெள்ளில்
மிருத்தபுண்ணாக் குப்பொடியு நாழி தேங்காய்
மிகவத்தற் பொடிநாழி நிறையிற் கூட்டே 260

கூட்டுபனங் கட்டியொரு நாழி தன்னிற்
குறையாதே பழத்தேங்காய்ப் பூவு நாழி
வாட்டமுடன் புடவையிற் பொடித்த தூளி
மண்கலசந் தனிலடைத்து நாளிற் கொள்ளிற்

கூட்டெடுத்துப் பிலிகையட்டி கவுசி குன்மஞ்
சேராத நீராமை பஞ்ச குன்மம்
நாட்டமுடன் சுரர்புரந் தன்னிற் போந்த
நாரதனார் மருந்தெனவு நல்கு நீரே 261

நீரணுகா தேயுரிய வாட்டுப் பானு
நீண்டசது ரக்கள்ளிப் பாலா மாக்குப்
பேர்சிவதை வேருமிரு பலமா மஞ்சள்
பெரும்பீலி யிற்றாளி கூட்டிக் காய்ச்சிப்
பார்ணிய குழம்பைபொரு சுண்டைக் காய்போற்
பரிவிட்டே யுள்ளருந்த மிகுந்தால் மாற்றுச்
சிரணிய தேனுவின்மோ ருள்ளே கொள்ளத்
தீயிலிடு நீரெனவே திருமாதே 262

மாதேகேள் மிளகுசொண்டி கடுக்காய் முற்றி
வளவெருக்கிற் சமூலத்தைத் தகர்த்து நீரில்
மீதான வாளந்தா னெட்டொன் றானல்
விரைந்தருந்த வூணகம் பஞ்ச குன்மம்
தாதேறுஞ் சமன்மூட மையமெய்யிற்
றடித்தகுட கரியெருத்துத் திரண்ட சூலை
தீதேவா ராதுப்பி லப்பே போலத்
திரண்டகுட லுட்சடமுந் தீர்ந்து போமே 263

சமுத்திராசுத்திநெய்

தெசமூல மோரொன் று பதின்பலமா மணக்குச்
சிவதைபுங்கு காக்கணஞ்சா ரணையெருக்கு முருங்கை
பசுநீர்மைக் கொடிக்கழற்சி யாகவினை யொன்று
பதின்பலமாய்த் தறித்திடித்துப் பன்னிரண்டு மரக்கால்
வசமாக நீர்வார்த்துக் காய்ச்சிநா லொன்றாய்
வற்றியபின் பிழிந்ததனை வடித்துவெள்ளை யுள்ளி
பிசகாம லேநூற்றின் பலமதிலே நசுக்கிப்
பேசுமிரு தூணிநீர் வார்த்தெரித்துக் காய்ச்சே 264

காய்ச்சிநா லொன்றுனாற் பிழிந்து முந்த வடித்த
கஷாயமதிற் கலந்துகடற் சுத்தியென்னு மதனைக்
கூச்சமற வேநாற்றின் பலமெட்டி னுடனே
குழியிதழி விட்டவித்துக் கொண்டுவெந்து றியநீர்
மாய்ச்சலற வடித்ததையு முன்கஷா யத்தில்
வார்த்ததனிற் றசையுலர்த்திப் பதின்பலந்தா னரைத்து
ஓச்சமுறக் கஷாயத்திற் கரைத்தாயி லின்றே
லுவாயின்றேல் வெள்ளுருநவை யிவையொக்க விடுமே 265

இடு*வன்னி வேர்ப்புறந்தோல் சாரணைவே ரதுவு
மேரண்டக் காய்புளியி லிணங்குபொருக் குடனே
விடுசெங்கீ ரையிண்டு சுடுநீறோ ரொன்று
விரும்புபுனல் நாளுழி தனிற்கரைத்து வடித்தே
அடுமுன்னைக் கஷாயத்தில் வார்த்ததிலே கரைக்கு
மம்மருந்து கேள்மிளகு சுக்கரத்தை காயம்
கொடுவேலி வேரதனிற் புறந்தோல்திப் பிலியுங்
கூறுதிரி பல்கடுகு ரோகணியுங் கொள்ளே 266

கொள்ளுகருஞ் சீரகஞ்செவ் வள்ளியது தன்னிற்
கொடிசிறுமு லகஞ்செவியங் கொத்தமலி தகரம்
தள்ளரிய புனமுருங்கை வேர்சீனக் காரஞ்
சவர்க்கார மிந்துப்புச் சதகுப்பை யுடனே
விள்ளுமச மோதகங்கற் கடகசிங்கி சிவதை
வேருடனே நேர்வாளங் கச்சோலஞ் சதுரக்
கள்ளியின்வேர் காக்கணம்வேர் செங்கொட்டை யொன்றைங்
கழஞ்சரைத்துக் கரைத்துக்கஷா யத்திலிடுங் கடிதே 267

கடிதிலறு நெய்நாழி யளந்ததிலே விட்டுக்
கறந்தபசுப் பால்நாழி யாறுமதில் விட்டு
நெடிதெரித்துக் கணபதியைப் பூசித்து வடித்து
நேரமிரு கழஞ்சுநக்க நீராமை யெடுத்துக்

---

*வன்னிவேர்--கொடுவேலிவேர்

கொடியகுன்மம் பிளிகையட்டி யோடுகுடல் வாதங்
கூறுமுத ரந்தனிலே கொண்டநோய் பலவும்
படியிலே தீருமெனச் சமுத்திரா சுத்தி
பாவாணர் கொண்டாடிப் பகர்ந்தனர்பே ரிதற்கே 268

சமுத்திராசுத்திநெய்-2

சமுத்திரா சுத்தியிற் றண்ணீ ரின்றி
மதிபெற வெந்த மாமிசம் பதின்பலம்
இஞ்சி பதின்பல மிதனுடன் கூட்டி
மிஞ்சுமெவள் ளுள்ளியு மேவேற பதின்பலம்
அஞ்சவே வார்த்துத் தாழாவிழக் குறுணிநீர்
நாலொன் றாய்க் காய்ச்சி நலம்பெறப் பிழிந்து
விதிபெறுங் கற்கம் விளம்பக் கேளீர்
மதிகொடு வேலியும் வளர்ந்த முருங்கையும்
இந்துப்பு மோதக மிருசீ ரகமும்
வந்தமுக் கடுகம் வளர்பெருங் காயம்
செவ்விய மிடவகஞ் சிவதை வேரதுவும்
அவ்விய மில்லா யத்தித் திப்பிலி
சிறுமூ லகமுஞ் சிறுபுள் ளடிவேர்
உறுமிவை கழஞ்சா யொக்க நிறுத்து
முற்கஷா யத்தி னுற்றவந் நீரால்
அரைத்துக் கரைத்தே யாவின் னெய்யொடு
பாலுங் கூட்டிப் பதத்தில் வடித்துத்
தினமுமுக் கழஞ்சுநெய் மகிழ்வுடன் கொள்ளக்
கனம்பெறு மகோதரங் கவுசிகை யட்டி
குன்மமோ ரெட்டுங் குறித்தநீர்க் கோவையும்
வன்மமார் சூலையும் வடிவேல் முருகன்
பாதந் நோக்கும் பத்திசெய் யடியவர்
மனநோ யகலும் வாறே போலத்
தீர்ந்திடு மென்று செப்பினர்
ஆய்ந்திடு முள்ளத் தருந்தவத் தோரே 269

கொச்சிநெய்

கொச்சிசா றிணையுடனே பொன்னாங் காணி
நுவலுமிவை தளிரொன்றோர் பிடிய தாக
நச்சியவே ரழிஞ்சிலைப் பிடிய தாகு
நல்லவரை பொடியுடன்குந் துருக்கஞ் சுக்கு
மெச்சியதிப் பிலிசயிந்த மிவையோ ரொன்று
விளங்கியமுக் கழஞ்சுகொண்டு முருக்கி லுற்ற
பச்சிலையின் சாற்றரைத்து நெய்யுங் கூட்டிப்
பதத்திலே வடித்திறக்கிப் பாரில் வையே 270

வைத்தகடு குடனரைத்து நெய்யுந் தின்ன
வலியபெரு வயிறுபல குன்மம் வெப்புத்
தொத்தியமா பாவைதீ ராமை நீரிற்
றுவழ்தவளை யிளைப்புடனே சொல்லு மற்றைப்
பித்தமுறு பாண்டுவகை சோகை யெல்லாம்
பிறங்குவைவேற் குருபரன்ற னருளைப் பெற்றோர்
சித்தமுறு விளையெனவே யேகு மென்று
தேர்ந்ததுறு முனிவர்முன் செப்பி னாரே 271

நவச்சாரமெழுகு

எருக்கலையின் பாலுழக்குக் †காட்டு மேதி
யின்பாலு மோருழக்குக் கலந்து கொண்டு
வருக்கமுறு நவச்சாரங் கழஞ்சு பத்தில்
வார்த்தரைத்தே யிருழக்கு மான பின்னர்ப்
பெருக்கமுறு மேமண்டத் தெண்ணெய் விட்டுப்
பின்னமற வரைத்துமெழு காய்வ டித்துச்
சுருக்கமுற மிளகளவு வெந்நீ ரிற்கொள்
சுகமாகு மகோதரநீ ராமை தானே 272

---

†காட்டுமேதியின்பால்—கள்ளிப்பால்

நவச்சாரக்குழம்பு

தானமுறு கிருமியொடு பலரும் போகுந்
சரீரத்தின் கூறுடனே நோயுந் தண்டே
ஈனமறச் சுண்டைக்கா யளவு மேற்று
மின்னமொன்று நவச்சாரஞ் சாதி லிங்கம்
கானமுறு நற்சீர மசம தாகங்
கருதுசவர்க் காரமுடன் குதந் தானும
மானமுறு முக்கடுக மயத்தின் றானும்
வகுத்தபடி சமன்கொண்டு மூலி கேண்மின் 273

மேனியுடன் சிறியகாஞ் சொன்றி யிஞ்சின்
விளங்குகுரு கொடுபிரமி பங்கம் பாளை
ஈனமற விலைமெல்லாஞ் சமனாய்க் கூட்டி
யியம்புசாக் கதனிறைகொள் கடுக்காய்த் தாளும்
மானமுற விருவகைக்குஞ் சமன தாக
வகுத்துக்கொண் டெலுமிச்சம் புளியி லேறுடு
கானமுறு மிளகீரும் படியொவ் வொன்று
கலந்துருழும் பாக்கியுண்ணைக் கலையு நீரே 274

உள்ளியாமணக்கெண்ணெய்-1

உள்ளி யிஞ்சி யிந்துப்பு வற்ற லணைத சீவந்தி
கொள்ளு நிலவா கைசமூலங் குலவு மிளகு திப்பிலியும்
முள்ளே ரண்டவெண்ணெயுடன் முடக்கொற்றானிலையுங்கொள்
தள்ளா தொக்கக் கள்ளிப்பால் தன்னோ டெரித்துக் கொள்வீரே
கொள்வீர் குன்மங் குடல்வாதங் கொடிய பிலிகை யட்டவிகை
உள்ளே திரண்ட மலக்கட்டி யுடனே பிறந்த சஞ்சிதம்
கொளவோர் பக்க சூலைவலி குமிறும் வாயுப் பெருவயிறு
பிள்ளை கழிந்து போமென்று பெரியோ ருரைப்ப திதுவாமே

உள்ளி மிளகு மோரொன்று ஒருநா ழிக்கிங் கொருபலந்தான்
விள்ள வரிய கொடுவேலி வேரு மிஞ்சி யவ்வளவு
வள்ளி முருகன் கொடிமங்கை மருவும் பருவ மாவின்பால்
கொள்ளும்படி யேயரைத்துநெய்யிற்குழப்பிக்காயச்சியருந்திடுமே

அருந்து நாலா மடைவுதன்னை யறையக் கேளு நவச்சாரம்
இருந்துங் கல்நா ரிந்துப்புச் சேரு மிந்து வுலுவுள்ளி
மருந்துங் காந்தஞ் சாதிலிங்கம் மருவு மிரும்பிற் பொடிசெய்து
பொருந்துஞ்சா மனும் வேளையினிற் பொடியும்படத்திற் பொடித் துண்ணே

உண்ணு மஞ்சா மடைவுதன்னி லொழுங்கைக் கேளு மிந்துப்பு
மண்ணில் சீலிப் பாலுழக்கில் மருவு நஞ்சு வாங்கிப்பின்
நன்று மோமமிளகுள்ளி நலஞ்சேர் கார மிங்குலுவா
பண்ணும் படியா யரைத்துவரால் பருகும் படியே யூட்டீரே

ஊட்டிக்கள்ளி யுதரத்தி னுள்ளே யிருத்திக் கலையில்மண்ணாற்
பூட்டிப் புறத்தி னுள்ளறையிற் பூமி யடக்கி மேலெரித்து
வாட்டிப் பொடியா னல்மருவி மருந்தை யருந்த மண்டலமும்
ஆட்டிற் கல்லு நவச்சார மவிஞோ டிங்கு மருந்துகளே 280

அருந்து மாறு மடைவுகொள்ளு மாறு நாழி குமரியினீர்
பரிந்து புகட்டி யறுநாழி பதத்திற் காய்ச்சிப் பின்னொன்றாய்
இருந்த படியில் வடிநீரி லெருமை மோரு மிருநாழி
பொருந்துங்கடுக்காய்ப்பொடிநாழிபோற்றுஞ்சிவதைப்பொடியுழக்கே

உழலும் பொடிநா கணநந்தி யுற்ற மூலப் பொடிநாழி
மிளகோ டுள்ளி யோமமிங்கு வெண்காரம் வெவ்விய மூலம்
வளரு மூளரி நவச்சாரம் மருவிந் துப்புச் சவர்க்காரம்
பழைய வுலுவாத் திரிகடுகு பகருங் கொத்த மரைபொடியே

அரைக்கு மருந்தா மணக்கெண்ணெய் நெய்யளவிற் கரைத்தங்
கெரித்து மேவப் பதங்காய்ச்சி வடித்துக்கழஞ்சு தான்கொள்ளிற்
செரிக்கு மெருத்துப் பிலிகையட்டி செரிநீராமை பஞ்ச குன்மம்
உருககுங் கவுசி புட்கழிவோ டுண்மூ லத்தி னுடுக்களுமே 283

ஒடுங்கு மேழா மடைவுசொல்வ னூறுந் தயிரிற் பனநீரில்
இடிஞ்சீ ரகமிள கிந்துப்போ டேழுதிப் பிசிசி னக்காரம்
கடுஞ்செவ் வியநேர் சிறுமூலங் கனல்வெண் கார நவச்சாரம்
விடுஞ்சீ ரரைத்து நெய்நாழி விட்டுக் காய்ச்சி வடித்திடுமே 284

உள்ளியாமணக்கெண்ணெய்-2

சொலத்தகு வெண்கா யுள்ளி தோலது போக்கி நாற்றின்
பலத்தினை யரிந்து தாணி நீரது விட்டுக் காய்ச்சி
நலத்துடன் குறுணி யாகுல் நயமய கடுக்காய் நெல்லி
செலத்துடன் மிளகு சுக்குத் திப்பிலி தான்றிக் காயே 285

அன்புடன் வசம்பு வீழ்ரா லரிசியு மதனோ டான
தென்கொடு விளங்க மத்தித் திப்பிலி கொடுவேல் வேரும்
பென்சவர்க் கார மோதம் வேண்டியே யிவைகள் கூட்டித்
துன்பறு செவிய முந்துவர்ச் சிகையொன்று முக்க ழஞ்சே 286

முக்கழஞ் சாகக் கொண்டு முறைமையா லரைக ரைத்து
இக்கணங் கள்ளிப் பாலு மிதம்பெற வுழக்குக் கூட்டி
அக்கணஞ் சிவதை வேரிற் புறந்தோலு மொருபலத்தை
வக்கணை மாகத் தானே வளம்பெற வரைத்துக் கூட்டே 287

ஏறசிற் றும ணக்க மெண்ணெயு மிரண்டு நாழி
கூறிய பதத்தில் வெந்து குலாவியே வடித்துக் கொண்டு
ஊறிடு மோர்நாட் கேழ்நா ளொருகழஞ் சுள்ளேகொள்ளில்
மீறிய வாத குன்ம மிகுத்திடு பித்த குன்மம் 288

மனவிய சத்தி குன்ம மண்டியே யெரிக்குங் குன்மம்
கனவலி குன்ம மன்றிக் கனம்பெறு வயிறுஞ் சொல்லிற்
றனமகோ தரங்க டாமுந் தக்கழுத் திரகி ரீச
முனவிய வுதர வாத முயர்வலி யோடெ குத்து 289

போதமில் சூலை தானும் புகலுமட் டவிரோ தாமை
சீதவன் னோவு துட்டக் கிராணியும் பக்க சூலை
பேதமில் குடல்வா தஞ்சொற் பெற்றிடும் வயிற்றின் மற்றும்
ஓதிய வியாதி தீரு முண்மையி துண்மை யாமே 290

எருக்கலம்பூச்சூரணம்

பொரிகாரம் பெருங்காயஞ் சீனக் காரம்
புகல்வசம்பு கறியுப்பே பாடசம தாகம்
திருவாருஞ் சாதிலிங்கஞ் சூத மெல்லாஞ்
சேரவொரு நிறைகொண்டே பெருக்கம் பூவின்
வருசாற்றா லரைத்துமண்ணின் கலயத் துள்ளே
வைத்ததன்மேற் சில்லிட்டுச் சீலை மண்செய்
தொருவாது சிறுபுடமிட் டெடுத்துப் பற்ப
முட்கொள்ளப் பணவிடைநோ யொழியு மன்றே 291

வெண்காரச்சூரணம்

பேதிக்கு

வெண்காரம் வெண்காய மரிதாரங் காந்த
மிளகுதிப்பில் வசநாபம் பெருங்காயஞ் சுக்குத்
தண்பாகு நெல்லிமஞ்ச ளிந்துப்புக் கெந்தந்
தயங்குகடுக் காயோம நேர்வாளங் கூட்டி
நண்பான பற்பமிவை பேதிக்கு நெய்யில்
நவிவெப்புக் குளிர்மிகுந்தால் நயந்தருந்தத் தேனிற்
பண்பான கவிகைமகோ தரமட்டி வெப்புப்
பாவைபித்த வாயுவிவை பறந்தோடிப் போமே 292

இலவணக்குழம்பு

நாயுருவி யுடன்குமரி கதலித் தண்டு
நல்லபணி தாங்கியெனு மூலி தானும்
ஏயவிவை தனித்தனியா யுலர்த்திச் சுட்டே
யெடுத்தறவிற் காய்ச்சுமுப்புப் பலமொவ் வொன்று
தூயவெவச் சாரமுடன் பூவி னீறு
துலங்கவிவை தாமொரு பலம்வைத்துப்
பாயநவச் சாரமுடன் கல்லி னுப்புப்
பலமெட்டு வெடியுப்புப் பலமி ரண்டே 293

இட்டதிலே கோவினீர் வெள்ளாட் டின்னீர்
றிளைவகைக்குப் படிபெட்டு விடுக லக்கி
மட்டுறவே தெளிவிறுத்துத் தீபம் போல
வருநெருப்பிற் காய்ச்சியே யுப்பெ டுத்து
வெட்டமுறு பேய்க்குமட்டிக் காயின் சாறு
வடித்தெட்டுப் படிகரிப்பா னெல்லிக் காயும்
சட்டமுறு நிலவாகை சம்பீ ரத்தின்
கனியிவற்றின் சாறுபடி வகையாய்க் கூட்டே 294

கூட்டுமிலைக் கள்ளியுடன் சதுரக் கள்ளி
கொடிக்கள்ளி திருகுகள்ளி யெருக்குத் தானும்
நாட்டமுடன் சாறுவகை படியிற் பாதி
நவில்கொற்றான் முசுமுசுக்கை புரசு கொன்றை
தேட்டமுட னிவைசாறு படியி ரண்டு
சேர்த்ததிலே கடுதான்றி சிவதை யின்வேர்
ஈட்டுவெல்லை யுள்ளிவகை பலமொன் றுக
விடித்தரைத்துக் கலக்கியது திரளக் காய்ச்சே 295

காய்ச்சியதி லிரண்டுபடி யேரண் டெண்ணெய்
கதியாமற் றேனுமொரு படியை விட்டு
வாய்ச்சதொரு குழம்பாகப் பண்ணிக் கொண்டு
வருத்தெடுத்துப் பாக்களவா யுள்ளே கொள்ளப்
பாய்ச்சலுறு ரீராமை கவுசி கென்னை
பருமுதர நோயனைத்தும் பகருஞ் சூரன்
மாய்ச்சலுற வெறிந்தவடி வேலன் பாதம்
வணங்குமவர் பிணியெனவே மாய்ந்து போமே 296

சோகை

தேசிக முனிவன் கூறு முதரநோய் செய்கை தன்னிற்
பேசிய சோகை பாண்டு விஷபாக மொடுகா மாலை
கூறிய நாலு ரோக மொடுகுணஞ் சிகிச்சை யாதி
காசணி முலையாய் சொல்வன கருதிநிஞ் சோகை கேளே 1

சோகைத்தொகுப்பு

சாத்தியம்-3 அசாத்தியம்-3

காணுமே வாதம் பித்தங் கபஞ்சுரஞ் சன்னி ரத்தம்
காணுமே சோகை யாறிற் கருதிய பித்த சோகை
காணுமே சுரமி ரத்தம் மூன்றிவை சாத்தி யங்காண்
காணுமே வாதஞ் சேற்பஞ் சன்னிமூன் றசாத்தி யங்காண் 2

சாத்திய வசாத்தி யங்கள் தருமுறைப் படியே கண்டு
பார்த்திடுங் குணங்கள் செய்யுங் கிரியையும் பகர்ம ருந்தும்
மூத்தவர் மொழிந்த நீதி முறைதவ றாத வண்ணம்
ஏத்திய தமிழி னூலே யியம்புவன் குறித்துக் கொள்ளே 3

சாத்தியம்-3-ல்

1-பித்தசோகை

அடிவயி றதைத்து முகமுமதைத்தகன் பார்ப தும்மிகவெளிறித்
தடி தலைதிமிர்த்துக்கண்வெளுத்துத்தழன் றுபசி பாலுணர்ச்சிகெட்டு
மடிவாய்க் காலு மிகவோய்ந்து நாக்கு முதடு மஞ்சளதாய்
வடிவா யிருகா தடைத்தடைத்து வருங்காண் பித்த சோகமதே

கையுங் காலு முகம்வயிறுங் கண்ணும் பல்லு மலஞ்சலமும்
செய்ய நிறமாய் வீக்கமுறுந் தேகம் வெளுத்துக் கண்டுங்கும்
ஐயும் பித்துங் கலந்துவரு மன்னஞ் செல்லா தாகமுறும்
தொய்யின் முலையாய்பித்தமஞ்சட் சோகையென்று சொல்லுவரே

வயிறு முகமுங் கனத்ததைத்து வாய்நீர் பெருத்து மஞ்சணித்து
அயிலு மசனஞ் செறுத்துவிம்மு மையும் பித்து மந்திக்கும்

மயிலின் றாக்க மதுபோலச் சற்றுச் சற்றே மயக்கமுமாம்
துயிலாம் வாரா திக்குணங்கள் பித்த சோகை யெனச்சொல்லே

சோகமே யெழுந்த போது தோன்றிடுங் குணங்கள் கேளாய்
சோகமே யிரும லாகு மிளைப்பொடு தூப்பு முண்டாம்
சோகமே கைகால் வீங்குந் துடியென விடிக்கு நெஞ்சு
சோகமே பரிதா பத்தோ டிப்பிசந் தோன்றும் பாரே 7

நாபிமேல் நெஞ்ச மட்டுங் கனத்திடு நரம்பு தோன்றும்
மேவிய விஷநீர் பாய்ந்தே மேவதி சார மாகும்
பாவையே நாவுங் கண்ணும் பாண்டமும் வெளுத்துக் காட்டும்
ஓவிய மனையாய் பித்த சோகையென் றுரைத்தி டாயே 8

2-சுரசோகை

கரமொடு காலு மோயுங் கண்ணது துலாரங் காந்தும்
உரமுறு பெலமுங் குன்று முணவின்றி வீக்க மாகும்
பொருமிடும் வயிறு கண்டம் புகைந்திடு மிரும லுண்டாம்
சுரமுறு சோகை யென்று சொல்லுவர் முனிவர் தாமே 9

ஊதை மிகுந்து நாவுலர்ந்தே யோங்கா ளித்து நெஞ்செரித்து
நாத மடைத்து விழிபுகைந்து நாவு முடம்புஞ் சிவந்திருக்கும்
பாத கரமுந் தாகமுறும் பரிதா பித்துக் கண்டுங்கும்
வேத முனிவ னுரைத்தருளுஞ் சுரசோ கத்தின் குணமிதுவே

3-இரத்தசோகை

மயங்கிடும் வெளுக்குந் தேக முதரமு மந்தம் பற்றும்
துயங்கிடுஞ் சடம்வேர் வாகுந் துடியென விடிக்கு நெஞ்சு
பயங்கொளுஞ் சோரி சக்கு மிருமலு மிளைப்பும் பற்றும்
இயம்பிடும் வீக்க மாகு மிரத்தமாஞ் சோகை தானே 11

வயிறுங் காலு மதைப்புண்டாம் வாய்நீர் பெருத்து மயக்கமுண்டாம்
துயிலும் வாரா திருமலுண்டாந் தாப்பு மிளைப்பு முவாந்தியுமாய்ப்

[illegible]

பயிலு முணர்வு மறக்குந்தா னறவே நட்ட மாகுமிது
குயில்மென்மொழியா யிரத்தமுறுஞ் சோகை செய்யுங் குணமாமே

அசாத்தியம்-3-ல்

1-வாதசோகை

தேகமுந் தூல மாகிக் கருமைமேதாய்ந் திருமலெய்தி
ஆகமு மகன்று காட்டி முகமொடு வயிறதைத்துத்
தாகமும் பசியு மின்றி மலஞ்சிக்கித் தலைசு ழன்று
மோகமாய் வீங்கும் வாத சோகத்தின் முறையி தாமே 13

கண்ணு முகமு மலநாவுங் கையுங் காலுங் கருதவிரும்
நண்ணு மலமுஞ் சலமொன்பான் கருமை நிறமா மதுநாடல்
மண்ணில் நடக்கில்கிறுகிறுத்துமலத்துத்தடித்துவயிறதைக்கும்
திண்ண மிதுவே வாதநோய் சேருஞ் சோக மெனச்செப்பே

2-சேற்பனசோகை

சூக்கிடுந் தேக மாகி யிளைப்பொடு துரப்பு முண்டாய்
ஊக்கமே யின்றிக் கைகா லோய்ந்துநெட் டுயிர்ப்பு முண்டாய்
வீக்கமாம் வயிறு கைகால் குளிர்ந்திடும் வேர்வை யாகும்
தாக்குசேற் பனத்தின் சோகை தான்செயுங் குணங்க ளாமே

மயங்கெட வுதரம் விம்மி யன்னமும் மறுத்துக் காட்டும்
நயம்பெற வெளுக்கு மேனி நாவழு வழுத்திருக்கும்
பயங்கொளு மிளைப்பு விக்கல் பரிதாப மோகம் பற்றும்
தியங்கிடுஞ் சேற்ப சோகை செய்குண மென்று செப்பே 16

3-சன்னிசோகை

தொந்தசோகை என்பதுமது

மந்தமே பற்றுங் கைகால் வயிறதைத் திளைப்பு முண்டாம்
உந்திய வாத பித்த கபமுடன் கோபித் தோங்கும்

அந்த*மால் நிறமு தாகுஞ் சுரமொடு பிரமை யாகும்.
தொந்தமாஞ் சோகை யென்பர் சொற்றமி ழுணர்ந்த தூயோர்

சோகையின் தேகவேறுபாடு

வாத சோகை கருமையதாம் பித்த சோகை மஞ்சளிக்கும்
ஓது சேற்ப சோகைவெண்மை யுறுமே பிரத்த சோகையது
மாதே செம்மை நிறமாகுஞ் சன்னி சோகை மால்நிறமாம்
தீதி லுதிர சோகையது புகரில் நிறமாந் தேர்ந்தறியே 18

பதினறுவயதிற்காணுஞ் சோகைசெய்யுங்குணம்

இளநோய் சோகை யீரெட்டா மிந்த வாண்டி லுறுமென்னில்
எழுவே தலைநோம் வயிறுவிம்மி யிரத்த மலமுங் கெட்டுலர்ந்து
அழகை யழிந்து விழிநாக்கு மஞ்சட் படவே வெளுப்பேறிக்
கொளுமே மெய்ப்பு மிளைப்பதுவுங் கொடிதா நெஞ்சுத்துடியாமே

இளஞ்சோகைக்கு மருந்து

கீழ்காய் நெல்லி வேர்கழஞ்சு கிளர்பொற் கடுக்காய் முக்கழஞ்சு
தாளா நின்ற மிளகொருகால் சற்றே புளித்த மோருடனே
வீழ்நா ளந்தி சந்திபுமே யெடுத்திட் படியே குடித்துவரில
ஆழ்வா ருலகுண் டுமிழ்ந்ததுபோ லகன்றே போகு மிளஞ்சோகை

லோகசூரணம்

அரபொடி யிருப்புக் கிட்ட மானபச் சிலைக ராப்பு
வருமஞ்சி மதுர மேலம் வசுவாசி யிரண்டு சீரம்
மருவுறு பச்சை திப்பிலி மரிசநற் றகர மோரொன்
றொருகழஞ் சிடித்துச் சீலை யுறக்கிளி முடிந்து கொண்டே 21

கோமயந் தன்னி லூற விட்டெடுத் ததனிற் பின்னர்
ஆயிலை நாக வல்லிச் சாறுவிட் டரைத்து லர்த்திப்
பாமுறை யரித்தி ரண்டு பணவிடை தேனிற் கொண்டால்
நோமுறை வந்த சோகை நுவன்றிடு பிணிகள் போமே 22

---

*மால்நிறம்—விட்டுணுவின் நிறம்—நீலநிறம்

போந்திரி நாட்கொ ருக்காற் புகன்றிடு பற்பத் தோடே
சேர்ந்திடு மோரண் டெண்ணெய் சேர்த்திடும் பேதியாக
மாந்திடு மெழு நாட்பின் மதித்தமோர் கூட்டிக் கொள்க
ஆய்ந்திடு பத்தி யத்தோ டருந்தவே முனிவர் சென்னார் 23

பாண்டுரோகம்-5

திருமறை முனிவன் கூறும் வாகடச் செய்கை தன்னில்
வருமுறை பாண்டு ரோக வகைதொகை யைந்தாச் சொல்வர்
உருகெழு வாத பித்த கபங்களி லொவ்வொன் றாகும்
¶ திரிவித தொந்த மொன்று சேர்மிருத் திகையா லொன்றும்

பாண்டுரோகத்தின் பொதுக்குணம்

தாப்புட னிளைப்பு முண்டாய்ச் சுவாசமு முட்ட தாகி
இரத்தமுங் கெட்டுச் சோர்வா யிந்தியங் கொள்ளா தாகி
உரைப்புறு மசனம் வேண்டா திட்சுர மாகிப் பாண்டம்
இரைப்புமாய் வெளுத்து நாசி யிற்சளி தோன்றிச் சிந்தும் 25

செவியிரைக்குந் தலைசுற்று முரோமம் வேறாந்
தேகமிகக் கனமாகு முகமும் வீங்கும்
சயிகெடுக்கு முதாத்தீ மந்த மாகுஞ்
சளியொழுகுஞ் சினத்துவிழுந் துடியா நெஞ்சு
குவிமுலையாய் புத்திமிக மந்த மாகிக்
குற்றமுறுந் தாதுகெடுங் குளிர்ச்சி வேண்டா
தவிபுலத்து முனிவரரிவ் வண்ண மாக
வறைந்தனர்க ளாராய்ந்து கண்டு கொள்ளே 26

1-வாதபாண்டு

வாதத்தி லெடுத்த பாண்டு வருங்குணம் வலிகுத் துண்டாம்
தீதுற்ற வுடல்நடுங்குஞ் சேர்ந்திடும் வீக்க மெய்ப்புப்

¶ திரிவித தொந்தம்—வாதம் முதலியமூன்றும் தொந்தித்து உண்டாகும் சன்னி பாண்டு

பேதுற்று மலச லங்கள் நகங்களுங் கறுப்புக் கொள்ளும்
கோதுற்ற வயிறு விம்முங் கொண்டிடு மரோசி கந்தான் 27

உரைத்திடுங் கண்ணு நாக்கு முதட்டுடன் சரீரந் தானும்
புரைத்துற நிறமே கெட்டுப் பொரிக்கிடு மலங்க டானும
விரைந்தடங் குழலா யிந்த மெலிவுகள் கண்ட போதே
உரைத்தனர் வாத பாண்டென் றுணர்ந்திடு முனிவர் தாமே

கையுங் காலுங் கனத்திளைத்து கண்ணு முகமும் வயிறதைக்கும்
மெய்யுங் கனத்துவெளுத்திருக்கும்வெண்ணீர் நுரையாய்வயிறழியும்
ஐயுங் கோபித் திளைப்புண்டா மன்னஞ் செறுத்தங்குவாந்திக்கும
செய்யும் வாத பாண்டுவெனத் தெரிந்த பெரியோர் செப்பினரே

பித்தபாண்டு

பித்தத்தி லெடுத்த பாண்டு பேசுநா வரட்சி யுண்டாம்
மற்றுடல் பசுமை யாகி மஞ்சளி னிறமு முண்டாம்
உற்றிடு மூர்ச்சை தாக மொளிகெடுங் கண்க டாமும்
சுற்றிடு மழற்சி வாயிற் றுர்நாற்றம் புளித்தேக் குண்டாம்

இருமலே யிளைப்பு நெஞ்சி லிடிப்புடன் றுரப்பு மாகிப்
பெருகவே நடக்கும் போது பேசுமுட் டதுவே யாகும்
வெருவுறக் கிறுகி றுக்கு மேனியும் வெளுத்த தைக்கும்
பெருகிய பித்த பாண்டு வாமெனப் பேசி னாரே 31

உதயமெய் யதைத்துக் கைகா லோய்ந்துடன் சுரந்து நோவாய்ப்
புதையவே வீங்குங் கண்ணும் போதவே வெளுக்குஞ் சோர்வாம்
பதகர மதிலு மிஞ்சிச் சொறிவதா யசறு பற்றும்
விதமுறு குணங்கள் பித்த பாண்டென விளம்பி னாரே 32

3-சிலேற்பனபாண்டு

மெய்யே வெளிறும்வயிறதைக்கும்வீங்கும்புறங்கால்புறங்கைகள்
கைகா லோயுங் கிறுகிறுக்குங் கண்ணு முகமும் பஞ்சாகும்

துய்ய மலநீ ரழாய்ந்துவிழுந் தொண்டை கசிந்து தூரப்புமிகும்
ஐயே ருக்கு மிக்குணங்க ளறிவாய் சேற்ப பாண்டெனவே 33

வேர்த்துவெருவிக்கண் குளிரும்வெச்சென் றிருக்கும்விலா நெஞ்சும்
ஆர்க்குந் துடிபோ லிடிக்குமது வையும் பித்துங் கலந்துவரும்
தீர்க்க மன்றி மறதியுண்டாந் திற்றி நாவும் வழுவழுக்கும்
பார்த்தா லுடம்பு வீக்கமுறுஞ் சேற்ப பாண்டு விதுபகரே 34

கண்ணு நாவு முதடுடம்புங் கருது மலமோர் பிரகாரம்
உண்ணுங் கரமுங் கால்தானு முடனே வெளுக்கு முககமதிற்
பண்ணுந் தாக முண்டாகும் பசியற் றிருகரும் பார்த்திதனை
எண்ணுஞ்சிலேற்பபாண்டுவென்றெழுதிவைத்தார்பெரியோரே

4-சன்னிபாண்டு

ஓதிய வாத பித்த சேற்பனங் கோபித் தோங்கும்
ஊதையு மிருந்து விம்மி யுதரமுங் காலும் வீங்கும்
பேதமா யிளைக்கும் விக்க லுவாந்தியும் பிரமை தாகம்
கோதையே சன்னி பாத பாண்டுவின் குணமி தாமே 36

கண்ணுக் தூங்கி முகமதைத்துக் கைகா லோய்ந்து கிறுகிறுக்கும்
உண்ணு மசனஞ்செறுத்துவிம்மி யோங்காளித்து நெஞ்செரிக்கும்
தண்ணீர் தவிக்கு நாவரளுந் தாக மோகம் பிரமையுமாம்
பெண்ணே கேளாய் திரிதோஷந் தொந்தித் தோங்கும்பெரும்பாண்டு

வன்னியுட னூதையையுங் கோபித் தோங்கு
மஞ்சணித்தே யிளைப்புமாய் மயக்க மாகித்
துன்னிருமல் கண்புகைதல் கைகா லோய்தல்
துரப்பெழுதல் பிரமையொடு சோக மாதல்
மன்னுநக முமலநீர் கண்வெளுத்தல்
வாந்திகொள்ளல் வயிறாதல் மானே கேளாய்
சன்னியுறு பாண்டுசெயுங் குணங்க ளென்று
சாற்றினார் வாகடநூல் தன்னை யாய்ந்தே 38

BHARANE PHARMACY
456, HOSPITAL ROAD
JAFFNA
DIAL. 7386

5-மிருத்திகாபாண்டு

முகமொடு புறங்கால் வீங்கு முட்டெ ளிளைப்பு முண்டாம்
மிகவுநெஞ் சிடிக்கு மண்ணை விரும்பிமென் மேலுந் தின்னும்
தகவுறும் வயிறு விம்முங் கிருமியு மலத்திற் பற்றும்
தோஷபடி குணங்கள் மண்ணாற் றோன்றிடும் பாண்டு வாமே

சிலபிரதிகளில் வேறும்
மூன்றுபாண்டுகள் கூறப்பட்டிருக்கின்றன
அவை பின்வருமாறு

1-சுரபாண்டு

காயு முடம்பி லெப்போதுங் கண்ணுந் தூங்கித் திருகிறேனும்
வாயு முடம்பில் விடம்போலாம் வாங்கிப் புசிக்க மாட்டாது
சாயங் கால மிருமலுறு முதரம் விம்முந் தாகமுறும்
பாயு நீருஞ் சுடுமலமும் பச்சென் றிருக்குஞ் சுரபாண்டே 40

2-இரத்தபாண்டு

சுரத்தினிற் பித்தந் தோன்றி யுதிரமே சொரிந்து கக்கும்
நெரித்திடும் புருவ முச்சி யிடித்திடு நெட்டை யுண்டாம்
கரத்தொடு காலு மோயுங் கண்முகம் புதைய வீங்கும்
இரத்தமாம் பாண்டு செய்யுங் குணமென வியம்பி னோரே 41

வாய்நீர் சுழற்றி நெஞ்செரிக்கு மலமுஞ் சலமுஞ் சிவந்திருக்கும்
தேனீ போல மிடறிரையுஞ் சில்லென் றடைக்கு மிருகாதும
ஊனே யுருக்குங் கபம்வீழு மோங்கா ளிக்கு முதிரம்விழு
மானே காலும் வயிறதைக்கும் வருத்தா ரிரத்த பாண்டுவென

3-மூலபாண்டு

கால்கை யோய்ந்துடல் காய்ந்து வெளுத்துநீர்
சால வேப்பலன் றூனுங் குறைந்திடும்
சூல மேற்கொண் டுணவு சுருங்கிடும்
மூல பாண்டின் குணத்தை மொழிந்தனர் 43

ஊதை விம்மி யுதரமும் வீங்கிடும்
பாத நீள்குறங் கைப்பற்றி வாங்கிடும்
தாது நாசம தாய்பலந் தங்கிடும
ஓது முலத்தி லுற்றிடும் பாண்டுநோய் 44

காமாலை

வரட்காமாலை

முகமும் வீங்கிக் கண்வெளுத்து மூச்சு நடக்கில் முட்டாகி
அகமுந் துடித்து நாவரண்டே யணுகுந் தாது கெட்டுவரும்
மிகவு மசனஞ் செரியாது மேனி வரண்டு வெளுப்பேறும்
தகவே சொன்னேங் காமாலை சாற்றுங் குணங்க ளிவையாமே

வாதகாமாலை

கரிமண் சாம்ப லிவைதின்னுங் கண்ணு முகமும் வெளுத்தைக்கும்
விரிய விலாவி விளைப்புண்டா மிருகால் முட்டுக் கடுத்தோயும்
பொருமும் வயிறு நெஞ்சிடிக்கும் போதந் தாழுங் கண்புகையும்
மருவும் வாத காமாலை வருத்துங் குணங்க ளிவையாமே 46

ஊதுகாமாலை

பொருமிடு முடம்பெண் சாணும் பொருத்துகள் தோறுநோவாம்
இருவிலா நெரிய வாங்கி யிளைத்திடு மூதை விம்மும்
கருதுநாத் தடித்துப் பேசுங் கபமிகுந் திரும லுண்டாம்
உருவிழி முகமும் வீங்கு மூதுகா மாலை தானே 47

மஞ்சட்காமாலை

கண்முக மலச லங்கள் கருதுநா வுதரங் கைகால்
திண்ணநா லூதி யொக்கப் பசலமே செறிந்து காட்டும்
உண்ணுநீர்த் தாகம் பற்றி யுதரத்து ளூதை விம்மும்
மண்ணிடை சுழலு மேனி மஞ்சட்கா மாலை மானே 48

கருங்காமாலை

அவயவங் கறுத்துக் காட்டி யயர்வொடு மயக்கம் வேர்வை
கபமுற விளைக்குங் கைகால் குளிர்ந்திடு நெஞ்சு காயும்
சுவையுறு மெண்ணெய் நெய்பா லுணவினுற் றிருந்த மாகும்
பவமறு முனிவன் சொன்ன பயன்கருங் காமா லைக்கே 49

காமாலைமூன்றின் நிறவேறுபாடு

வாதகா மாலைசெய்யுங் குணத்தின் பேத
மருவுநகங் கறுத்திருக்கும் பித்தந் தன்னால்
ஓதவரு காமாலை கண்ணு நாக்கு
மூத்ர முடன் மஞ்சணிக்குஞ் சேடத் தாலே
போதவரு காமாலை நகம்வெ ளுக்கும்
புகன்றகா மாலைதனிற் றிருந்த மானல்
பேதமுறு மென்றுமுனி வோர்க டேர்ந்து
பேசினர் குணங்குறிகள் பெருகத் தானே 50

காமாலையின் அசாத்தியம்

(பாண்டுசோகைகளுக்குமொக்கும்) N.B.

பெருகவீங் கிடுமு டம்பு பேசுமுட் டதுவு மாகும்
கருகிடுங் கண்ணு நாக்குங் கறுத்திடு பற்க டாமும்
உருவுறு மூத்ரந் தானு மொக்கவே பொருமி விம்மும்
வருமருந் தினுக்கு மிஞ்சு மற்றசாத் தியமென் றோரே 51

ஆறுப் பித்தம் பித்தபாண் டடைவே யக்கினி மந்தமுமாய்
வீறுப் பதத்தில் மிகச்சூழ்ந்து மெய்வாய் நாவு மிகவெளிறும்
மாறுப் பொருமன் மலமூறும் வலிக்கு நாறு மசனமின்றும்
ஊறுஞ்சலத்திலெண்ணெய்விட்டா லுடன்மேற் சேடம் படர்பாசி
படரும் பருத்தி போல்வெளிறும் பாதம் பன்னீ ராயூறும்
துடரு நரம்பு கருநரம்பாய்ச் சுவாசந் தூரச் சுழித்துநிற்கும்
சடாரந் தன்னின் மேற்றினவு சாரு முழலை சலம்பொசியும்
இடரே புரியுங் குணங்கண்டா லினைகண் மார்க்க சங்கடமே

சிகிச்சை

கீழ்காய்நெல்லிநெய்

மாறுங் கீழ்காய் நெல்லியின்வேர் மருவும் பலமூ வைந்தினுடன்
நூறுங் கடுக்காய் விரைபோக்கி நுணுக்கித் தூளி கொத்தமல்லி
நீறு முழக்கு நெல்லிக்காய் நிறையிற் பாதி சிவதையில்வேர்
தேற விடித்துக் கோசலத்திற் செறிந்த தூணி யிரண்டுவிட்டே

விட்டே நாலு நாளிற்பின் மிகவும் பிசைந்து வடிநீரில்
இட்டே கடுகு ரோகணியு மேலந் திப்பிலி மோதகமும்
மொட்டே சென்ப கங்கோட்ட மொழிந்த மஞ்சள்வேர்க்கொம்பு
மட்டாங் கழஞ்சே ரொன்றாக மருவ வரைத்துக் கரைத்திடுமே

மருவு மாவி னெய்புகட்டி வடித்து நேரங் கழஞ்சுகொளிற்
பொருமல் சோகை யுட்கழிவு பொறிசேர் துயரங் காமாலை
உருகும் பாண்டு வுள்ளடக்க முன்னும் பிறநீ ரூறுதலும்
வெருவி யேகு மென்றுமுனம் விரித்தார் முனிவர் மேதினிக்கே

கடுக்காய்நெய்

பாண்டுகா மாலை படர்சோகை நீர்க்கோவை
ஈண்டுநோய் தீர வியம்பக்கேள்-வேண்டும்
*வனதூர்க்கி தன்னில் வருவிதைதனை நீக்கி
நினைவாய்ப் பலமைம்பா னெடி-இனமான
கீழ்காயி னெல்லிவேர் கிண்டிமூ வைந்துபலம்
தாழ்விலா தேடெடுத்துச் சார்மல்லி-வாள்விழியாய்
எண்ணாழி கூட்டி யிடித்§தங் குறுணிவிட்டு
நண்ணியது பாதியாய் நாடியபின் -எண்ணமுடன்
கோசலமீர் நாழி கூடவிட்டு நாலுநாள்
ஆசறக் காய்ச்சி யதன்பின்பு-மோசமற
வேபிசைந்து தான்வடித்து வேண்டியது நாழி
யாவெடுத்துக் கற்கவகை யானுரைப்பன்-காவிலுய
கோட்டங் கடுக்காய் குலவுமிரு சீரமஞ்சள்

*வனதூர்க்கி-கடுக்காய்   §அப்-நீர்

நாட்டுசுக்குச் செண்பகப்பூ நல்லேலம்-கூட்டும்
சிவதை கடுரோணி செங்கழுநீர் மூலம்
நவையற முக்கழஞ்சு நாடி-இவையெல்லாம்
சேர்த்தரைத் தந்நீரிற் செம்மைபெற வேகரைத்து
வார்த்துப் பசுநெய் வருநாழி-கூர்த்த
பதமெழுகாய்ப் பார்த்துப் பணிந்து முக்கட் டேவை
இதமுற வேவடித்திந் நெய்யைக்-கதமறவே
நோயுமுடற்கூறு நுணித்தறிந் தோர்கழஞ்சு
காய வுருக்கிக் கருத்துடனே-ஆய
இருபதுநாட் பத்தியமா யேற்றபடி யுண்ண
வருசோகை பாண்டு வருந்தும்-உருவெளுப்பு
வன்னிமந்தங் காமாலை வந்தநோய் தீர்ந்துவிடும்
என்னமுனி சொன்னா னிசைந்து

கடுக்காய்நெய்-2

இசைந்திடு நெய்தா னின்னமொன் றுரைப்பன்
பசந்திடு பயோதரப் பாவைநல் லாய்கேள்
உசந்திடு கடுக்கா யொருநூ றதனைப்
பெரிதாய் வாங்கிப் பிளந்துவிதை நீக்கி
இடித்தெட் டொன்றாய் வடித்திடு கஷாயம்
தன்னொடு கீழ்காய் நெல்லிகரி சாலை
உன்னுறு காட்டு மல்லிகை சாலை ✗
வகைபலம் பத்து வருபழங் கிட்டம்
அதுவும் பதின்பல மாக வெடுத்தே
இடித்துக் கஷாய மெட்டொன் றாக்கிப்
பிழிந்து கலந்து பேசிய கரும்பின்
சாறு நாழி யூற விட்டுத்
திரிகடு கோடு திரிபலை திப்பிலி
மூல மத்தித் திப்பிலி யேலம்
கடுகு ரோகணி கருதிடு மல்லி
மாமஞ்சள் கோட்ட மதுரஞ்செவ் வள்ளி
தருபஞ் சிட்டி சதகுப்பை வீழால்

கரிய சீரகங் காரம்புசெண் பகப்பூ
வெட்பா லரிசி விருப்பில வங்கம்
மாசிக் காயும் வகைசுழஞ் சொன்றாய்
அரைத்துக் கரைத்தே யாவி னெய்யும்
விட்டு வடித்து மேவியே நக்கத்
தொட்டிடு பாண்டுஞ் சோகையு மாதி
தீர்ந்திடு மென்று செப்பினர்
ஆய்ந்திடு முள்ளத் தருந்தவத் தோரே

கடுக்காய்நெய்-3

அருந்துநெய்தற் கிழங்குகண்டங் காலி கோரை
யருஞ்சிவதை நன்னாரி கீழ்காய் நெல்லி
திருந்துகொடு வேலியின்வேர் கருப்பஞ் சாறு
சிந்தில்குப்பை மேனிகரி சாலைச் சாறு
பொருந்துகொடி மல்லியிலை தண்ணீர் விட்டான்
புகல்சாறென் னுருநாழி பசுப்பால் நாழி
மருந்துநெல்லி தான்றிசுக்கு மிளகிந் துப்பு
மதுரமில வங்கமர மின்பூக் கோட்டம் 59

கோட்டிவிழா லேலமிவை கழஞ்சோ ரொன்றாய்க்
கொள்கடுக்கா யைந்துநா றவித்த நீரும்
ஈட்டுநறு நெய்நாழி விட்டுக் காய்ச்சி
யிதமாக நாலாநாள் வடித்துட் கொள்ளில்
நாட்டுமெய்ப்புக் காமாலை பாண்டு சோகை
நடுக்கிளை யுளைமாந்தை யிருமல் காசம்
கோட்டுமா முதறடிந்த வைவேல் முன்னர்க்
கூடுமசு ரக்கிளைபோற் குலைந்து போமே 60

அமிர்தசஞ்சீவி

அரிதார மனேசிலைவெண் காரங் காந்த
மரபொடிமுக் கடுகுடனே கடுக்காய் தானும்
சரியாகக் கழஞ்சுதழல் பீச்சிக் கண்டந்
தானிடித்த பொடியிதற்குச் சமனைக் கூட்டிப்

பரிவாக வெலுமிச்சம் புளியா லாட்டிப்
பாக்களவா யுண்டைசெய்து தேனிற் கொள்ள
மருவாது சோகைகா மாலை பாண்டு
மாறுமிந்த மருந்தமிர்த சீவி யென்னே 61

ஊறுகாய்

எலுமிச்சங் கனியதனை நாலாய்க்கீறி
யிந்துப்பு மிளகுள்ளி கடுகு சுக்கு
வலுமிக்க வரப்பொடியுஞ் சமனாய்க் கொண்டு
வளர்கையான் றகளையினிற் சாற்று லாட்டி
எலுமிச்சங் கனியதனி னுட்பொ திந்தே
ரவிமுகத்தில் வைத்தெடுத்து நேர மொன்றுக்
கலைவின்றி யொருகீறு தின்ன மாறு
மகலாத பாண்டுகா மாலை தானே 62

மண்டூரசூரணம்

வளமுறு பழமண் டூரம் வகைபெறக் காய்ச்சித் தோடம்
புளியொடு குமரி நீர்தாம் பூவிகைத் தகரைச் சாறும்
உளசுர பியினீர் காடி யொன்றினி லாறு சுத்தி
நேர்னியநா ளாறு செய்தே செவ்வையாய்ப் பொடிய தாக்கே 63

பொடிசெயிம் மருந்தா றெட்டுக் கழஞ்சுடன் புதிய காந்தம்
கடுமர பொடியோ ரொன்று கழஞ்சுநா லாகக் கூட்டி
அடவிகச் சோலஞ் சீன மிளகேல மசம தாகம்
வடிவில்முப் பலை† த மாலம் வருகுரு சானி வாசி 64

வாசமார் காரம்பு மூன்று கடுகுமற் றிலவங் கந்தான்
மாசினற் சீர கந்தான் வகைக்கொரு கழஞ்ச தெல்லாம்
கூசிடா திடித்து முன்னர்க் குறித்தமண் டூரந் தன்னோ
டேசனு சருளை யுன்னி யேற்கவே கலந்து வையே 65

---

† தமாலம்—பச்சை

வைத்தவிம் மருந்தைக் கையான் றகரையின் வநீர் விட்டுச்
சுத்தமாய் வெயிலில் வைத்துச் சுவறவே காயந்த பின்பு
மெத்தவுங் கருகி டாமல் வெச்சோட்டில் வறுத்தி டித்துச்
சித்தமீ துவந்து நேரம் வெருகடி சீனி தேனில் 66

உண்டிடப் பாண்டு சோகை யுற்றகா மாலை யாதி
மிண்டிடும் வெப்புப் பாவை மெல்லியர் பெரும்பா டும்போம்
கண்டிடு மெய்ப்பி ளைப்புக் கனசூலை தாப மீசாபம்
கொண்டிடும் பித்த மாதி போமெனக் கூறி ஞரே 67

மண்டூரசூரணம்-2

ஆண்டுநூ றளவு சென்ற மண்டூர மதனை வாங்கி
நீண்டதோ ருலைமு கத்தில் நெருப்பெழக் காய்ச்சிக் காய்ச்சி
வேண்டிய கோச லத்தின் மிகுநூறு தரமுந் தோய்த்துக்
காண்டகு பொடிய தாக்கிக் கலந்திடு மருந்து கேண்மோ 68

மருந்துமுக் கடுகு மூன்று பலைவசு வாசி யோமம்
பொருந்துமக் கருவெண் கோட்டம் புகல்குரு சாணி வீழால்
அருஞ்சுரர் தருவோ டேல †மடவிகச் சோலஞ் ¶சோலந்
திருந்துபேச் சிலைக ராம்பு சீரக மிரண்டு தேடே 69

தேடுவால் மிளகிந் துப்புத் திகழ்கொடு வேலி வேரும்
கேடிலா முத்தக் காசு கிளரிலா மிச்சு வேரும்
நாடுமிங் கிவையோ ரொன்று கழஞ்சுநற் பொடிய தாக்கிக்
கூடுநற் காந்த மாறு கழஞ்சையுங் குணமாய்ச் சேரே 70

சேரா பொடிமூ வாறு கழஞ்சுநற் சுத்தி செய்த
கார்கொள்மண் டூரத் தூளுங் கழஞ்சுநா லைந்து கூட்டி

---

† அடவிகச்சோலம்—கஸ்தூரிமஞ்சள்

¶ சோலம்—கச்சோலம்

நேரில்லைத் தகரைச் சாற்றால் நெகவரைத் தினமச் சாற்றில்
சாரவே குழைந்துப் பானுப் புடமதில் வைத்தி டாயே 71

வைத்துநீ கிளறிக் காய்ச்சி மறுகாலச் சாறு வார்த்துச்
சுத்தமா யுலர்த்தி நன்கு தூளித மாக்கிப் பின்னும்
அத்தகு சாற்றிற் கிண்டி யருணனி லுலர்த்தித் தூளாய்
வத்திர காயஞ் செய்த மருந்திலோர் கழஞ்சு வாங்கே 72

வாங்கியந் நிறையிற் சீனி கலந்துமண் டலம ருந்தி
ஆங்குவா கடர்சொற் போல வாகாத பதார்த்த நீக்கிற்
போங்கநிப் புடன்வா தங்கள் புகன்றகா மாலை சோகை
தீங்குசேர் பாண்டு ரோகஞ் திரிகளின் பெரும்பா டும்போம் 73

தாகமோ டசீர ணங்கள் தணிவிலாச் சூலை மேன்மூச்
சேகுமெய்ப் பிளப்புப் பித்த மிடர்தருஞ் சோப தாபம்
மோகமார் முத்தோ ஷங்கள் மொழிந்தநோய் பலவுந் தீரும்
பாகன மொழியாய் மூத்தோர் பாலர்க்கு மருத்த லாமே 74

மண்டூரசூரணம்-3

மண்டூர சூரணத்தை மானிலத்தீர் நன்குசெய்து
கொண்டா லுறுமோ கொடுநோய்கள்-வண்டேயும்
கூந்தன்மட மானே குறித்துமுன்னோர் சொன்னபடி
ஆய்ந்து முறைதவறா தாங்குரைப்பன்-ஏய்ந்ததொரு
நாறுண் டளவுசென்ற மண்டூர நாறுபலம்
நாறுண் டிடாம னுவன்றபடி-நாறுண்டி
கட்குணவு நல்கிக் கருதுபசு மூத்திரமோர்
மட்கலத்தி லிட்டு மறித்தினுங்கேள்-உட்கு
வரலகற்றி வெள்ளா டதினீர் நரர்நீர்
சரியா யதில்விட்டுச் சாற்றும்-உரைவகையாற்
தூணி யளவாக்கிச் சொல்லியமண் டூரமதிற்
பேணியிட்டு மண்சீலை பெட்புறவே காணவதிற்
செய்து பசுத்தொழுவத் திற்றுட்டு மண்டலத்தி

லெய்தி யெடுத்தங் கினிவகைகேள் -கொய்த
புளியிலைநீர் முக்குறுணி போதக்கொண் டத்தில்
உளவதனைக் காய்ச்சியுறத் தோய்த்துத்-தெளிபவைந்து
பத்துமுறை தோய்த்தபின்னர்ப் பண்புபெறு கையானீர்
ஒத்தவகை முக்குறுணி யிற்றோய்த்து-வைத்திருந்து
கற்றாழை நீர்குறுணி மூன்றிற் கருத்தாக
முற்போலத் தோய்த்து முடிந்தபின்னர்ச்-சுத்தமுறு
மண்டூரந் தன்னை யிடித்துவடி கொண்டினுங்கேள்
விண்ட வரப்பொடி மேன்மையுறத்-தண்டாமற்
பத்துப் பலமெடுத்துப் பார்நாவற் பட்டையினிற்
சுத்தமுறு சாற்றிற் றெடுத்தூறி-மெத்தவுமே
பொங்கிமிக வஃறியபின் போந்த வதைப்பொடித்துப்
பங்கமறு காந்தம் பதின்பலமும்-மங்காமற்
காணச்சாற் றிட்டுக் கலந்தூறிக் காய்ந்ததற்பின்
மாண வதைப்பொடித்து வைத்திடுவாய்-பேணியினும்

முக்கடுகு முப்பலையு முற்கிவதை ரோகணியும்
தக்கடுகு லச்சுனமூந் தாளைமம்-மிக்கநற்சீர்
உப்பைந்து காரமைந்து மொண்சார மைந்ததுவும்
செப்புகின்ற வாய்விளங்கஞ் சின்மூலம்-துப்பார்ந்த
ஆறரிசி சிற்றரத்தை யானகுறு சானிதரு
தேறுகின்ற சாதியைந்து சாதிலிங்கம்-கூறுகின்ற
கண்டில்வெண்ணெய் சோமனுப்புக் கஸ்தூரி மஞ்சளுடன்
விண்டசிறு செங்கடுகு வெண்கோட்டம்-ஒண்டொடியே
நெல்லிக்காய்க் கெந்தகமு நேரியசீ ரேலமதும்
புல்லுமதி நல்விடயம் பூதவர்க்கம்-வல்லவதி
மாமதுர மோடமழை மாறிலவெண் குந்துருக்கம்
சேமதிரி பத்திரியுந் தேடியே-ஆமினுங்கேள்
அட்டவர்க்க மும்வசம்பு மானசிறு தேக்கதுவுஞ்
சிட்டி குக்கில் வெள்ளறுகு சேரியங்கு-திட்டமுறு
நீலிமுள் ளுக் காவிளைவேர் நேர்சித்ர மூலமெனும்

இலைபொரு பல நிறைகொ ளிடிபொடி
புதிய தூகிலிடு வடிகொ ளளவிடு
சுவைகொண் மதுவினில் விரவி வெருகடி
துவள வயிலுவை பொழுது மிருப து-நவைசேரும்

எய்ப்பி ளைப்பொடு சத்தி விக்கலும்
அத்தி யுற்றெழு பித்த முள்ளதும்
இச்சை கெட்ட மூல் சத்தி யிற்கசை
துய்ப்பொ றுத்திடு மத்தி யுற்றது
கக்கல் பற்றிய வெப்ப முற்றது
தொக்க தைத்திடு மக்கு ணத்தொடு-வெப்பான

ஊது காமலை யாம சூலைகள்
தாது சீவித சூலை சூரைகள்
மோதி யேயெழு சோகை யூதைகள்
தாப மோடெழு சோப மாதிகள்
தேக பாரிச நீர்கள் சோரிகள்-தீதான

சிரமுறு பித்தம் வயிறுறு பித்தம்
கரபத பித்தம் பெரிவுறு பித்தம்
உரமுறு பித்தம் பரிவுறு பித்தம்
கருவிழி பித்தந் திரிவுறு பித்தம்
தெளிவறு பித்தஞ் செவியிரை பித்தம்
உளைவுறு பித்தந் தழலுறு பித்தம்
பயமுறு பித்தங் கயமுறு பித்தம்-தியவான

குன்மமதி சாரம் வன்மையுறு மாமை
கொன்னுறுக வினை துன்னுறுபி லீனை
மன்னுகுடல் வாயு இன்னலுறு சூரை
சென்னிசுழல் வாதை யின்னபல நோய்கள்-துன்றுதே

என்று பொதியத் திருந்து தமிழுரைத்த
நன்றி யுறுதவத்து நாயகனார்-அன்றருளிச்
செய்தபடி யானுரைத்தேன் றீமை தருமுணவும்
கைதவமு நீக்கியருட் கண்ணுதலை-உய்திபெற

நாடி யுளத்திருத்தி நாளுமருந் துண்பவருக்
கோடிநோய் போகு முணர் 75

நெல்லிக்காய் லேகியம்

மருமேவு குழலணங்கே நெல்லிக் காயின்
வருசாறு படியெட்டிற் குறைவு றாதே
திருமேவு சர்க்கரையோர் பதின்ப லத்தைச்
சேர்த்துவற்றக் காய்ச்சிவரும் பாகு தன்னில்
உருமேவு பசுநெய்யோர் படிதான் கூட்டி
யுருகிவரும் பருவத்திற் சாக்குத் தேன்மின்
இறுநாக மலரேல மிலவங் கத்தோல்
செப்புமதன் பத்திரியு மதூரஞ் சீரம் 76

சீர்மருவு மிந்துப்புப் பலங்கால் வீதஞ்
செப்புமிள கொடுசுக்குப் பலத்திற் பாதி
பேர்மருவு முந்திரிகைப் பலமிரண்டு
பெருகுதிப்பில் நாலுபலம் பாலில் வெந்து
நேர்மருவு சிவதையெட்டுப் பலந்தா னாக்கி
நிகழ்த்துமருந் தினிற்றூவித் தேனும் விட்டுக்
கூர்மருவு பதத்தினிலே காய்ச்சி யுண்ணக்
கூறியவப் பிணிகளெலாங் குலைந்து போமே 77

அமுதசிந்து லேகியம்

[illegible]மரத்தில் முறித்திடு புளியிலை
ஒருநா றுடனே அருவே றியகற்
பழைய விருப்பு பலமது மைம்பது
சித்திர மூல மத்தினில் வேர்தான்
இருபதோ டைந்தா மிஞ்சிபன் னிரண்டரை
சாரணை வேருடன் தேவர் டாருவும்
ஆறே காலா மருந்தச மூலம்
செவ்வியந் திப்பிலி மூலமென் றுரைத்த

பத்துட னிரண்டுஞ் சுத்தம துறவே
தனித்தனி நாற்பலந் தகர்த்தே யிடித்து
நாலிரு மரக்கா லாவிநீர் விட்டு
மரக்கா லொன்றாய் வடித்ததிற் பழைய
வெல்ல மதுபலஞ் சொல்லுமை யைந்து
கூட்டிக் காய்ச்சிக் குழம்பது வாகுற்
கொம்மடி மாதுளை கூறிய தோடை
நற்கனிச் சாற்றோ டிக்குறு சாறும்
வகைபடி யிரண்டு வார்த்துமேற் கற்கம்
ஓமமுக் கடுக முடன்குறு சானி
ஏலங் கராம்போ டிலவங்கப் பட்டை
இவைவகை நாற்பல மிருபலங் கிட்டம்
அயசிந் தூர மதுபல மிரண்டு
அளிதமா யிட்டுத் துளாவியே பின்னர்க்
கையான் றகரையிற் கருதிய சாறு
படியிரண் டளவிப் பருவத்தில் நெய்யும்
தேனும் விட்டுத் திரண்டிடு பதத்தில்
இறக்கியே மருந்தை யினியவுள் ளத்தால்
ஆனை முகவ னடியிணை வாழ்த்தி
நெல்லிக் காய்போற் சொல்லிய வளவில்
உண்ணக் கொடும்பிணி யுரத்திடு குன்மம்
பாண்டுகா மாலை பகர்பல காசம்
ஈண்டுறு சூலை யெகுத்துப் பிறநீர்
பீநச மாதிப் பிணிபல வகலும்
என்றுமா முனிவ ரிசைத்தனர் மருந்துணும்
காலங் களிலே கருதிடு சுக்குத்
திப்பிலி மூலஞ் செப்பிய வேலம்
குடிநீர் கொள்ளக் கூறினர்
மடியறு தவத்து வான்முனி வோரே 78

காந்தக்குழம்பு

காந்தக் குழம்பைக் கருதி யுரைத்திடவே
ஆப்பன் முகத் தைங்கரனை யன்புடனே - தாம்பாடிக்

கொண்டுசிறு காஞ்சொறியின் கூறுமிலை நற்கையான்
விண்ட பிரமிருப்பை மேனியுடன்-கண்டதொரு
நெல்லிக்காய் நற்கரும்பு நேர்கீற்றுப் பூசினியின்
நல்லகனி தாடிமத்தி னற்கனியுங்-முல்லைநகை
மானே புளியமிலை மற்றிஞ்சி யாமிவைகள்
ஆறுத சாறுவகை யாவினெய்-தேனினுடன்
கூட்டிச் சரக்குவகை கூறுகேன் வெண்காரம்
நாட்டு மரிதார நற்றுரிசு-காட்டுகின்ற
சூதஞ் சவர்க்காரஞ் சொல்லு மிருகழஞ்சு
சாதிக்கா யேலந் தகுமிளகு-ஓதும்
இலவங்கப் பூவுடனே யேற்றவசு வாசி
குலமே விருசீரங் கோதாய்-நலமேவும்
முக்கழஞ்சு காந்தமது மூவிரண்டு கிட்டத்தூள்
தக்க பதின்கழஞ்சு தன்னோடு-மிக்க
அரபொடியீ ரெண்கழஞ்சா *யவ்விலையின் சாற்றால்
உரமுடனே யாட்டி யுறவாய்த்-திரமுடனே
கூட்டிக் குழம்புகொள்ளக் கூறுபல வீக்கமதும்
நாட்டு மகோதரமு நாற்பாண்டு-பாட்டில்
உரைத்தபடி தீருமென வோதினார் முன்னோர்
விரைத்தகுழ லாரணங்கே மெய் 79

அமுதசர்க்கரை

சிலமுட னேயமுத சர்க்கரையைச் செப்பிற்
கோலமுறு மாவிரையின் வேரிலை கொழுந்தோல்
ஆலவிரை யோடுடன் முசுட்டைவிரை யத்தி
மேலவிரை வேருமிரு வேலியிவை தேடே 80
தேடிய வமுக்கிரவு செப்பிய நெருஞ்சில்
வாடிவரு முத்தமிலா மிச்சுவன சத்தின்
சாடிவரு பூவிலுறு தாதிவைக ளோர்பங்
காடியம ரும்மமிர்த சர்க்கரையொர் பங்கே 81

*மேற்கூறிய இலைகளின் சாறு

பங்கமறு சீரக மிரண்டுபலை மூன்று
குங்கும மலர்கடுக மூன்றினொடு கோட்டம்
துங்கமுறு நாகமலர் சொல்லியகர்ப் பூரம்
அங்கமு றரேணுகமு மானமது ரம்மே 82

மதுரமுறு முந்திரிகை யின்கனிமற் றேலம்
கதுவியபே ரீஞ்சினொடு கற்கடக சிங்கி
சதுரமுறு தாளிச்ச பத்திரியுஞ் சாதி
பொதுவிலுறு காயசம தாகமும் புகன்றே 83

புகன்றதொரு சந்தனமு நேர்நிறை பொடித்தே
அகன்ற§விரு மாமதமு மானபுனு கோடு
நுவன்றபொடி சர்க்கரை கலந்துட னுகர்ந்தாற்
குகன்றனரு ளாற்பிணி குறைந்திடுவ கூறும் 84

கூறியதோர் தேனினுட னேகொளுகி லாகம்
பாறுமவ ரேபசுவி னெய்யினி லருந்திற்
தேறுமுட லோடுபல தீர்பிணிகள் கேளுநம்
ஊறுபல பாண்டினுட னுற்றகச ரோகம்
காறியகா மாலைகர காலெரிவு மேகம் 85

மேகமதி லேவருக டுப்புளைவு மெய்யிற்
சோகமுறு பித்தமுந் தொடுத்துடல் கடுப்பும்
ஆகமுறு ரத்தமு மடுத்திடு முரோகம்
எகுமுறு மாதவன்மு னுற்றவிம மாயே 86

காடி.

கரிசாலை பிரமியுட னியங்கு வீழி
காட்டுமிவை யிலையீஞ்சின் குருகு போந்தை
வருகுருகு தேசியினிற் கனியுஞ் சாறு
வாங்கியே படியொன்று வகைக்குக் கூட்டி

---

§ இருமாமதம்-கோரோசனை-கஸ்தூரி

உரிதான பணங்க ளொருப் படியி ரண்டு
மொன்றுக்கிக் கிட்டத்தாள் பலமி ரண்டு
சரியாக வரப்பொடியும் பலமி ரண்டு
தருகாந்தம் பலமொன்று பொடிய தாக்கே 87

ஆக்கியே புதுக்கலயத் திட்ட சாற்றி
லனாவியே சிறுகொதிபிட் டேழு நாட்கள்
வாக்கியே குடித்துவர நாளு நாளும்
வகுத்தபடி கொதிபிட்டுக் கொள்ள லாகும்
தாக்கிய வருபாண்டு சோகை யெய்ப்புத்
தருமிளைப்புக் காமாலை பித்த பாண்டு
போக்கவே தீருமென வுரைத்தார் வேதம்
புகன்றமுனி வாருப்புப் புளிப்ப கற்றே 88

சுயமக்கினி

நாலு கழஞ்சா மரபொடிப்பு நல்ல கெந்தி யெண்கழஞ்சு
சாலச் சூத மறுகழஞ்சு ‡சருவே சுராளு ரரைக்கழஞ்சு
மாலின் றேவி யரைக்கழஞ்சு வளருங் காந்த மறுகழஞ்சு
கோலக் குமரிச் சாற்றரைத்துக் கொடிய வெயிலில் வைப்பீரே

வைத்தே கலத்தான் மூடியிட வாகாய் நீறி யமைந்திருக்கும்
சற்றே யெடுத்துப் பணவிடைதான் சாரு மிஞ்சி தேன்வெல்லம்
கற்றோ ருரைத்த கரிசாலை காணு நொச்சி யிவற்றொன்றில்
வைத்தே யுண்ணப் பலகுன்ம மாறும் பித்த பாண்டுவும்

அதுவு மாறும் புளித்தேப்ப மரிய சோகை காமாலை
கதுவு மட்டி பிலிகையுங் கடிய நோய்கள் மாறிவிடும்
மதியின் முன்போன் மேனியுமாம் வருத்த வுப்புப்புளியினுடன்
எதுவு மாகாப் பதார்த்தங்க ளகற்றி விடவே யிசைத்தாரே 91

‡சருவேசுராளுர் — சாதிலிங்கம்

பெரிய புளியெண்ணெய்

பெரியபுளி யெண்ணெய்தனைப் பேசக் கேண்மின்
பிறந்துநொச்சி யிலைச்சாறு படியொன் றாகும்
அரியகறுப் பூரவள்ளி பிரமி கையா
னவைசாறு படியிரண்டு பருமந் தன்னிற்
பெரியவிலை யச்சாறு படியி ரண்டு
பேசுநெல்லிக் காய்ச்சாறு நாலு கொத்து
விரியுமெலு மிச்சையினிற் புளிபு நாலு
விளங்குநீர் வள்ளியுடன் முசுமு சுக்கை 92

சாறிவையும் படியிரண்டு பசுப்பால் நாலு
சாற்றுமெண்ணெய் படிமூன்று கலந்து கொண்டு
கூறுமிவை சாயவேர் சிற்ற மட்டி
¶கோகனகத் தேவியர முறிகீழ் நெல்லி
நாறுமிரு வேலியிலா மிச்சு முத்த
நன்றாரி தூதுவளை வட்டு வேரும்
நீறுபட விடித்தரைத்துக் கலக்கிக் கற்க
நிகழ்த்துமுறை யாராய்ந்து நிறையிற் கொள்ளே 93

கொள்ளுமிரு சீரகம தாகமகில் கோட்டங்
கோதில்சுரர் தாருவிரு வேலியதி விடயம்
தெள்ளுசிறு திப்பிலிசெவ் வள்ளிவசு வாசி
சேர்*பறவை ‡மோடிசத குப்பையுட னேலம்
அள்ளுறுகச் சோல முட னேசிறிய தேக்கு
மச்சமறு பச்சிலைக ராம்புவரு சுக்கு
விள்ளுசிறு நாகமலர் வெண்மையுள சந்து
வீசுமணா மேவியசெஞ் சந்தன முந் தேடே 94

தேடுகுலக் காயுடனே சரக்க தெல்லாஞ்
சேர்த்தரைத்துக் கலக்கியது துளாவிக் காய்ச்சி
நாடுபதந் தனில்வடித்துச் சிரத்தில் வைத்து
நலமுறவே யுடலாதி யந்தம் பூசில்

¶கோகனகத்தேவி—சீதேவியார் செங்கழுநீர்
*பறவை—செண்பகப்பூ ‡மோடி—~~பெருங்குரும்பை~~

கூடுபித்த பாண்டுருவு பித்த ரோகங்
கொடியபித்தந் தனிலுண்டாங் கிரந்தி ரோகம்
வாடுபித்த சேற்பசுரஞ் சுரத்தில் வந்த
வரள்வெப்புத் தோஷமுடன் கபாலந் தானும் 95

தானுமொரு தலைக்குத்து முட்டி ளைப்புத்
தான்றீருஞ் சிறுபிள்ளை முதல தாக
வானுலவு பெரியமா னிடர்க ளீறாய்
வருபிணிக ணிவாரணமா மெனமுன் னோர்கள்
ஊனுயிர்க ளுறவுமுட லிற் றுயரை நீக்க
வுவந்துரைத்தார் மணிவளரு நதிசேர் சோலைத்
தேனுலவு கதிரைநகர்க் கிறைவ செவ்வே
டிருவடிக ளிறைஞ்சியெண்ணெய் செய்து பாரே 96

பருத்தியிலைச்சாற்றிற் புளியெண்ணெய்

சீர்கொண்ட புளியெண்ணெ யொன்றினுங் கேளுநகைத்
தகரையின் சாறு நாழி
செய்யநீர் வள்ளியின் சாறுமொரு நாழிபின்
சிதையின் சாறு நாழி
நீர்கொண்ட பொடுதலைச் சாறுநிறை நாழிபின்
னேர்வல்லி லொட்டி நாழி
திகழ்முசு முசுக்கையிற் சாறுமொரு நாழியா
நீளும்ப ருத்தி தன்னில்
ஏர்கொண்ட விலையினிற் சாறுசீ தேவியா
ரிலையினிற் சாறு நாழி
யெலுமிச்சி னிற்புளியு மிருநாழி யிளநீரெள்
ளெண்ணெயொரு நாழி யாகப்
பார்கொண்ட திப்பிலியு மேலமில வங்கம்
பருத்தசந் தனங்க ராம்பு
பகர்மதுர மரமஞ்சள் மஞ்சள்சூரர் தாருவும்
பரிந்துசெவ் வள்ளி கொள்ளே 97

கொள்ளு மாஞ்சி லகில்கோட்டங் குலவு மரத்தை மஞ்சிட்டி
விள்ளு மலைபி லிருவேலி வேர்க்கொம் புடனே லாமிச்சத்
தெள்ளுங் கொத்த மல்லியதுந் திகழ்கச் சோலங் கழஞ்சொன்று
துள்ளுந் தாது வளைகோரை சொல்லு நாரி யிருவேலி 98

வேல்போல்விழியாய்சமனரைத்துவிரையவடித்துத்தலையில்வைக்க
மூல மான காமாலை முதிய சுரமும் பாண்டுருவும்
கோல மான வெளுவெளுப்புக் குலையுங் கதலி வனஞ்சூழுந்
சாலக் கதிரை முருகனிரு சரண மறவார் சாற்றினரே 99

வெப்பாத்திப்புளியெண்ணெய்

வெப்பாத்திப் புளியெண்ணெய் விளம்பக் கேண்மின்
வேர்நாரி தாதுவளை சிற்ற மட்டி
தப்பாத சதாவேரி யோரி தழ்த்தா
மரைகல்லின் முரிசுகளப் பன்னை வட்டு
ஒப்பாரும் பற்படகம் பேர மட்டி
யுயர்சீந்தில் சீதேவி முத்தக் காசு
செப்பாரு மிருவேலி பொன்னுங் காணி
சிறுகரம்பை யிலாமிச்சு வெட்டி காணே 100

காணே §யசுவம் வாலுளுவை கராம்போ டுள்ளி செவ்வள்ளி
பேணே கோட்ட மிலவங்கம் பேசு மிருசீ ரதிமதுரம்
தூணே செறியு மரமஞ்சள் சொல்லு நல்ல வசுவாசி
வீணே யில்லா வெந்தயமு மேவுஞ் சாதிக் காய்தேடே 101

தேடே யசமோ தகமல்லி திப்பிலி கடுகு ரோகணியும்
நீடே சுக்குச் சடாமாஞ்சி நேரொன் றிரண்டு கழஞ்சுகொடு
நாடே தேசிப் பழச்சாறு நல்ல வெண்ணெ யுடன்வடித்தே
ஊடே தின்று மேற்பூசி யுச்சி தனிலும் பொருந்தப்போம்

§ அசுவம் — அமுக்கிரா

போமே பாண்டு காமாலை புகலுந் துடிப்பு வாயுவொடு
வேமே கிராணி யெய்ப்பிளைப்பு மிகுத்த பித்த மிவையெல்லாம்
பூமேன் மனிதர் தமைவிட்டுப் போகும்பொதிகைமுனிவனுக்குக்
கோமான் கதிரைக் குருபரவேள் குறித்தே யருளிக் கூறினதே

மண்டூரவடகம்

உத்தமமா மெலுமிச்சம் பழத்தின் சாற்றை
யொன்றுக்குப் பாதியாய் வெயிலில் வைத்துச்
சுத்திசெய்த கிட்டத்தூள் கூட்டிக் காய்ந்த
சொற்குழம்புப் பருவமதிற் கடுக மூன்று
சித்திபெறு முள்ளியிவை கூட்டி யாட்டிச்
சேர்த்துண்டை யுட்கொள்ள மோருஞ் சோறும்
பத்திபெறுந் தென்கதிரை முருக வேள்தன்
பதப்பணிவோர் வினையெனக்கா மாலை பாறும் 104

அழற்காமாலைக்கு

பாறுமழற் காமாலை தீரக் கேளும்
பகருமா பொடிநாவற் பட்டை நீரிற்
கூறுவெயின் முகத்திலிடப் பற்ப மாகுங்
குறித்திரச மிளகுதிப்பி லோமங் கெந்தி
நீறுபட வேகூட்டிப் பற்ப மாக்கி
நேரமொரு பணவிடைதூள் தின்னத் தீரும்
சாறயருந் தென்கதிரை முருகன் செய்ய
தாள்மறவாக் குறிய முனி சாற்றினானே 105

ஊறுகாய்

சாற்றிடுநல் லூறுகாய் பாண்டு வீக்கஞ்
சவிகெடுக்குங் காமாலை சோகை போகத்
தேற்றமுறு சாரணைவேர் சித்ர மூலஞ்
செய்யநா யுருவிகரி சலைநீர் முள்ளி

தோற்றுமிவை வேரிருசி ரகங்க டுக்காய்
　　சொற்காந்த முள்ளிநீள கசம தாகம்
நாற்றுமுறும் பிநாறி நெல்லிக் கெந்தி
　　நவில்கடுகு மிந்துப்பு நல்ல கிட்டம் 106

கிட்டமுறு மரபொடிமுக் கழஞ்சு கூட்டிக்
　　கிளர்கையான் றகரைச்சாற் றூல ரைத்து
நட்டமறு மெழுமிச்சம் பழத்தைக் கீறி
　　நவின்மருந்தை யுட்பொதிந்தோர் கலயந் தன்னில்
இட்டதன்மேல் நல்லெண்ணெய் தானும் விட்டே
　　யேழுநா ளடுப்பினுள்ளே புதைத்தெ டுத்துக்
கட்டமற வேதின்னத் தீருங் சண்டீர்
　　கதிரைமலை வாழ்முருகன் கருணை யாமே 107

பித்தகாமாலைக்கு
கூஷ்மாண்டரசாயனம்

ஆமே பித்த காமாலை யதனிற் பாண்டு வகைதீர
நாமே யுரைப்போஞ் சவர்க்கார நவின்முக் கடுக முப்பலையும்
தாமே யுள்ளி யீருள்ளி தகுமிந் துப்பு விழாலரிசி
பூமேன் மதுரம் வெண்கோட்டம் புகலு மோம மரபொடியே
பொடிசேர் கிட்ட நவச்சாரம் பொடித்துச் சமனு யதிற்சீனி
கடிசேர் தேசிப் பழச்சாறு காட்டு நீற்றுப் பூசினியின்
வடிசேர் சாறு தான்கூட்டி வற்றக் காய்ச்சிக் குழம்பானாற்
படிசேர் தேனு மதில்விட்டுப் பாகா யருந்தப் பறந்திடுமே 108

வரட்காமாலைக்கு
மண்டூரசூரணம்

பறக்கும் வரண்ட காமாலை பாறக் கூறும் படிகேண்மின்
சிறக்குஞ் சுத்தி தனிற்றெளிந்த செய்ய கிட்ட மரபொடியும்
நிறக்குங் கடுகு திரிகடுகு நேரு மல்லி வசுவாசி
உறக்குங் கடுக்காய் தான்றிக்கா யுயர்வெள் ளுள்ளி யிருசீரம்
சீரார் கராம்பு மிவையனைத்துஞ் சேர விடித்துப் பொடியாக்கி
நேரார் பொன்னாங் காணியினி னிகழுஞ் சாற்றில் மூன்றுநாட்

பேரார் நிம்பத் துளிர்ச்சாற்றிற் பேணி மூன்று நாட்கொள்க
ஏரார் பசுவின் மூத்திரத்தி லியலு மூன்று நாளாமே 110
நாண்மூன் றின்னுங் கரிசாலை நயந்த சாற்றிற் கொண்டிடவே
காண்முன் சொன்ன நோய்தீருங் கண்டு நோயின் வன்மைதனைப்
பேணிக் கிட்ட மரபொடியும் பெய்வாய் நிறையின் மிகுதிபெற
மாணுங் கதிரை வேன்முருகன் மலர்த்தாள் நெஞ்சின்மறவாதே

சலமுடைக்க

சுரசம்

கழற்சிப்பருப்பு, வெள்ளுள்ளி, மிளகு, அதிமதுரம் சமன் கற்றாழைச்சாறுவிட்டரைத்து முடக்கொற்றான்சாற்றிற் கரைத்து எட்டொன்றாய் வற்றவைத்து வடிகட்டி வெண்காரம் பொரிகாரம் பொரித்ததூள் மேற்பொடியிட்டுக் குடிக்கச் சலமுடைக்கும்.

பற்று

கோழிமுட்டைவெள்ளைக்கருவும் உள்ளியுமரைத்துச் சீலையிற்றேய்த்து அடிவயிற்றிற்போடச் சலமுடைக்கும்.

உண்டை

இரசம், கெந்தகம், சுக்கு, திரிபலை, மிளகு சமனெல்லாங் கண்டளவு சுத்திசெய்த வாளம் கரிசாலைச்சாற்றாலாட்டி, தூதுளங்காயளவுருட்டி நிழலுலர்த்திவைக்கவும். சலமறிப்புக்கு அவுரியிலைச்சாற்றிற் கொடுக்கவும்.

பற்பம்

கெந்தகம், திரிகடுகு, வெண்காரம், நற்சீரகம், பொரிகாரம் வகை- கழஞ்சு-க அஞ்சனக்கல்லு, அதிமதுரம், கோட்டம் வகை கழ - இ- சுத்திசெய்தவாளம் கழ-ரு பசுப்பாலிலவித்து கையாந்தகரைச்சாற்றாலரைத்து உலர்த்திப் பற்பமாக்கி சீனியிற் கருப்புக்கட்டியிற்றின்னச் சலமறிப்புரோகம் எல்லாந்தீரும்.

சோகையிருமலுக்கு

ஆமணக்கெண்ணெயும், தேனும், வெண்காயச்சாறும் கலந்துநக்கத்தீரும்

குன்மரோகம்

குன்மம் எட்டின்பெயர்

வகைபடு குன்ம மெட்டின் வகைசொலின் வாத குன்மம்
தொகைபடு பித்த குன்மக் [illegible] சேற்ப குன்மம்
மிகைபட வெரிக்குங் குன்மம் வேறுள சத்தி குன்மம்
புகைபடு சூலை குன்மம் வலிகுன்மங் குன்ம சூலை 1

அவற்றுள் சாத்தியம்-4

அசாத்தியம்-4

உரைத்திடும் பித்த குன்மஞ் சேற்பன குன்மத் தோடே
எரித்திடு குன்மங் குன்ம சூரையோ டிரி ரண்டும்
பரித்திடு சாத்தி யங்க ளசாத்தியம் வாத குன்மம்
வருத்திடு சத்தி குன்மம் வலிகுன்மஞ் சூலை குன்மம் 2

சாத்தியம்-4-ல்

1-பித்தகுன்மம்

ஓதிய சாத்தி யங்க ளுரைத்திடு குன்ம நாலில்
கோதுறு பித்த குன்மக் குறிகுண மியம்பக் கேண்மின்
தீதுறு சுரத்தி னோலை தேகமும் வரண்டு நாளும்
ஊதையுண் டாகி மூலத் தின்மல முலருங் காணே 3

மலமு முலர்ந்து வாய்வுண்டா யாகம் வற்றி நெஞ்செரிக்கும்
குலவு மசனங் கொண்டக்காற் குடலுட் பொருமிப் புளித்தேக்காய்
உலையும் புண்போல் நாற்றமுண் டாயுழலை மிகுந்து வலியுண்டாய்
நிலையுங் கெடவே மந்திக்கும் பித்த குன்ம மெனநிகழ்த்தே 4

தேகம் வரண்டு தாகமுண்டாய்த் திரளும் வாயு சூலமீது
நோகுந் துயர மிகுந்திருக்கு நோக்குங் கெட்டு மஞ்சணிக்கும்
மோக மிகுந்து வாய்நீரு மூறிப் பொருமி வாந்திக்கும்
தோகை யனையீ ரழற்சியுறுந் தோன்றும் பித்த குன்மமிதே 5

மிண்டிமுன் வயிற்றைப் பற்றி மிகைபட வலிக்க லாக்கும்
கொண்டுநின் றுகா ரத்தைக் குமட்டியே யெடுக்க லாக்கும்

மண்டிடின் றெதிரெடுத்து வயிற்றையே வலிக்க லாக்கும்
விண்டுதான் பித்த குன்ம மீதென விளம்பி னாரே 6

தலையுங் கனத்தே யோங்காளந் தலைசா மந்தம் வாயூறல்
நிலையுங் கெடவே கிறுகிறுத்து நின்றே வேர்த்து நெஞ்செரித்துக்
கொலையுஞ்செய்யும்பித்தகுன்மங்கொல்லுங்குணங்களிவையெனவும்
கலையும் வல்ல தமிழ்வாணர் கண்டே பெருகப் பேசினரே × 7 perforation may take place

15/10

2-சேத்பனகுன்மம்

ஒண்டொடி கேளாய் வாய்நீ ரூறியே வழுவ ழுக்கும்
தொண்டைநொந் திருமலுண்டாந் துடியென விடிக்கு நெஞ்சு
கொண்டிடு மசன நின்று குழம்பியே வாந்தி செய்யும்
விண்டிட வயிற்றைப் பற்றி [illegible] வியர்க்கு மேனி 8

கரித்திடு நெஞ்சு காந்துங் கவ்விடுங் குலையைப் பற்றி
எரித்திடு முடம்பு வேர்க்கு மிடருற வயிற்றில் நோவாம்
பொருத்துறு மசைவை யெல்லாம் புண்படக் குத்தி நோவாம்
வரிக்கயல் விழியாய் சேற்ப குன்மத்தின் வகையி தாமே 9

3-எரிகுன்மம்

வயிற்றையெரித்துக்குடல்குமட்டிவாய்நீர்பெருத்துத்தலைகனக்கும்
உயிர்ப்பையழியக்கிறுகிறுக்குமோங்காளித்தேயப்ப முண்டாம்
மயிர்க்கால் வழியே வேர்வரும்பி வயிறு பொருமி மந்திக்கும்
முயற்றி யெரிக்குங் குன்மமென முனிவன் சொன்னகுறியிதுவே

4-சூரைகுன்மம் ([illegible])

சாலவே யுதரந் தன்னிற் றப்பளை போற்றி ரண்டு
ஏலவே யுடம்பு வற்றி யிடுப்புளோந் திரையும் வாயு
காலிலா மிகவே யோயுங் கருதிடு மன்னஞ் செல்லா
கோலமார் குழலி னாளே சூரையாங் குன்ம மாமே 11

17/10.

Ing. Hystaben - Stops glandular secretion

அசாத்தியம்-நாலில்

1-வாதகுன்மம்

உடம்புகால் குத்தி நொந்தே யூதைய மிகுந்து விம்மும்
நடங்கிடை பின்னே யீரல் நுனியிடைத் திரண்டு நோவாம்
இடம்பெற விலவி ரண்டு மேறிவே திணையாய் நோகும்
திடம்பெற வாத குன்மஞ் செய்குறி யென்று செப்பே 12

ஈரலு நெஞ்சும் பற்றி யெரித்திடு மூளையும் பக்கம்
கார்செறி கபாலந் தானுங் கனத்துடல் புரட்டிச் சத்தி
நேர்படக் கிறுகி றுத்து நினைவறக் குடல்வ லிக்கும்
வார்பொரு முலையாய் வாத குன்மத்தின் வகையி தாமே 13

உளையு முடம்பு தனிலெங்கு மூளையா திருக்கி லுறுப்புளையும்
களையு மிகுந்து வயிறழற்றுங் கனக்க வாய்நீ ருவாந்திப்பாம்
விளையும் வெப்புத் தானுண்டாம் விடாதேவேர்க்குந் தலைகனக்கும்
வளையும் பிறைபோ னுதலணங்கே வாத குன்ம வகையாமே 14

சந்துகா லுளைந்து பற்றித் தழலெழ வயிற ளாவி
அந்தகா ரங்க டம்மி லதிகமாய்ச் சரீர வாதை
வந்துதான் றோன்று நாளில் வகைபடும் வாத குன்மம்
அந்தமா முனிவர் சொன்ன வாயுறு வேத நூலே 15

N.B

2-சத்திகுன்மம்

நெஞ்சுமெரித்துப்புளித்தேக்காய்நின் றேபுதாய்ப்பொருமலுமாய்த்
தஞ்சமறவே சத்தியுமாய்த் தாகத்துயரான் மலந் தீயும்
மஞ்சட் பித்த வாயுவிது வதிகப் படவே பகைத்ததெனில்
அஞ்சுஞ் சத்தி குன்மமென வறைந்தார் முனிவ ராராய்ந்தே

சோறு செரிக்கில் வயிறது நோந் தொடர்ந்தே வாய்நீ ரூறிவரும்
மீறுஞ் சத்தி வருமாப் போ லிருக்கு மெடாது நெஞ்செரிக்கும்
வேறுங் குமட்டி யெடுத்திட்டால் வேதினை மாறு முடல் வேர்க்குந்
தேறுஞ் சத்தி குன்மத்தின் செயலீ தென்று செப்பினரே 17

3-வலிகுன்மம்

பண்டுள பழம லத்திற் பயித்தியஞ் சேர்த லாலும்
கொண்டிடுங் கஞ்சி தண்ணீர் கொதிப்புடன் வெதுப்பி னாலும்
மண்டியே காயம் வற்றி மயங்கிகெட வுலர்த லாலும்
வண்டுசேர் குழலி னாளே வலிகுன்ம வாயு வாமே 18

(மற்றொருபிரதியின்படி)

பண்டுமுள் வயிற்றைப் பற்றிப் பலபட வலிக்கை யாலும்
கொண்டுநின் றுகா ரத்தைக் குமட்டியே யெடுக்கை யாலும்
மண்டிடு முடம்பு வாடி வலுவற வுலர்த லாலும்
விண்டிடு முனிவர் சொன்ன வலிகுன்ம மென்னும் வேதம் 19

வங்கே யுதரம் பொருமலுமாய் வயிறங் கழியு மந்திக்கும்
கொங்கே மேனி வரண்டுலர்ந்து நோயு மிருந்து வலியெடுக்கும்
தந்தால் மருந்து தனைமீறுந் தாகத் தயரா மலக்கீழும்
வெங்கே விழுந்து போமளவும் விடாதே யம்மா வலிகுன்மம் 20

4-சூலகுன்மம்

திரளும் வாயு குலைமீது சிக்கு மலமு முடம்பெங்கும்
உலையுங் குத்து முதரத்து ழுமுங் கருவி முனைபோலப்
புரளும் வாயி னீருமிகப் பொருமு மேப்பம் புலால்நாறும்
வரளு முடம்பு மிக்குணங்கள் சூல குன்ம வகையாமே 21

சிகிச்சை

இஞ்சிக்குழம்பு

மேவிய விஞ்சிச் சாறு பதக்கினை வடித்து விட்டுத்
தாவிய தும்பை நொச்சி தைவேளை பிரண்டை யோடு
கூவிய வெருகு மேனி குலவிய வுவாய்க ரந்தை
தாவிய வெருக்குக் கையா னிவையொன்று சாறு நாழி 22

நாடிய வுவாய்வேர் நொச்சி நவில்திரி பலையி னோடே
யடவிழ் வன்னி தானு மியம்பிய சித்ர மூலம்

பீநற விளைவுக ளொன்று பதின்பல மெட்டொன் றாக்கிக்
கூடிய சுரசத் தூள்விட் டிதனைக் குறுகக் காய்ச்சே 23

காய்ச்சிடு குறுகி வந்தாற் சர்க்கரை பலம்பத் திட்டு
வாய்ச்சிடு கற்கஞ் சுக்கு மிளகுதிப் பிலிவ சப்பு
கூச்சமி லிருசீர் காந்தங் கொள்கடு விளங்க மூப்பைந்
தோச்சமாங் கார மைந்து சாரமைந் தொக்கக் கூட்டே 24

கூட்டுமுக் கழஞ்சொவ் வொன்று குணமுற விடித்த தைத்தே
ஈட்டிய மருந்து நன்றா யிளாய்க்கிப் பதத்திற் றாவி
வாட்டடங் கண்ணி னெய்தேன் வளர்தே னெய்யெண்ணெய் விட்டு
நாட்டமாய்க் கிளறிக் காய்ச்சி நற்பதத் திறக்கி யுண்ணே 25

உள்ளியாமணக்கெண்ணெய்

வெள்ளுள்ளி யிஞ்சி கொச்சி வேலிசா ரணைபி ரண்டை
ஒள்ளிய முருக்குத் தும்பை புளியமேனி யெருக்குக் கள்ளி
துள்ளிய நிலத்தில் வாகை தூவைத்தொன்று சாறு நாழி
அள்ளிலை நெடுவேற் கண்ணா யாமணக் கெண்ணெய் நாழி 26

சாற்றினில் விட்டுப் பின்னர்ச் சாரடை வன்னி வேலி
ஈட்டுவெண் ணொச்சி வாத மடக்கியோ டெருக்கு வெட்டி
நாட்டமா யிவற்றின் வேர்கள் பலம்பத்து வகைக்குக் கூட்டி
மீட்டுநாற் குறுணி நீரில் விரவியெட் டொன்றாக் காய்ச்சே 27

காய்ச்சிய கஷாயஞ் சாறுங் கலந்துமேன் மருந்து கேளாய்
வாய்ச்சவெள் ளுள்ளி ரோணி மஞ்சளு மைந்து சாரம்
கூச்சமில் கார மைந்து கொள்திரி கடுகு வாளம்
ஓச்சமாம் விளங்கங் காந்த மோமம் வெந்தயமுங் கூட்டே 28

ஏலமுப் பலைவ சம்பு மிருசீர மிவையோ ரொன்று
சாலவே கழஞ்சு கூட்டிச் சாரித்துத் தயிலம் வெந்து
காலமே கடுகி னேடு கரண்டிநாற் பதுநாட் கொள்ள
ஆலமுண் டிருண்ட கண்ட ரருளினாற் குன்மம் போமே 29

முட்காவேளைக்கிருதம்

வன்னிவே §ராறுபலம் வேலி பத்து
மானேசா ரடை‡கொழுஞ்சி யுவாயும் வேளை
முன்னேவச் சிரவல்லி வில்வஞ் சிற்றா
முட்டிவே ரிவையொன்று பலம்பத் தாக
நன்னீரெண் மரக்கால்விட் டெட்டொன் றாக்கி
நறுநெய்யு மீரிரண்டு நாழி விட்டுச்
சொன்னதிரி பலைகடுகு சிவதை ரோகணி
சொன்மருந்து பலமைந்தெட் டொன்றாய்க் காய்ச்சே

காய்ச்சுமருந் தினையிடித்துச் சுரசத் தோடு
கலந்துவிட்டு மேன்மருந்து கடுகோ டுள்ளி
வாய்ச்சவிரு சீரிந்து சோம னாதி
வசம்போம மாஞ்சரத்தை சாதிக் காயும்
ஒச்சமூறு பொரிகார முலுவா மோத
மோரொன்று நாற்கழஞ்சிட் டுவந்து வெந்தாற்
கூச்சமற மண்டலங்கொள் குன்ம ரோகங்
குடிபோமென் றேமுனிவன் கூறி னானே 31

வில்வாதிலேகியம்

கூவிளைவேர் பலநூறு சிற்றா முட்டி
கொள்தூது வளைநொச்சி யாடா தோடை
பாவுதிரி கடுகுதிரி பலையொவ் வொன்று
பதின்பலங்கொண் டிடித்துநீ ரெட்டொன் றாக்கி
நீவிரைந்து திருமேனி கையா னொச்சி
நீர்முள்ளி யெருக்கவுரி நேரார் காணம்
ஓவியமே யிவையொன்று சாறு நாழி
யொன்றித்து மேன்மருந்தை யுரைப்பக் கேளே 32

§நாறுபலம் என்றும் ‡கொழுஞ்சி-முட்காவேளை

சாதிக்காய் பத்திரியோ டுள்ளி காயஞ்
சாற்றுமிரு சீர்விளங்கஞ் சாத்ப பேதி
ஓதியவுப் பைந்துடனே கார மைந்து
மூயர்சார மைந்தினுட னன்ன பேதி
நீதிபுட னிரண்டுகழஞ் சிடித்துக் கொண்டு
நிகழ்த்துமருந் ததுகுறுகி வாற நேரம்
சீதமுறு சர்க்கரையெண் பலமு மிட்டுத்
திகழ்பாகி லிம்மருந்து சிறக்கத் தாவே 33

தூவியே நறுநெய்தே னிஞ்சி யெண்ணெய்
சொல்லுமளா வாய்க்கூட்டிக் கிண்டி வெந்து
தாவியே பதம்வந்தா லிறக்கிக் கொண்டு
சாருமள வறிந்துண்ண மண்டலத்திற்
காவியே நிகர்விழியாய் குன்மந் தீருங்
கதிரைமலை முதல்வனருட் கருணை யாலே
மேவியே பொதிகையினிற் றமிழு ணர்ந்த
மிளிர்தவத்துக் குறியமுனி விளம்பி னானே 34

சித்திரமூலக்குழம்பு

சித்திரமூ லக்குழம்பு திண்புவியிற் சேயிழையே
பத்தியுடன் கூட்டும் பரிசுகேள்-முத்திதரும்
வில்வம்வேர் சாரடைவேர் *வெற்பதனைத் தாங்கியவேர்
நல்லவுவாய் வேர்நாணுங் கள்ளிவேர்-சொல்லரிய
வஞ்சகத்தார் †முப்புரத்தை வன்னி யெழுப்பியவேர்
வெஞ்சுரத்தை மேவுவச்ர வல்லிவேர்-செஞ்சொலீர்
சிற்று மணக்கின்வேர் சிறந்தகரு நொச்சிவேர்
மெச்சுபுகழ் வாகைவே ராயில்வேர்-இச்சைசேர்
தைவளைவேர் முன்னைவேர் ¶சந்துநடந் தான்வேரும்

---

*வெற்பதனைத் தாங்கியவேர்—பொன்முசுட்டைவேர்.
†முப்புரத்தை வன்னியெழுப்பியவேர்—மாவிலங்கைவேர்.
¶சந்துநடந்தான்வேர்—சிவனார்வேம்புவேர்.

ஐயறக்கும் வெய்யகண்டங் கத்தரிவேர்-துய்ய
கொழுஞ்சிவே ரோடவுரி வேர்முருங்கை வேர்கூ
றழிஞ்சிவேர் வாத மடக்கி-செழும்பவளம்
போலிதழீ ரொவ்வொன் றுநாலொன் பதுபலமும்
சிலமுடனே தறித்துச் சேர்த்ததற்பின்-வேலனைய
கண்ணீர் கொடுவேலி காட்டுமிரு நூறுபலம்
நண்ணீர் தனிற்கொணர்ந்து நன்றாகப்-பண்ணமைந்த
சாடிதனி லிட்டுச் சலிலநாற் றாணிவிட்டு
மூடிக் கனல்சிறுகத் தான்மூட்டி-நாடியே
எட்டொன்றாய்க் காய்ச்சி யியல்பதனை வாய்சீலை
கட்டி வடித்த கஷாயமதில்-இட்டமுறும்
இஞ்சி கருவேப் பிலைநொச்சி யோடவுரி
வஞ்ச மகல்சா ரணைபிரண்டை-நஞ்சு
பொதிந்த கொடியும் புடோலு முருக்கு
கதிந்தகுப்பை மேனியுடன் கையான்-முதிர்ந்த
வனசப் பொகுட்டு வளமுறவே யெல்லாம்
தனியிறுத்து வெவ்வேறு சாறாய்-நினைவுடனே
ஒன்றொன்று நாழியா யுள்ளதுகாய்ந் தெட்டொன்றாய்
வென்றியுடன் கோததனில் வீழாமல்-நன்றியாய்
முன்சொல் கஷாயத்தில் மூழ்கவிட்டுக் கூட்டிய
பின்பு மிகுகடுக்கா யாயிரமும்-துன்பமறத்
தள்ளும் விதையகற்றித் தான்றாணி நீர்புகட்டிக்
கொள்ளுமது நாழி யாய்வடித்து-மெள்ளவது
கூட்டுங் கஷாயமதிற் கூடவிடு மேன்மிளகு
தாட்டிமையாய் நாழி தான்கொணர்ந்து-கூட்டி
இடித்துப் பதக்குநீ ரெட்டொன்றாய்க் காய்ச்சி
வடித்துக் கஷாயமதில் வார்த்து-வெடித்த
சிவதை பலம்பத்துச் சேர்கடுகு ரோணி
தவறா ததற்குச் சமனாய்-நவமுறவே
கூட்டி யிடித்துநீ ரெண்ணாழி தன்னையே
கூட்டி யிருநாழி யாக்கி நாட்டமுடன்

சொல்லுங் கஷாயமதிற் சூட்டிப் பனையிலுறு
வெல்லம் பலமிருபான் விட்ட திலே-நல்லதொரு
வெள்ளுள்ளி பத்துப் பலமரைத்து மேன்மையுற
உள்ள கஷாயத்தி லூட்டியே-மெள்ள
அடுப்பதனி லேற்றி யலர்ந்தகம லாக்கினியாய்த்
திடுக்கமற மூட்டிச் செழும்பா-கடுத்ததனிற்
கூட்டுகின்ற கற்கங் குலச்சரக்கின் றன்குறிப்பை
நாட்டமுடன் கூறுகே நன்றாகச்-சூட்டரிய
சுக்குப் பதின்பலமுஞ் சொன்மிளகு மப்படியே
அக்கரையாந் திப்பிலியோ ராறுபலம்-தப்பாமல்
இந்துவினுப் பெண்பலமு மேற்ற வளையலுப்பும்
அந்தப் படிகூட்டு மட்டுப்பும்-வந்தெதிர்ந்த
ஒன்றைக் கொல்லும் வெடியுப்பு முன்னுப்புப்
பன்றாக முன்சொற் பலங்கூட்டி-நண்ணரிய
சோமன் பெருங்காயஞ் சொற்றபடி நாலுபலம்
நாமஞ்சேர் காந்தம்து நாலுபலம்-ஓமம்
விளங்கமிரு சீரகமோ டேலமிவை யொன்று
விளங்க விருபலமாய் மேவிக்-களங்கம்
அறுக்குஞ் சவர்க்கார மானபொரி காரம்
முறுக்குதம்பச் சாரஞ்சத்தி சாரம்-குறித்த
நவச்சாரங் காரமைந்து நாகெந்தி மூலம்
நவமாம் விடயங் கராம்பும்-உவமானம்
மேவும் பலமாய் விளைவு பெறுமிரசம்
தாவும் பலமொன்று தன்னையே-நாகமதில்
ஊட்டிக் கிளறிநன்றா யூதப் பொடியாகும்
மாட்டி யதையரைக்கும் வண்மைகேள்-நாட்டும்
முதிரை யறுநாழி மூழ்குநீர் தானும்
அதிலே படியாறு கூட்டி-மதியுடனே
காய்ச்சியது காற்படியாய்க் கண்டா விடித்திறுத்து
வாய்ப்புடனே விட்டு மருந்தரைத்துக்-காய்ச்ச
அல்லைகரு கொம்மடிக்கா யச்சாறு நாலு

குலவுபடி விட்டுக் கூறும்-பலமுடைய
நற்குழம்பாய்க் கிண்டிவெந்த நல்லபத வத்தினிலே
முப்படி யாமவைக்கின் முற்றுமெண்ணெய்-தப்பறவே
விட்டுப் புளிபோல வெந்தபரு வம்பார்த்துச்
சட்டெனவே கீழிறக்கிச் சாற்றக்கேள்-கட்டம்
அகற்றும் விநாயகன்மு னம்மருந்தை வைத்துச்
சகத்திற் கடலைபவல் தாமும்-உகப்பான
நெல்லின் பொரியிளநீர் நேர்ந்த பழவகைகள்
எள்ளுருண்டை யாதி யிவைவைமைத்து-நல்ல
நிவேதனங்கள் பண்ணி நிமலாவென் றேபின்
அபாய மகற்றி யருளென்-றெவாயும்
பணிந்துநல்ல நாளிற் பகர்மருந்தை யுண்டாற்
றணிந்துவிடு நோய்களையே சாற்றில்-திணிக்துமிக
வந்தவட்ட குன்ம மகோதர நீராம்பல்
முந்துபே ராம்பன் முதற்கவிசை-சிந்தை
மயக்குமடு விற்புருதி வார்குருதி யோடு
தியக்கமுறுஞ் சீல்கட்டு விற்புருதி-சுயற்கடை யீர்
அண்டத்தில் வாத மலறுங் குடல்வாதம்
தண்டத்து வாதமுடன் சார்சூலை-குண்டலத்து
வாயுவெப்புப் பாவை வளரும் பலவாயு
காயும் பலநோய் கடிதகலும்-நோயுற்ற
மானிடர்க்கு வந்தபிணி மாறுங் கதிரைமலை
தானிடமாக் கொண்ட தனிமுதல்வன்-மானிடத்திற்
கொண்ட சிவனார் குமர னறுமுகவன்
முண்டகச்செம் பாதமலர் முன்னியே தெண்டனிடும்
அன்பர்வினை நீங்குதல்போ லாமென் றகத்தியனார்
முன்பருளிச் செய்த முறை. 35

நாரத்தங்காய்க்குழம்பு.

நாட ணுனதோர் நாரத்தங் காய்பத்து
நன்றாய்க் கீறி யிடித்தரை நாரியே

கூட வேபதிற் கூட்டு மருந்துகள்
கூறக் கேளுங் குவலயத் தோர்களே

குப்பை மேனி கொழுஞ்சி புளியிலை
கூறு நொச்சி யுவாயிலை தைவேளை
செப்பெருக்கு முருக்குப் பிரண்டையும்
சித்ர மூலி கொடிக்கள்ளி தும்பையும்

உள்ளி சாரணை யிஞ்சி கருவேம்பு
முத்த மாகாணி கொம்மட்டி *கொக்கரி
துள்ளு நீர்மேல் நெருப்பிலை வீழியும்
தூக்கு மானை வணங்கி யிவையெலாம்

வாட்ட டங்கண் மயிலே §யிருபது
மருந்தி லொன்றும் வழுவாது சொல்லக்கேள்
வேட்ட மாகப் பறித்துத் துவைத்திட்டு
மேவுஞ் சாறென் றுழக்காகக் கூட்டியே

வடித்துக் கொண்டொரு தாளியில் விட்டதில்
மன்னு நாரத்தங் காயு மகிழவே
கரைத்துப் பின்னுங் கஷாயம் விளம்புவேன்
....மின்னனாய்

முக்கடுக முப்பலையு முடிகுரோ கணிசிவதை
முருங்கைவேர் நிலவாகை கொடுவேலி யாயிற்
பட்டையுட னாமணக்கின் வேராகவேபதி னாலுஞ்சமன்
கொண்டு

நீத றிந்திடு தோயம் பதக்கிடு
நீங்கி டாதெரி நாற்படி யாயினும்

---

*கோகரி என்றும்பாடமுண்டு. §எண்ணுமிடத்து 22 காணப்படுகின்றன.

சாதி சேர்பனை வெல்லம் பலமெட்டுச்
சாரித் தேயெரி தண்ணீர் சுவறவே

மேலுங் கற்கம் விளம்புவன் மின்னனுப்
வெய்ய சூத மிலிங்கஞ்செங் காந்தமும்
ஏல மோம மிருகடு சோமனு
மிந்து பேணி சிவதை வசாவுள்ளி

மோக நாவி யுடனன்ன பேதியு
முன்னும் வாயு விளங்கநற் சீரகம்
தாக நீக்கு முலுவு கருஞ்சீரஞ்
சத்த வர்க்கஞ் சவுட்டு வில்லையுடன்
சாரு முக்கடு முப்பலை சாதியும்

துத்த முந்திரி சுங்குள விந்தமும்
சூத்திர நாவி யிருவி நிருவிடம்
உப்புஞ் சாரமுங் காரமு முவைந்து
மோரொவ் வொன்று நிறுமுக் கழஞ்சதாய்க்
செப்புஞ் சுத்திசெய் வாள மொருபலஞ்
சேருங் கெந்தகத் தோடிர சந்தனை

அந்த மாயளை கோசலம் விட்டதை
யார வேகுடி நீரி லளாவியே
வெந்தி டுங்கம லாக்கினி யாகவே
மேவு மாமணக் கெண்ணெய் படிவிட்டுச்

சேரக் காய்ச்சிப் பதமெழு காகவே
திரளும் பக்குவந் தன்னி லிறக்கியே
வீர வானை முகத்தன்முன் னொல்லைவைத்து
வேண்டு நைவேத் தியங்கள் கொடுத்தபின்

ஆற வைத்துப் பரணியி லிட்டதை
யருந்துந் தானியத் தேபுட மாகவே

கூறு நல்ல கிழமை முகூர்த்தத்தில்
கொள்ளு நீள்புன்னைக் கொட்டை யளவதாய்
மாறி டாதொரு மண்டலங் கொள்ளவே
வற்றி தம்புளி மந்தப் புசிப்பையே

திரு நோய்களை யிப்போது கூறவே
தெளிந்து கொள்ளுநஞ் சிவனடி யார்களே
பார மான வுதரத்துள் ளேமிகப்
பற்றுஞ் சூலம் பெருவயி றுதியாயக்

குன்மங் காமாலை பாண்டு வுரோகமுங்
கொடிய வாயுக் கிராணி கவிகையும்
வன்ம மான குடகிரி கெண்டையும்
மந்த வாயு செரியாமை வாந்தியும்

ஆம சூலை யதிசார வூதலு
மக்கி மந்தம் பிலிகை யருவையும்
ஏம மான மகோதர வீக்கமு
மெய்ப்பி ளைப்பொடு நெஞ்செரி சோகையும்

பக்க வாயு வுடனண்ட வாயுவும்
பலப டச்சோறு செரியாத வாயுவும்
ஒக்க நின்று குறுமறுக் கிட்டது
முள்ளில் நின்று வலிக்குமோங் காளமும்

குடலில் வாயுவுங் குண்டல வாயுவுங்
கோரை வாதமுங் குறித்த சிரேட்டமும்
உடலி லேப்பம் புளித்தேப்பம் விக்கலு
முரத்த வாயு வொடுகெர்ப்ப சூலையும்

காய பாண்டுவு மாப்புறு மந்தமுங்
கடிய சத்தி பசலையு ரோகமும்
வாயு வாகத் திரண்ட வகைக்கெலா
மாற்ற நல்ல மருந்திது வாகுமே

ஆறு நல்ல வரியு மரவமு
மாரஞ் சூடு மரனு ரருளினால்
தேறு நெஞ்சத் தெளியுமென் சிந்தையே
செம்பொ னம்பலங் கண்டவர் பாவம்போல்
ஓடு மோடு முடம்பிற் பிணிகளு
முதர தோஷ முளவெவ் வகைகளும்
நாடி யேயிது செய்யு மனிதரே
நாரத் தின்காய்க் குழம்பென்று பேர்சொல்லே 36

கும்மடிக்காய்க்குழம்பு

அலகையதின் கும்மடிக்காய்ச் சாறு நாழி
யதினளவே சம்பீரப் பழத்தின் சாறு
குலவுசெறி நொச்சியிலைச் சாறு நாழி
கொள்ளுமிஞ்சி வெள்ளுள்ளிச் சாறு நாழி
சலமறவே காய்ந்துவற்றி நாழி யானுற்
றமிலொக்கச் சாதிலிங்கஞ் சூதங் கூட்டி
நலமுடைய வெண்காரஞ் சோம னுப்பு
நற்கடுகு மோதகமு நயந்து கொள்ளே 37

கொள்ளுவது மிளகுமஞ்சள் வெந்த யங்கொள்
குலவியதோர் நேர்வாள நாறங் கூட்டி
உள்ளதொரு நிறைமூன்று கழஞ்சு கொண்டே
யொக்கவரை யொன்றுபட வளாவிக் காய்ச்சி
மெள்ளவது பளப்புளிபோற் பதமே வந்தால்
விரைந்திறக்கித் தூதுவளம் பழம்போ லுண்டை
கொள்ளிடவே குன்மமெட்டுப் பிலிகை வாயு
கூறியதோ ருதரநோய் குலைந்து போமே 38

கும்மடிக்காய்க்குழம்பு-2

பேய்க்கொமட்டிக் காய்ச்சாறு நாழி யொன்று
பேசெலுமிச் சம்பழத்தின் சாறு நாழி

நாய்க்கடுகு மேனிசா ரணைபி ரண்டை
¶நாணுவேர் நொச்சி தும்பை நவில்கோ முஞ்சி
வாய்ப்புறுவெள் ளுள்ளியிஞ்சி யுவாய்ந்த வேளை
மருந்தொன்று சீர்நாழி வற்றக் காய்ச்சிக்
காய்ப்புறவே நாணுழி யான வாறே
கடுகுரோ கணீசிவதை கருஞ்சீர் காயம் 39

காந்தமுட னுப்பைந்து சார மைந்து
காரமைந்து தாரிசுதுத்தங் கருது மஞ்சள்
வந்திழையே சாதிலிங்கஞ் சூத நாவி
யிருவிநெல்லிக் கெந்தகமு மினிய மோதம்
போந்ததிரி கடுகுதிரி பலைவெள் ளுள்ளி
பூவையே வெந்தயமுங் கடுகு பூவும்
ஆய்ந்துநிறு முக்கழஞ்சு சுத்தி வாள
மதுவுமிடை சமன்கூட்டி யரைத்த ளாவே 40

வேலிவேர் வன்னிநில வாகை வேரும்
மிக்கவுவாய் ¶நாணுவேர் வீழி வேரும்
ஆலவிழி மானேசா ரணைகோ முஞ்சி
யவையொன்று பலம்பத்து வரிதகியும்
எலுந்தீர் தாணிவிட்டே யெட்டொன் றாக்கி
யிறுத்ததிலே கூட்டியே ரண்ட வெண்ணெய்
கோலியொரு படிவிட்டுப் பனையின் வெல்லங்
கூட்டியொரு பலம்பத்துக் குறுகக் காய்ச்சே 41

காய்ச்சுபழுப் புளிபோலப் பதமே வந்தாற்
கருதுமுண்டை சுண்டைக்கா யளவே கொள்ளக்
கூச்சமற மண்டலத்தி லுதார தோஷங்
குன்மமகோ தரமெகுவை பிலிகை கெண்டை

¶நாணுவேர் — இலைக்கள்ளிவேர்

ஒச்சமுறு நீராமை கெர்ப்ப சூலை
யுடன்சூலம் பெருவயிறு வுந்து வாதம்
வாய்ச்சதொரு கவிசையிவை யெல்லாந் தீரு
பலைமுனி யருந்தமிழின் வகுத்த வாறே 42

இஞ்சிக்குழம்பு

ஏலக் குழலாய்கே ளிஞ்சிக் குழம்பின்வகை
நூல்கற் றறிந்தார் நுவன்றபடி-மேலான
இஞ்சியினீர் தான்குறுணி யிதினெல்லிக் காய்ச்சாறு
கிஞ்சுகமா கொச்சி கிளர்பிரண்டை-மிஞ்சிய
பேய்ப்புடோல் வேளை பெருந்தும்பை சீந்தில்கையான்
வாய்ப்புறு சாரணை வன்கொழுஞ்சி-காய்ப்பார்
சிறுதும்பை சீவிபுவாய் செய்யசில வாகை
உறுமுள்ளி சாறோர் படியாய்-மறுகவே
வன்னி கொடுவேலி மன்முக் கடுகுபலை
துன்னு நிலவாகை சொன்னபடி-பின்னே
முதிரையுடன் வெண்ணொச்சி முற்றிய விழி
கதிர்தழு தாழை கழற்சி-பொதியவிழும்
வில்வவேர் வேப்பலகு மென்மிழகு தான்றிவேர்
புல்லு மெருக்குப் புனர்நவமும்-சொல்லுமருந்
தொன்று பதின்பலமா யொன்றித்துத் தூணிநீர்
துன்ற வெரிகுறுணி யாய்ச்சுவற-கன்றாய்
வடித்துக் கஷாயமதில் வார்த்து வளமாய்
அடுத்தபனை வெல்லமது பத்து-மிடுக்காக
வேகவைத்து விட்டளவி மேன்மருந்து முக்கடுகு
தாளிய முப்பலை சந்தனமும்-தீவிய
காந்தம் விளங்கங் கடுரோணி காயமுள்ளி
போந்த விருசீர் புதுவில்லை-ஆய்ந்த
கடுகு சிறுகடுகு கார லவணம்
முடுகிய சாரமுடன் முத்ரி-அடைவான
நேர்வாள மோமமஞ்சள் நேரிய சிரேலம்

கார்கோல் முதலாறுங் கல்நாரும்-கூரிய
தாளிச பத்ரி சடாமாஞ்சில் செண்பகப்பூ
நீளிய கோட்டஞ் சிறுமூலம்-வாள்விழியாய்
அட்டி மதுர மரிய தகரமுடன்
கட்டான கர்ப்பூரங் கண்டில்வெண்ணெய்-மட்டவிழும்
சீனியுடன் சிற்றரத்தை தேறு வசம்பரத்தை
காணுறையுங் குங்குமப்பூக் கன்மதமும்-மானேகேள்
கோரோசனைபிசினுங் கோதையே யிவ்வெல்லாம்
ஓரோர் பலங்காலா யொன்றித்து-நேராய்
இடித்ததிற் றூவி யிளகவே யிண்டித்
திடுக்கமற வேரண்ட நெய்சேர்த்-தடுக்காக
நற்பதத்தி லேயிறக்கி நாற்பதுநாட் கொண்டுவரிற்
சொற்பெறு பித்தந் துளக்கெரிப்புத்-தர்க்கமுறு
வாயுத் திரட்சி வலிகுன்மஞ் சத்திகுன்மம்
ஆயும் பிலிகை யருணைவுடன்-மாயமாம்
அக்கினி மந்த மதிசாரம் வாய்க்கசப்புப்
பக்கத்தில் வாயு பரதாகம்-மிக்க
எரிகுன்மங் கைகா லெரிப்புச் செரியாப்
பொருமிடும் வாயு புளிப்பு-மருவிய
அத்திர வாயு வரைச்சோ றுடன்கழிதல்
இத்தனையுந் தீருமென வெண் 43

சஞ்சீவினிரசம்

சூத நாவி யிருவி நிருவிஷஞ்
•சொல்லுஞ் சூத்திர நாவி மனோசிலை
ஓதும் வெள்ளைப்பா ஷாணநற் கெந்தக
முற்ற தாளக மோடவச் சாரமும்
பீத ரோகணி பாள மிலைவசமன்
பேத கம்மறச் சுத்தி தனித்தனி
சோதி யாமத் தெருக்கு முருக்கிலை
தும்பை நொச்சிவெள் ளுள்ளியோ டிஞ்சியே 44

இந்த நீர்விட் டரைத்துக் குகையிலிட்
டேழு சீலைமண் செய்து கெசபுடம்
மூந்த வெந்த மருந்தத னோடு நீ
மூதிய தாம்பிரம் வங்க முலோகமும்
வந்த சூத மிவைபற்ப மோரொன்று
வகைக்கி ரண்டு கழஞ்சது கூட்டியே
சுந்த ரம்பெற முள்ளித் தயிலத்திற்
றுலங்க மத்தித்துத் தோன்றும் பணவிடை 45

பஞ்ச மூலக் கஷாயத் திடக்குன்மம்
பாறு மிஞ்சிச் சுரசம் பயித்தியம்
அஞ்சி யோடும் பொருமல் வலிப்புக
ளாம ணக்கெண் ணெய்ப் தன்னிற் கொடுத்திடு
மிஞ்சு சூலை கடிவிஷந் தீரவே
வேளைச் சாற்றில் மிகுவாத ரோகத்துக்
கஞ்ச மேனியின் சாற்றிற் கொடுத்திடு
மனேக ரோக மறுக்குஞ்சஞ் சீவினி 46

குடோரியும் இரட்சையும்

உதரமீ தூந்து ரோக வுறைப்பினிற் குடோரி செய்யப்
புதையவே கொம்பி னாலே பொருமிய சோரி வாங்கி
இதமுறு சூலக் காலாங் கருவியை யழுத்திக் கொண்டு
பதமுற விலாவி ரண்டும் பாங்கெழு வியாதி மீது 47

அறிவுசெய் புண்ணிற் கார மடுக்கவைத் துண்ம ருந்து
குறியுறு சிகிச்சை செய்தாற் குன்மநோய் மகோத ரங்கள்
தெறியுறு நாபி சூலந் தீர்ந்திடுங் கவிசை சூலை
அறியுறு முனிவர் சொன்ன வகையெலா மறிந்து கொள்ளே 48

இரத்தகுன்மத்துக்கு

நல்லோ ருரைத்த பெருங்கிழங்கு நவில்சா ரணைவேர்கொடுவேலி
சொல்லா ரெருக்கம் வேர்கள்ளித் துளிருங் கருவே லிலைபுடலை

எல்லோர் விரும்புஞ் சாதிக்கா யிக்துப் பிருசி ரகம்வசம்பு
வல்லிர் கபிக மூன்றேமம் வகையே பெருங்கா யமும்மருவே 49

மருவி ரிவையோன் றிருகழஞ்சு வகையே கடுகுப் பொடியுழக்குக்
கருகிர் பலப்பெவள் ளுள்ளியொன் று கலந்தே யிவைகளொருகூறு
பெருகார் நிலத்தின் பின்னுக்குப் பிறித்தேயிடித்தங்கொருகூறு
விரைவாய்க் கலந்து தூள்குப்பைமேனிச்சாற்றிலரைத்துவையே

அரைத்தச் சுண்டைக்காய்போலவருநல்லெண்ணெயிற்றேய்த்துத்
திருத்தமாய் விடிந்த போதிற் றின்றிட வல்லீ ராகில்
வருத்தமா மிரத்த குன்ம மாறிடு மென்று மண்மேற்
பொருத்தமாய் முனிவ ரெல்லாம் புகன்றனர் மருந்து தன்னை

(குன்மவிதி, என்னும்தலைப்பின்கீழ் அடியில்வருவனவும் மேற்கண்டவற்றோடு சிற்சிலபிரதிகளிற் காணப்படுகின்றன.)

குன்மவிதி

குன்மம் எட்டின்பெயர்

மருவிய வாயு குன்மம் வாதகுன் மங்க ளோடு
சருவிய பித்த குன்மந் தானெரி குன்ம மாகும்
பரவிய வலியாங் குன்மம் பாங்கெழு சத்தி சன்னி
விரவிய வையின் குன்ம மிவையெட்டும் விளம்பு வேனே 52

1-வாயுகுன்மம்

சோறு தானுஞ் செரியாது திருத்தி போலே யாம்வயிறு
ஊறும் பெலனுந் தான்கெடுக்கு முடலு முலரு நடைகுறையும்
விறு பந்து போற்புரளும் வில்லுப் போலும் விசையாகும்
ஏறும் வாயுக் குன்மமென விசைத்தார் முனிவ ரிக்குணமே 53

சிகிச்சை-எருக்கலம்பாற்றைலம்

வாகான நல்லெண்ணெய் வெள்ளாட தின்*கிர பால்
மருவிய வெருக்கிலும்பால்

வளமான நொச்சிலும் புளியிலை பிரண்டையும்
வகைக்குழக் காக்கியிதனிற்
பாகான திப்பிலியின் மூலமொடு சுக்குநும்
பரவுதிப் பிலிசெவ்வியம்
பசுர்சித்ர மூலமிவை பலமொன்று கூட்டியே
பதமாய் வடித்தெடுத்து
வாகாக வுட்கொண்டு மேலிலும் பூசவே
வருசகல வாயுகுன்மம்
வளமாக விட்டோடு மண்டலங் கொண்டிடின்
மருவுநத் திரியையிதனில்
ஆசாத வுண்டிவகை நீக்கியே பத்திய
மறிந்தேநற்க வுண்ணநன்று
மவ்வண்ண மரியதமிழ் முனிவனுரை செய்தன
னறுமுகவ னருளினாலே 54

2-வாதகுன்மம்

சீருடைய நடைகுறையு மலம்விடாது
தீக்கொள்ளுநங் கடுக்குமிகத் தியக்க முண்டாம்
பாருடைய வுறுப்பனைத்துதம் பங்கங் கொள்ளும்
பரிவுடனே யசனமிகத் தானுஞ் செல்லாப்
பேருடைய வுடல்கறுக்கும் பெலனு மீனம்
பேசொணு நாவாளுநந் தலையு நோகும்
போருடைய வாதகுன்ம வகையி தென்றே
புகன்றனர்மா முனிவரருட் புலமை யாலே 55

சிகிச்சை-நாரத்தங்காய்ச்சூரணம்

போலாற் கொடிவேலி வட்டத் திருப்பியுடன்
வீறான பெருமருந்து
போன்மைபெறு மாடுதின் றுப்பாலை வேர்களும்
மிக்கமல் விந்துப்புடன்

‡ வச்சிரப்பால்—சதுரக்கள்ளிப்பால்

சிலமுடன் பொடிசெய்து ‡வச்சிரப் பாலினைத்
திகழவே வார்த்துரைத்துச்
சேருநா ரத்தங்காய் வளையமாய்க் கீறியே
திணித்துறக் கட்டியதனில்
ஞாலமுற மூடிப் புதைத்துநா லாநா
ணன்குற வெடுத்தரைத்து
நன்று புலர்த்தியே பொடிசெய் தடைத்தபி
னயந்துவெரு கடிகொண்டிடக்
கோல்முட னெழுகின்ற வாதகுன் மந்தலை
குலைந்தோடு மிக்கிரியைதான்
கொண்டாடு மிப்புவியி லறிவோ ருரைத்தமுறை
கூறியது கண்டுகொள்ளே 56

3-பித்தகுன்மம்

மஞ்ச ணிறம்போன் முகமாகும் வாந்தி யுண்டாய் மனமறுக்கும்
நெஞ்சின் மிகவே கோழைநாட்டு நெருப்பா யிருக்கு முடலோயும்
அஞ்சும் வெய்யில் தனைக்கண்டா லறவே தலையைச் சுழற்றுமிகச்
செஞ்சொற் பித்தகுன்மமென் றுதெளிந்தோ ருரைத்ததிறமிதுவே

சிகிச்சை-சிவதைச்சூரணம்

சுருதரிய சுக்குடன் மிளகுதிப் பிலிகடுக்
காய்நெல்லி முளிவிளங்கங்
காக்கொட்ட மேலமுட னிலவங்க பட்டையுங்
காவிலில வங்கவிலையும்
மருவுகடு ரோகணி முத்தமதி விடயமும்
வளமாய்ச் சமன்கூட்டியே
மன்னுமிச் சூரணம் பொடிபண்ணி யொருகூறு
வருசிவதை வேர்தன்னையே
பெருகவே பாலினிற் சுத்திசெய் தேயதன்
பேசுபொடி மூன்றுகூறு
பேணிவைத் தேயரைத் திளவெநீர் சர்க்கரை
போரான கற்கண்டுடன்

வெருகடியி னளவுகொள வயிறுவிடும் வயிறுகனை
  மேவிடும் பித்தகுன்மம்
விட்டோடு மேகதிரை வேலனருள் பெற்றவர்கள்
  வினையென்ன விருநிலத்தே 58

4-சிலேற்பனகுன்மம்

வாய்நீ ரூறு மிளைப்புண்டாம் வற்று முடலம் வளிபுண்டாம்
தானே யிரைக்கும் பெலன்கெடுக்குந் தள்ளுமசனந்தலை தியக்கம்
ஊனே நெஞ்சு மிகப்புகையு முள்ளே நடுக்கு முடலு மிக
மானே சேற்பன குன்மமென மலையின் முனிவன் வகுத்தானே

சித்திரமூலத்தைலம்

செய்யசித்ர மூலம்வெள் வேலிறுறு பட்டையுஞ்
  சேரவிவை யிருபது பலஞ்
சேர்த்தே யிடித்தாம் பதக்குநற் றாணியிற்
  றிகழவெட் டொன்றதாக்கித்
துய்யவெள் ளெண்ணெ யொருநாழி தேங் காய்த்தனைத்
  திருவிப்பி ழிந்திட்டபால்
சொல்லுமெலு மிச்சையிற் றண்கனிச் சாறிவைக
  டுன்னவொரு நாழிகூட்டி
நையவெள் ளுள்ளியும் வசம்பிவைகள் கூட்டியே
  நன்குற வடித்ததயிலம்
நாடோறு முக்கழஞ் சளவாக வுண்டுமேல்
  நன்னரியே பூசிவருகிற்
பையவே வருகின்ற சேற்பனக் குன்மங்கள்
  பாறிவிடு மென்றுரைத்தான்
பரமனரு ளாறுமுகவ னடிமலர்கள் மறவாது
  பரவுதமி ழறிமுனிவனே 60

5-சன்னி குன்மம்

தியக்க மெடுக்கு மறிவழியுஞ் சீரா யசனஞ் செல்லாது
மயக்க முடனேயிரைச்சலுண்டாம்வாய்நீர்சுழற் றாம்வயிற றியும்
முயக்கு நெஞ்சு புகைந்திருமு மூச்சு மிகவும் விரைந்தெழும்பும்
பயிர்க்குஞ் சன்னி குன்மமென் றடயன் போர்சொல்லும்படியாமே

சிங்காரச் சூரணம்

காய்ந்திடுஞ் சுக்குடன் மிளகுதிப் பிலியதுங்
கடுநெல்லி முளிதான் றியுங்
கருதரிய சீரகமு மோமங் குலக்காய்
கராம்போல மதிவிடயமும்
ஆய்ந்திடு நாய்க்கடுகு மிலவங்க மிலைக்கள்ளி
யதனிலுறு பட்டையதுவு
மானசிதார் வேப்பினிலை யிந்துப்புச் சமனதா
யாகுமிப் பொடிதன்னையே
வாய்ந்திடும் வெருகடிப் பிரமாண மனுபான
வகையினிற் கொண்டுவரவே
வருசன்னி குன்மவகை மாறாத மூர்ச்சைவகை
மாறியே போகும்வண்ணம்
பாய்ந்திடுங் கங்கைசூழ் தென்கதிரை நகரிலுறை
பரமனறு முகவனுகள
பாதமல ரனுதினமு மறவாத குறிய முனி
பாரினி லுரைத்தானரோ 62

6-எரி குன்மம்

வயிற்றையெரிக்குங்குடல்குமட்டும்வாய்நீர்சுழற் றுந்தலைவலிக்கும்
உயிர்ப்பை யழியக் கிறுகிறுக்கு மோங்கா ளிக்கும்புளித்தேக்கும்
மயிர்க்கால் தோறும் வேர்வைவரும்வயி றும்பொருமிக்கழிந்திரையும்
எயிற்றை யெரியு முடலிளைக்கு மெரியுங் குன்ம மிதுவாமே 63

கிட்டச்சூரணம்

வளமையுள வால்ப்பட்டை பத்துடன்...................
    வரிக்கடுக் காய்நல்லதாய்
மன்றுபால மைந்துட னிடித்திதைப் பொடிபண்ணி
    மருவுகோ மூத்திரத்திற்
தளாரமலேயூறப் போட்டிருப் புக்கிட்டந்
    தன்பொடியு முரியதாகத்
தனியவே மூன்றுநா ளூறியோர் கெசபுடந்
    தனிவிட்டுப் பொடிபண்ணியே
மிளகுசுக் குப்பொடி வகைக்குழக் காகவே
    மேன்மையாய்ப் பொடிகள்பண்ணி
மேவுமிந் துப்புடன் காந்தம்வகை யோர்பலம்
    விளங்கவொன் றாய்க்கூட்டியே
இளகவே மோருடன் சோறுண்டு காசினிடை
    யித்தா ளருந்திவரவே
யெரிகுன்ம மாறிவிடு மணிகங்கை சூழ்கதிரை
    யெந்தைமுரு கேசனருளே 64

7-சத்திகுன்மம்

தீபனந் தியக்கமோடு சேர்சிறு வலியு முண்டாய்த்
தீபுர வாந்தி யோடு பெலன்கெடு மலம்வி டாது
ஆமமாய் நடையுங் குன்று மக்கினி மந்த மாகும்
கோபமாஞ் சத்தி குன்மக் குணங்களைக் கூறி னோரே 65

வில்வாதிலேகியம்

தவமான வில்வவேர் கொடுவேலி சங்கவேர்
    சாற்றிடு முவாய்ப்பட்டையும்
தக்கதோர் முருங்கைக் கிழங்குட னழிஞ்சிலுந்
    தகைமையா யிவைகள்பாதி
நவமான வில்வவேர் பாதியாம் வகையெலா
    நன்றாக வேயிடித்து

நாடிய கஷாயமதை யெட்டிலொன் றாகவே
நலமுறக் காய்ச்சியிதனைத்
துவலையற நன்றாய் வடித்திதிற் கற்கவகை
சொல்லுவோம் வகையாகவே
சுக்கைந்து பலமிளகு திப்பிலியொவ் வோர்பலந்
துய்யவிந்துப்பி னுடனே
எவரெவரு மெச்சுவெந் தயமுமிரு சீரகமு
மிவையெலாம் வகைகாற்பல
மேத்திடுஞ் சூரணஞ் சாலதனி லேயிட்டு
விருநாழி நெய்யினுடனே 66

நேரான தேனினுட னாவினுறு பாலுமே
நெடியநா ரத்தைதானு
நிலைபெற்ற வெலுமிச்சை னாறுகனியு மிஞ்சியு
நிரப்பவே வகைநாழியாய்ச்
சீரான பழவெல்ல மதுபலம் பத்தோடு
செப்புவெள் ளுள்ளிநாழி
சேரவே கூட்டியதை லேகியம் பண்ணியே
தினமுமுக் கழஞ்சுகொள்ளத்
தீராத வெரிகுன்மஞ் சிறியவலி குன்மமுஞ்
சேர்ந்தவெள் ளோங்காளமுஞ்
சேரும்விஷ பாகமொடு பாண்டுகா மாலையுந்
தீராக்கி ராணிவகையும்
பாரோர் மதிக்கவிவ் வகையெலாந் தீர்த்திடும்
பரவுமணி கங்கைசூழும்
பகர்கதிரை மலையிலுறு மடியர்துயர் தீர்த்திடும்
பன்னிரு கரத்தனருளே 67

8-வலிகுன்மம்

காய முலரும் வயிறூதுங் கருகு மேனி கருத்தழியும்
பாய வயிறு மிகவிரைந்து பருத்த விலாவு முளைபோலாம்

தூய நடையு மிசக்குறையுஞ் சோறு மிகவுஞ் செல்லாது
மாய வலியின் குன்மமென வல்லோர் சொன்ன வாறிதுவே 68

வெள்ளுள்ளிலேகியம்

நாயுருவி நீர்முள்ளி யிலைவெரித் திடுசாம்பல்
நவில்வகைக் கிருநாழியாய்
நத்துபதி னாறுபடி நீரிற்க ரைத்ததனை
நாளுற விட்டெடுத்தே
ஆயவடி யிட்டபின் னாழியாய்க் காய்ச்சியே
யானவுவர் மண்குறுணியி
லடைவாக நீர்தூணி விட்டடுப் பேற்றியே
யதுநாழி யாகவற்றிக்
காயநன் றாய்வைத்து வெள்ளுள்ளி கொடுவேலி
கருதுவில் வங்களுடனே
காணவரு வேர்களிவை யாகவகை யிற்பலங்
கருணையுட னளவாகவே
தூயநன் றாயிடித் துத்தூணி நீர்விடு
துலங்கவெரி யெட்டிலொன் றாய்ச்
சுவறவே காய்ச்சியிவை யெல்லாமொன் றாகவே
சொல்லுமிள கித்துப்புடன் 69

சீரகந் திப்பிலி சேரு மோமமும்
சாரவே வகைபலந் தனைப்பொடித் திவை
சேரநல் விலேகியந் திரளக் காய்ச்சியே
ஆறொரு மண்டல மகலுங் குன்மமே 70

பொதுமருந்துகள்

கள்ளிப்பாலுண்டை

உள்ளி பெருங்காய மோரொன்று முப்பலமும்
கள்ளிப்பா லாழாக்குக் காணவே-வெள்ளி

இரசமுடன் றேங்காயி லிட்டடைத்துச் சுட்டுண்
பரதமுடன் குன்மம்போம் பார் 71

வேளைச்சாம்பல்

வேகமாம் வேளை தன்னில் விளம்பிய சமூலந்தன்னைப்
பாகமாஞ் சாம்பலாக்கிப் பசுநெய்யிற் கலந்தருந்தப்
போகுமே யெரிக்குங் குன்மம் புண்பட வலிக்குங் குன்மம்
ஏகமா மலட்டுக் குன்ம மென்றுமா முனிவர் சொன்னார் 72

குமரிப்பற்பம்

பெருங்காய மெண்கழஞ்சு கெந்தகமெண் கழஞ்சு
பெலத்திடுதிப் பிலியாறு வேர்க்கொம்பு மாறு
தருங்கார மிளகாறு மூன்றுகழஞ் சேலந்
தகுமிந்த மெண்கழஞ்சு மூன்றுகழஞ் சுலுவா
அருங்கான மோதமஞ்சு நற்சீர மாறு
வருமூசிக் காந்தம்பத் தரைபொடியெண் கழஞ்சு
இருங்காய நிலவிலுப்பு மூன்று கழஞ்சுடனே
யேற்றமா மஞ்சளுமூக் கழஞ்சுநிறை கூட்டே 73

கூட்டியதற் சரக்கெல்லா மிடித்துமாவாய்க்
கூறுமிஞ்சி தருஞ்சாற்றி லரைத்துப் பின்னர்
நாட்டியசீ ரிரசமந்த மருந்திற் சேர்த்து
நவில்கையான் றனிலரைத்து மூன்று நாளிற்
காட்டியதோர் குமரிமடல் தன்னை வாட்டிக்
கசக்கியெடு நீர்விட்டுக் கருத்தா யாட்டி
வாட்டமுற நிழலுலர்த்திப் பொடித்துத் தேனில்
மண்டலமொன் றருந்தியிடும் வகையைக் கேளே

கொண்டிடுமுன் னேர்வாள மரைத்துக் கூட்டிக்
கொடுத்துமல சுத்திநன்று யான பின்னர்
உண்டிடுமிப் பற்பத்தை வெருகிற் கொண்டே
யுகந்தபடி னைக்காநா ணீரின் மூழ்கி

மிண்டிடும்பத் தியம்பசுப்பான் முருங்கைப் பிஞ்சு
மிளகுநீர் கூட்டிவரிற் றீர்வி யாதி
கண்டிடுநோ குன்மமெட்டுக் கிராணி வாதங்
கடுஞ்சூலை குடல்வாதங் கலைந்து போமே 75

குமரிப்பற்பம்-2

சூதங் நாலு சிலையிரண்டு தூய கெந்தி யெட்டாகும்
ஓதுங் காந்த மதற்கிரட்டி *புருக்கின் பொடியு மதற்கிரட்டி
சீதக் குமரி மடற்சாற்றிற் சேர்த்தே யாறு நாளரைத்து
மீது புதிய கலசத்தில் மிகவு மெரித்துப் பொடியாக்கே 76

பொடியாங் குமரிப் பற்பமதைப் புதிய தேனிற்குழைத்தருந்திற்
கடியார் பிலிகை வலிகுன்மங் கழிச்சல் கிராணி யுடல்பொருமல்
துடியார் பாவை யெரிகுன்மந் தொடர்ந்த பாண்டு காமாலை
படியா ரிஞ்சிச் சாற்றருந்திற் பறந்தே போகுங் கண்டாயே 77

(வேறுசிலகுன்மங்களும் கூறப்பட்டிருக்கின்றன
அவற்றை இதன்கீழ்த்தருகின்றோம்)

1-கொலைக்குன்மம்

மேல்வயி றதனில் வந்து மிடைபட வலித்தெ ரித்துச்
சாலவே வாய்நீ ரூறித் தங்கிடா தேப்ப முண்டாம்
சீலமாங் குளிரே யுண்டாய்ச் சேர்கவுள் வெதுப்பு மாகில்
கோலமாஞ் சுழலி ஞளை கொலைக்குன்ம வாயு வாமே 78

2-மூலகுன்மம்

கீழ்வயி று வலித்துநொந்தே யடசிக் குத்திக்
கெஞ்சிடவே குருதிவிழும் வயிறு மூதும்
தாழ்வறவே மூலநொந்து வெளியிற் றள்ளுந்
தானருந்து மசனமெலா மறுத்தாள் வற்றி

---

*புறுகைச் சோலமதற்கிரட்டி என்றும் பாடம்.

ஊழ்பெறவே கிறுகிறுத்து வெளுக்கு மேனி
யுதரநொந்து வலியிரவி லதிக மாகும்
மூள்பெருமிக் குணமெல்லா மிருக்கு மாயின்
மூலசிறு குன்மமென பொழிந்தா ரன்றே 79

3-ஈரல்வாதகுன்மம்

மூதகுளைந்து குத்திமெத்த விறைத்து வேர்த்து
முட்டதா யிருபுறத்தில் விலாவைக் கிட்டிக்
குதுகுதுத்துக் குடலதனை மேமேல் வாங்கிக்
கொண்டீரற் றளிரதனிற் குத்துண் டாகும்
கதுமெனவே புரண்டுளைந்து கடின மாகிக்
களைகளையா யுவாதிமிஞ்சிச் சோகங் காட்டும்
இதுவீரல் வாதகுன்ம மென்றே வேத
மியம்பியதிக் குணமதனை யியல்பிற் காணே 80

கண்டிடுந் திரண்டு குத்திக் களைத்துடல் பொருமி முட்டாம்
மிண்டியே யீரல் தன்னில் விரைவினில் விறைப்புண் டாகும்
கொண்டிடு மன்ன மீறிக் குமட்டிடுங் குமிறி யோடும்
அண்டிடு மீரல் வாத குன்மமென் றறைந்தா ரன்றே 81

4-மரணகுன்மம்

வலித்திடும் புரட்டிக் குத்தி வயிறது பொருமி முட்டாய்க்
கலித்திடப் புரண்டு விம்மிக் கனத்துட லழுது சீறிச்
சலித்திட வோங்காளித்துச் சமித்திடா தெரிக்கு நெஞ்சு
நலித்திடு மரண குன்மஞ் செய்குண நாட்டுங் காலை 82

5-அடைப்புக்குன்மம்

அடைத்திடு நெஞ்சிற் குத்தி யவலமாய்ப் புரட்டி யேறிப்
படைத்திடுங் குடலை யீரற் குலையினிற் பதற வேறிப்
புடைத்திடும் பொருமி முட்டாய்ப் பொறுக்கரி தாகு மிண்டி
இடைத்திடு மடைப்புக் குன்மஞ் செய்குண மியம்புங் காலே

6-பிலிகைகுன்மம்

மலத்தை யிறுக்கி மந்திக்கும் வலுவா யுதரந் தனிற்புரளும்
பெலத்தே யதைக்கு மீரலொடும்பெருகக்கனத்துப் புரண்டேறும்
உலர்த்து மசனங்குறைந்துவருமேமாங்காளித்துப் புளித்தேப்பாம்
குலத்திற் பெரிய பிலிகைகுன்மக் குணத்தைப் பேசுங்குறியாமே

வாய்வுரோகம்.

அருளொளி வடிவாம் வெள்ளி யசலத்தி லமர்ந்த மூர்த்தி
திருவடி மறவாச் சிந்தைத் தென்றமிழ் முனிவ னந்நாள்
உரைசெயு மாயுள் வேதத் தோதிய வாய்வு ரோகம்
பெருகிய குணமு மேற்ற சிகிச்சையும் பேச லுற்றும் 1

வாயுக்களின் பெயர்த்தொகுப்பு

உற்றிடும் பிரமை வாயு வூனந்திடுங் கிரந்தி வாயு
செற்றிடா னந்த வாயு செறிந்துயிர் வாங்கும் வாயு
வற்றிடும் பித்த வாயு வலித்துட லடங்கும் வாயு
பற்றிடுஞ் சேற்ப வாயு பகர்வாத வாயு வொன்றே 2

குண்டல வாயு வொன்று குடல்வாயு குமிழும வாயு
மண்டல சூல வாயு மயக்கிடு மெகுத்து வாயு
கொண்டெழுஞ் சீத வாயு கொலைசெயும் பக்க வாயு
பிண்டுசெய் துடலிற் குத்தி விடாதுயிர் பறிக்கும் வாயு 3

இருத்திடு மயக்கும் வாயு வேறியே யிறங்கும் வாயு
உருத்திடுங் கபால வாயு வுட்டண மெழுப்பும் வாயு

பெருத்திடுஞ் சூத வாயு பேசிடு மந்த வாயு
கருத்தழித் திடுமோ வாயு கடைக்குடல் சொருகும் வாயு 4

கருவழித் திடுமோர் வாயு கட்டியாய்ப் புரட்டும் வாயு
உருவழித் திடுமோர் வாயு வுள்ளறி வெழுப்பும் வாயு
பருவெழுப் பிடுமோர் வாயு பரிக்குடல் சொறியும் வாயு
அருவருத் திடுமோர் வாயு வந்தரத் தெழுமோர் வாயு 5

எரிந்திடும் வாயு பின்னி யிடைகலை யியங்கும் வாயு
பரிந்திடும் பூத வாயு பயம்வரச் சுழற்றும் வாயு
பிரிந்திடந் தரஞ்சேர் வாயு பெரும்பாட்டுச் சூத வாயு
சரிந்திடு மகோர வாயு சதித்திடுஞ் சன்னி வாயு 6

உட்டண கிரந்தி வாயு வுறும்பிற வீச்சு வாயு
நட்டவிந் திரிய வாயு நலக்கிடுங் குன்ம வாயு
கெட்டவே தாள வாயு கிளரண்டஞ் சேரும் வாயு
திட்டமார் வீணா தண்டைச் சேர்ந்திடுங் குய்ய வாயு 7

துன்னிய திமிரின் வாயு துயில்செயப் பயித்திய வாயு
இன்னுயிர் வாங்கும் வாயு வெழுந்தற மயக்கும் வாயு
நன்னிகர்ச் சத்தி வாயு சமித்துநித் திரைசெய் வாயு
மின்னிகர் வாயு பத்தில் விரிந்திடு மறுப நாமே 8

வாயுசெய்யுங் கோளாறு

குத்திடுஞ் சிலது சீறிச் குடலிடைக் குமிறி யோடிக்
கத்திடுஞ் சிலது மீறிக் காலினி லுளைந்து வாங்கும்
ஒத்திடுஞ் சிலது பிண்டி யுருத்துட லுயிரை வாங்கும்
செற்றிடுஞ் சிலது நாளுந் தீன்செரித் திடாமற் செய்யும் 9

அடுக்கிடுஞ் சிலது மீறி யறிவழித் திடுங்கா வீழ்த்தி
முடக்கிடுஞ் சிலது சீறி முறித்திடுஞ் சிலது மூசித்
தடுத்திடுஞ் சிலது சன்னி சாய்ந்திடுஞ் சிலது மீறி
இழுத்திடுஞ் சிலது விக்கி யேப்பமுஞ் செய்யு மன்றே 10

வலித்திடுஞ் சிலது வாங்கி வசமற விழுத்தி மூசி
நலித்திடுஞ் சிலது குத்தி நடுக்கிடுஞ் சிலது பேசிச்
சலித்திடுஞ் சிலது தானத் துளைந்திடுஞ் சதியாய் வீங்கும்
நெரித்திடுஞ் சரீரந் தன்னை நிறைபசி யெழுப்பு மன்றே 11

இடைகலை சுழுனை மூன்று மிந்திரி யங்களைந்தும்
கடைதரு பூத மைந்து நாட்டுமுன் பொறிக ளைந்தும்
தடைதரு வாயு பத்துஞ் சார்ந்திடு நாடி பத்தும்
அடைதரு மாறு தார மவத்தையு மைந்து சாரும் 12

மலசலம் விந்து நாத மாயையுட் கருவி வாக்குச்
சலமுறு தால சூக்கஞ் சார்ந்திடு காயக் கூட்டில்
நலமுறு தத்து வங்க ளண்ணி னின் றிடுவ தேபோற்
பலமுறு வியாதிக் கெல்லாம் பதியுயர் வாயு வாமே 13

வாயுவே சீவா தார மாகிய வலிமை தன்னால்
மேயுயர் வியாதிக் கெல்லாம் விதித்திடு மரசு மாகும்
ஆயுயர் வாயு வின்றி யருந்திடா வினைக டாமும்
பாயுமா காயக் கூட்டிற் பாவைபாட் டவனே யாமால் 14

பிரமைவாயுவின்குணம்

இருந்திடும் பேச்சு மின்றி யிடருறு மறிவு சேடாய்
வருந்திடும் பயம்வந் தேங்கி மயங்கியே சலிப்புண் டாகும்
பொருந்திடுந் தனியே நாளும பொருமியே யழுது சோரும்
அருந்திடுங் கொடுத்தா லன்ன மவலமார் பிரமை வாயு 15

கிரந்திவாயு

உருத்திடுங் கிரந்தி தோன்றி யுளைந்திடு முறக்கம் வாரா
பெருத்திடுந் திமிருண் டாகிப் பேதிக்கு முயர வேறி
இருத்திடு மயக்கும் வெப்பா யிரவினிற கனவு காட்டும்
வருத்திடுங் கிரந்தி வாயுக் குணமென வகுக்கும் வேதம் 16

(மற்றொருபிரதியின்படி)

பெருத்திடுந் தேம லாகிப் பேதிக்கச் சொறிந்த முற்றி
உருத்திடு மூளைந்து குத்தி யுறங்கிடா தினவுண் டாகும்
இருத்திடு மிருமலுண் டா யிரவினிற் கடினஞ் செய்யும்
வருத்திடும் வயிற்றின் மார்பில் வலித்திடுங் கிரந்தி வாயுவே 17

உட்டணகிரந்திவாயு

காலினிற் றிமிர்த்து ளைந்து கடுத்துமே லெரிவுண் டாகித்
தோலினி லிரத்தமின்றித் துணிந்துடல் திரங்கி மேனி
சூலினிற் கருகி வாடித் துயர்செயு முயர வேறும்
மேலினுட் டணகி ரந்தி வாயுவென் றுரைக்கும் வேதம் 18

ஆனந்தவாயு

மோனமாய்ப் பேச்சு மின்றி மோகித்து முறுவல் செய்தே
ஈனமா *யியற்கை பேணு திருந்திடும் பசாசு போல
ஊனமில் கஞ்சி தண்ணீர் கொடுத்திடி னுவந்து கொள்ளும்
தானமா னந்த வாயுச் செய்குணஞ் சாற்றுங் காலே 19

பித்தவாயு

பித்தமுங் கொதித்து வாய்நீர் பெருத்திடு மயக்க முண்டாம்
சித்தமு மறிவு கேடாய்த் தியக்கியே மயக்கி யேறும்
நித்திரை யிரவின் வாரா நித்தமும் பிதற்றிப் பேசும்
சுத்தயார் பித்த வாயுத் துயர்செயுங் குணமி தாமே 20

கடுக்கமும் பயமு மாகி நாடோறுஞ் சரீரம் வற்றி
மிடுக்கிடுங் கோப மாகி வேகித்துப் பலவும் பேசும்
திடுக்கிடும் பயமில் லாமற் றிரிந்திடும் விசர்போ லோடும்
அடுத்திடும் பித்த வாயு வதிகரித் தவலஞ் செய்யும்

---

*ஈனமா மில்லம் பேணு என்றும்.

(பாடபேதம்)

நடுக்கிடுங் கிறுகி றுக்கு நாளொரு பேதங் காட்டும்
மிடுக்கிடு முயர வேற்றி யேங்கித்துச் சுழற்றிச் சுற்றும்
திடுக்கிடப் பயமுண் டாகித் திரிந்திடும் விசர்போற் பேசும்
அடுத்திடும் பித்த வாயு வதிகரித் திடவுஞ் செய்யும் 21

சுத்தவக் கினியிற் பித்தந் தோன்றியே சிரத்தி லேறி
நித்தமு மொருவர் செய்த பிழைபினை நினைத்துப் பேசும்
மெத்தவே யறிவு போல விளம்பிடும் விசர்கொண் டோடும்
சித்தமார் பித்த வாயு செய்குணஞ் செப்பும் வேதம் 22

அகோரவாயு

தாகித்துத் தண்ணீர் கேட்குந் தழலென வெரிந்து குத்தும்
வேகித்து வுயர வேறி மயக்கிடும் வெறிபோற் பேசும்
சோகித்துக் களையுண் டாகித் துயர்செயு முணர்வு கொள்ளா
மோகிக்கு மகோர வாயு செய்குண மொழியுங் காலே 23

மூலக் கனலி லெழுந்தபித்த முதிர்ந்தே கோபக் கனலாகிக்
காலக்கனல்போற் கதித்தெழுந்துகதித்தே கோபடுக்கொதித் துண்டாய்ச்
சூலக் கனல்போற் கடுங்கோபத் துயராற் றுயர மிகவுண்டாம்
ஆலத் தகோபப் பெருவாயு செய்யுங் குணங்க ளறிவீரே 24

அந்தரவாயு

கண்ணினைச் சுழித்து வாங்கிக் காதடைத் திருளாய் மூடி
எண்ணமாய் மயக்கி யேறி யிடர்தருங் களைத்து வேர்க்குந்
தண்ணெனச் சரீர முற்றுந் தான்விறைத் திடுந்தீர்த் தேகும்
திண்ணமந் தரத்தின் வாயுச் செய்குணந் தேர்ந்து கொள்ளே

பழுவேவுடல் மிகவேதிமிர் பாருநெஞ்சு பசியும்
பாதங்கழல் தோல்பஞ்செழு மார்மஞ்சன முதலாம்
சுழியாய்விடு தொடர்வாதமும் வழிநாள்பழி யொழிநோய்
சயனம்பொரு விழிமஞ்சளி னொளிதங்கிதன லாகும்

பழுவாயுவி னுடனேறிய வுளைவேமிக வென்பு
படராழியும் விடுமாறெனத் தடுமாறுதல் மிகுமாம்
பழதேறும்மல முடனூறுதல் குடலந்தர் வளையம்
படர்வாயுவி னடைவாகடர் முதலோதிய வடைவே

அண்டவாயு

வயிற்றினி லடசிக் குத்தி வலித்திரு விரையுள் வாங்கி
உயிர்ப்பறப் பொருமி வீங்கி யுண்முட்டா யிழுத்துப் பூட்டி
அயிர்ப்புற விடுப்பு நாரி கடுத்திடு †நூலிற் குத்தும்
செயிர்ப்புறு மண்ட வாயு சிரத்தினு மயக்கி யேறும் 27

ஏறியே வாதந் தோன்றி யிடர்செய்து வருத்தி நிற்கும்
மீறியே திமிர்த்துக் குத்தி விறைத்திடு மயக்கி வேர்க்கும்
வீறுயர் மருந்தை மீறி விடுஞ்சல மலம டிக்கும்
கூறிய வண்ட வாயு கொடுமையுஞ் செய்யு மன்றே 28

பக்கவாயு

ஒருபுறம் விரையை வாங்கி யுறவலித் தடசிக் குத்தி
மருவுறச் சலம லத்தை மறித்திழுத் தடசி முட்டாய்
வெருவுற மயக்கி யேறி விறைத்திடும் வேர்வை யுண்டாம்
உருவுறும் பக்க வாயு வுயிரையும் பறிக்கு மன்றே 29

அன்றியும் பக்க வாயு வதிகமாய் வாயு வேறி
ஒன்றிய மருந்தை மீறி யுருதனுவேர்த் தடசிக் குத்தி
வென்றிட வலித்து வாங்கி விறைத்துடன் மயக்கி நிற்கிற்
கொன்றிடுஞ் சிலது மாறுங் கொலைசெயும் பக்க வாயு 30

பக்கவாயுவில் அசாத்தியக்குறி

கொன்றிடுங் குணமே யாகிற் குளிர்ந்திடும் விறைக்கும்வேர்க்கும்
நின்றிடுஞ் சிரத்தி லேறி மயக்கிநீர்ச் சீலை போல

† விலாவிற்குத்தும் என்றும்.

வென்றிடு மருந்தை யெல்லாம் விழிதனைச் சொருகி மேலே
சென்றிடிற் பக்க வாயு தீமையே செய்யு மன்றே 31

பூதவாயு

வற்றியே சரீர நாளும் வாடியே மயக்கி யேறும்
சொற்றிடும் வெறிபோற் பேசித் துன்பமாய்ப் பசாசு போலப்
பற்றியே நடுக்கி யேறிப் பசியின்றி யிருந்து சோம்பும்
உற்றிடும் பூத வாயுச் செய்குண முரைக்குங் காலே 32

சிரத்தினி லுயர வேறித் திமிர்ந்திடு மயக்கி வேர்க்கும்
உரத்திடுங் கடினஞ் செய்யு முவாதியாய் நடுக்கி வீழ்த்தும்
இருத்திடும் பேச்சு மின்றி யிடருறுஞ் சிலநா ளின்றே
வருத்திடும் பூத வாயுச் செய்குணம் வகுக்குங் காலே 33

வேதாளவாயு

சீதமா யுளைந்து குத்தித் திமிர்த்திடுஞ் சிரத்தி லேறிப்
பேதமாய்த் தலைந டுக்கிப் பேயதின் குண முங் காட்டிச்
சேதமா யொருபா கத்திற் றிமிர்விறைப் பதிக மாகும்
பூதவே தாள வாயுக் குணமெனப் புகலும் வேதம் 34

உருத்திடுந் திமிர்த்தே யேறி யுரத்திடு மயக்கி வேர்க்கும்
சிரத்தினிற் கனத்து மிண்டித் திக்கிடு நடுக்க முண்டாம்
வருத்திடும் பிடரி வாங்கும் வலித்திடுங் கடுக்கு நாரி
பெருத்திடுந் தலைநோக் குத்துப் பெலக்கும்வே தாள வாயு 35

(வேறுபிரதியின்படி)

வாதம்வளர் வேதாளவவ் வகைவன் றுறுவசனம்
மருஞ்சடர் குளிர்மத்தமும் வலியும்பிர மையுமாம்
பேதம்பல வசனந்தனில் மெய்யும்பல பொய்யும்
விழியும்பசு நிறமஞ்சளும் மெலிவார்விழி துஞ்சார்
சூதந்தர பூதங்கள் சுணங்கன்கன லெழுநோய்
சொல்லும்பய மலரும்விழி சுழலுந்தலை பிடர்நோம்
மீதுஞ்சட ரெதிரேவரு மெய்வாய்வழி பெருநீர்
விடமந்தர வளையஞ்செறி படர்வாயுவி னடைவே

படர்வாயுவி னடைவேசடர் வலியால்வரு துயரிற்
பாதங்கர மொன்றொன் றினைப் பற்றும்படி தோற்றும்
விடமேவிய துயர்போல்விழி விண்ணோகிய வடிவாம்
வெண்முத்தை யிறுக்குஞ்சிறு கன்னத்தை வளைக்கும்
கொடிதேசல மலமேவிட குறிநீர்விடு கசிவிற்
குன்மந்தனி லன்மங்குடி கொண்டேபிற வஞ்சம்
கடிதாகிய படிதீரிது காயந்தனி னின்றே
காலன்விடு சாதங்கயி றென்னுங்கன சோபம்
வடவாமுக மெனவேவலி யறிவேவிசட வந்தால்
வாதஞ்செறி மூலந்தனில் வகையென்றனர் முனிவோர்

குண்டலவாயு

கண்டிக்கு முதரந் தன்னிற் கதித்திடுங் கூப்பிட் டோடும்
விண்டிச்சை விரும்பித் தின்னின் மேற்படு முருண்டு கற்போற்
றெண்டித்துச் சிதறிப் பின்னுஞ் சிதைந்துடல் பரந்த டங்கும்
கொண்டிப்போ ருடலிற் குத்துங் குண்டல வாயு வாமே 38

மூலவாயு

சடர்வாதமுள் ளுடல்மேலெரியுங்குட லெரியுந்
தலைநோவொடு வருமாசனந் தினமேவமிக வுளதாம்
அடைவேசல மலமேவிட வரிதாயிடும் விழியு
மரிநீரொடு தலையோடெரி தினநாசிகள் தினவாம்
உடல்சோருத லெதிரேறுத லூரமேவிடு முதுகும்
முளைவோடலர் குதிசீறுதல் விரல்சேர்வலி யுளதாம்
படருமுத லுடருதல் துயரேறுதல் மீள்தல்
பாதங்குளிர் மேல்வெதும்புதல் பலபேதமு முளதே

வற்றி மலந்தீயு மங்கிக்கு மேல்வெளுக்கும்
சற்று மலைச்சல் தணியாது-முற்றுமிது
மூலமாம் வாயுவென முன்னோ ருரைத்தபடி
சீலமாய்க் காண்பார் தெளிந்து. 40

குடல்வாயு

குடலில் வலிக்குங் காலுளையுங் குமிறு மிகவு மந்திக்கும்
உடலி லடங்கி யோடிநிற்கு மொருகா லன்றிப் புரண்டிநிற்கும்
கடலிற் றாங்க மதுபோலக் கலக்கு மூடே வாதைசெய்யும்
இடலிற் பெருத்த வரால்போலச் சிறுதுங் குடலில் வாயுவிதே

அத்திரவாயு

பத்தியங் கொண்ட போது பலபட மலமுந் தள்ளி
நித்தியம் புளித்தேக் கிட்டு நின்றிடு நருவ லாகச்
சத்தியுந் தழன்று காட்டிந் தறுகிடாத் தலனம் பேசும்
இத்தனை குணமுங் கண்டா லத்திர வாயு வென்னே 42

ஆற்றுமைவாயு

மண்டியே யுதரந் தன்னின் மறைக்குழு லாக்கி னீயைக்
கொண்டதோ ராகா ரத்தைக் குழப்பியற் றுமை யாக்கும்
உண்டிடிற் புளித்தெ ரித்தே யுடனுற மலமுந் தள்ளும்
விண்டவாற் றுமை வாயு வென்றுதான் விளம்ப லாமே 43

மந்தாக்கினிவாயு

உண்டியிற் பொருமலா லுமூண்டனல் விளைத்த லாலும்
கொண்டுதான் கஞ்சி தண்ணீர் கொதிப்புடன் வெதுப்பி னாலும்
மண்டியே வெளுத்துக் காய மயங்கிட வுலர்த்த லாலும்
அண்டர்முன் பேசும் வேத மக்கினி மந்த மென்னும் 44

நீண்டு பசியிருந்து நின்று வயிறளவி
வேண்டியது தின்ன விரும்புமே-மீண்டுமது
*சந்தோஷ மாகியிகத் தானே யுவாந்திக்கும்
மந்தாக் கினியென்னும் வாயு. 45

---

*சந்தோஷமாகி — தோஷத்தோடு கூடியதாகி என்க.

Dion. S. Sriganeshan

வந்து மிருந்து பசியுமன்றி வயிறும் பொருமி மந்திக்கும்
சிந்தை தனிலே நினைந்தவெலாந் தேடிக் கொள்ள வொட்டாது
இந்தக் குணமே யிருந்ததெனி லியனு மக்கினி யந்தமென
அந்தப்படியே முனிவ ரெலா மருளிச் செய்த படியாமே 46

ஊர்த்தவாயு

கொண்டிடு மசன நின்று குமட்டியே பொருமிக் கொள்ளும்
மண்டியே நெஞ்செரித்து வாயூறி வாந்தி செய்யும்
பண்டையின் மலமுந் தீயும் பத்தியங் கோபித் தோங்கும்
விண்டதா னூர்த்த வாயு விதிதனை விளம்பினோமே 47

கெண்டைவாயு

சுரத்தினு லுடம்பு வற்றித் தடியென விடிக்கு நெஞ்சு
உரத்திட வீரல் மீதே பொருபுறங் கனப்ப தாகும்
வருத்திடும் வலியு முண்டா மலமுளர்ந் துருண்டு வீழும்
குருத்துவ மறிந்து கெண்டை வாயுவா மென்று கூறே 48

வாயுக்களின் அசாத்திய சாத்தியக்குறிகள்

கீழே நின்ற வாயுக்கள் கிளர்ந்து மேலே நோக்கிடுகில்
நாளை விரைந்து மீளாது நன்றாய்க் கீழே நின்றிடுகில்
தாளை விங்கா மிகுதாகங் கொள்ளா திருக்கு மாமென்னில்
மீள்வா ரிதுவே திண்ணமென விரைந்து மருந்து செயலாமே

சிகிச்சை

குண்டலவாயு முதலியவற்றிற்கு

கருங்கோழிப் பற்பம்

மூன்று வருடந் தான்சென்று முதிர்ந்த கோழி தனைப்பிடித்துக்
கொன்று குடல்தோ லிறகுமுதற் காலு நீக்கிக் கற்கங்கேள்
தோன்று முப்பு மிளகுள்ளி சுக்குச் சித்ர மூலமுடன்
ஆன்ற வீரூ மூலிவே ரளவாய் வகைக்குப் பிடியொன்றே 50

ஒன்றே சமித்தம் பாக்களவா யுற்ற கடுக்கா யோரைந்து
நன்றா யரைத்துச் சாக்கெல்லா நகிலுங் கோழி தனிற்பொரித்தே
அன்றே யருசி யுவாய்நொச்சி யரிய வேலிப் பருத்தியுடன்
பொன்றா மாறு தலைக்கழுவிப் பொருந்தக் கீழ மேலுமிடே 51

இட்டுக் கோழி தனைநடுவே பெட்டு காழி நீரூற்றி
அட்டு நீரு முரிசித்த வதன்பி னெடுத்துக் கோழிதனிற்
சட்ட வெலும்பு தனைநீக்கிச் சாக்கோ டரைச்சி தனையரைத்து
மட்டாய் வெருகி னடிகொள்ள மாறுங் குண்ட லவ்வாய்வே 52

ஆடிப்புவாய்விற்கு
சிவகாமசுந்தரி தயிலம்

சூதபுங் காந்தந் தாளுஞ் சொற்படி கழஞ்சு நெல்லி
போதவே யொருசி றங்கை புகல்கடுக் காயு நாலைக்
தேதமி லீந்து தாளு மிருகழஞ் சிணங்குந் தான்றி
பாதவ மீதிற் காய்கள் பத்தொரு சிறங்கை சுக்கே 53

சிறங்கையோர் ¶பறவை மொட்டுத் திகழ்பெருங் காய மோமம்
பிறங்கிய கழஞ் சிரண்டு கடுகொரு சிறங்கை யுள்ளி
அறங்கிள வொருசி றங்கை யானவெண் காரஞ் சற்று
நிறங்கிளர் மிளகு சாதிக் காயுநீ பத்துக் கொள்ளே 54

கொள்வது வெப்பம வேர்மா விலங்கைவேர் குறுந்தொட் டிவேர்
கள்ளவிழ் புங்கம் வேர்வெண் முருங்கைவேர் கதித்த நத்தைத்
துள்ளுறு சூரி தாது வளையின்வேர் பொன்னுங் காணி
உள்ளவேர் கோவை வேருந் தண்டுநீ யொக்கக் கூட்டிடே 55

கூட்டுபேய்க் கொம்ம டியிற் குறித்திடு மிலையு நொச்சி
ஈட்டிய சிவனார் வேம்ப மவுரிவே ரிருநி லத்தில்
நீட்டிய வாகை யெல்லா மெலுமிச்சம் பழம்பத் தொன்பான்
காட்டுநல் லெண்ணெய் கூட்டிக் காயவைத் தெரித்தி றக்கே 56

¶பறவை மொட்டு—செண்பகமொட்டு

இறக்கியே வடித்து நாளு மினிதாட னுள்ளுந் தின்று
சிறக்கவே மேலும் பூசிக் காலுளுஞ் செறியத் தேய்த்தால்
துறக்கிடு துடிப்பு வாயு சுவாசிதன் னருவி னூலே
பறக்குமென் றருந்த வந்தோர் பகர்ந்தனர் பாரி னுக்கே 57

குடல்வாயு பக்கவாயு முதலியவற்றிற்கு
காயம்

சாரணை கான்றை நாரி தருமிள குள்ளி சுக்குத்
தேறுதிப் பிலியிந் துப்புச் சிறுகடுக் காய்க ருஞ்சீர்
மாறிடு மிங்கு சீனக் காரமு மல்லி பாளம்
சாறிடு கடுகு ரோணி சவர்ப்பாரி காரந் தேடே 58

தேடியே சமன்க ழஞ்சு சேரவே யரைத்துக் காய்ச்சிக்
கோடவே குடிக்கிற் காயங் குலைந்திடும் பக்க வாயு
ஓடிடும் வயிற்றி னுள்ளே யுருண்டிடு கெருகெ ருப்பு
வாடிடும் வயிற்றிற் குத்து மாறுமென் றியம்பி னாரே 59

காயம்-2

மாவிலங்கை கான்றைகாற் றோட்டி நொச்சி
மருவுமுருக் கெலுமிச்சை வெட்பா வட்டை
காவினிம்பங் கொன்றையழுக் கிறுமு ருங்கை
கழற்சிசா ரணைகொற்று ளிலைத்தில் வாகை
தாவிபிலை துளிரிலையுந் தேங்காய்ப் பூவுஞ்
சமன்கொண்டே பொட்டொன்று யவித்தி றுத்து
மேவியசா ரணைதூ தூவீழ்நாய் நெல்லி
மிகுமல்லி செவ்வகத்தி முருங்கை வேரே 60

வேரிவையோ ரளவுபெருங் காயஞ் சுக்கு
மிளகுளுவாக் கடுகுமஞ்சள் வெண்கா யுள்ளி
காரியசீ ரகமுடனே திப்பில் வாளம்
கழற்சிதரு பருப்புடனே ரளவாய்க் கூட்டி.

ஊறியமுற் கஷாயத்தி லரைத்துக் காய்ச்சி
யுடன்பருகச் சிற்சேறரண் டெண்ணெய் சற்றுக்
கூறியநோர் குடல்வாதம் பக்க வாயு
கொடியவயிற் றடசல்வலி குன்மம் போமே 61

காயம்-3

பக்க வாயு நெருநெருப்புப் பகரும் வயிற்றிற் குத்துக்கு
மிக்க காயங் கான்றை வட்டு மீறுஞ் சாரணை நன்னாரி
ஒக்க வுள்ளி திரிகடுகு வுவந்த கடுக்காய் பெருங்காயம்
தக்க சீனம் பொரிகாரஞ் சவரின் காரங் கடுகுரோணி 62

உற்ற கடுகு மிவையனைத்து முவந்து கழஞ்சொன் றரைகூட்டி
மற்றுஞ் சுத்தி பெறும்வாளம் வகுத்துக் கழஞ்சு தானுக
வைத்தே யரைத்துக் காயமதாய்க் காய்ச்சி யருந்த வருத்தும்பிணி
கற்றைச் சடையோ னருள்கதிரை வேல னருளாற் கழிந்திடுமே

பற்பம்

கொடிக்கழற்சி தனிற்பருப்பு நெல்லி கோட்டங்
கூடுலுவா வுடைவசம்பு சாதி லிங்கம்
கடற்சில்லு வசுவாசி காந்தஞ் சுக்குக்
கராம்புமிள கதிமதுர மோம மேலம்
அடற்காயஞ் சாதிக்கா யிலவங் கத்தோ
லரிதாரந் துரிசுமனோ சிலைவெ ளுத்தல்
கடுக்காய்த்திப் பிலியிருசீர் நெல்லிக் கெந்தி
சுருதுநவ சீனசவர்க் கார மொன்றே 64

எயுமிவை சமனிடித்துச் சூரணித்தே
யிடுகடுக்காய் சுக்கவித்த நீரிற் கொள்ள
வாயுவகை தீருமே வெப்பு மிஞ்சி
வாக்கியுறிற் றேனிலே யருந்த நன்றாம்
நோயவற்றிற் கேற்றவனு பானங் கொள்ள
நூலறிந்து சிவநாம நுவலு மன்பர்
தீயபிற விப்பிணிதான் றீரு மாபோற்
றீர்ந்துவிடு மெனமுனிவர் செப்பி னாரே 65

பக்கவாயு குணமும் சிகிச்சையும்

(மற்றொருபிரதியிற் கண்டபடி)

வருத்தமுற வலித்தடசிக் குத்தி முட்டாய்
மலசலத்தை யடைத்திறுக்கி மயக்கி வேர்த்தே
திருத்தமற வொருபுறத்தில் விதையை வாங்கித்
தீமையாய் வீங்கிமெத்தத் துயரஞ் செய்யும்
பெருத்தவுள்ளி யாமணக்க மெண்ணெய் கொள்கப்
பெரியசா ரணைக்காயங் கொன்றைக் காயம்
பொருத்தமுறுங் கொம்மடிக்கா யெண்ணெய் நன்று
பொருவரிய கொன்றையெண்ணெய் தானு நன்றே

உள்ளியாமணக்கெண்ணெய்

மாவிலங்கை நொச்சிபுவா யாடா தோடை
வருமுருங்கை காற்றோட்டி புங்கில் வேரும்
காவிலங்கு வேர்வகைக்குப் பலமூன் றாகக்
கருதியிடித் தெட்டொன்றாய்க் கஷாயம் வாங்கிப்
பூவிலங்கு சிற்றேரண் டெண்ணெய் கொத்துப்
புகல்சதுரக் கள்ளிப்பால் காற்கொத் தின்னும்
பாவிலங்கு வெள்ளையுள்ளி பலமு மூன்று
பருங்கடுக்காய் கடுகுதிரி கடுகு காயம் 67

காயமுட னோர்வாளங் கழற்சு மூன்று
கரைத்தெரித்துப் பதத்தில்வடி கட்டிப் பக்க
வாயுவுடன் சூலைகுன்மங் கெர்ப்ப வாயு
வகைக்கெல்லாங் காசிடையுட் கொள்ளப் போகும்
தூயவெண்ணெய் தனிற்பாதி கள்ளிப் பாலுஞ்
சொல்லியவா ளமுங்கூட்டா தெரித்தி றக்கி
நேயமுடன் மாலையிலே யதனைக் கொள்ள
நேரிதா மெனமுனிவர் நிகழ்த்தி னாரே 68

உள்ளியெண்ணெய்-பேதிக்கு

வெள்ளையுள்ளி பலமாறு நொச்சி யிஞ்சி
விளம்பியசா ரணைமூல முழக்குச் சாறு
எள்ளலறும் பூனைதரு சழற்சி தன்னி
வியைந்தபருப் பதுபசுப்பால் தனில வித்தை
உள்ளபடி யொருபத்துக் கடுக்கா யிந்துப்
போரொன்று கழஞ்சைந்து சதுர மான
கள்ளிதனிற் பால்கழஞ்சு தேங்கா யெண்ணெய்
கருதுமுரி கூட்டிவடித் துள்ளே கொள்ளே 69

சாரணைக் காயம்

சாறணைக் கிழங்கிந் துப்புத் தழுதுடை சுக்க துள்ளி
சீறுசிற் றேரண் டெண்ணெய் திகழ்கொடு வேலி வேரும்
கூறுநேர் வாளமஞ்சு குலவிய பொரிகா ரந்தான்
வீறுயர் காய முண்ண விட்டகன் றோடும் வாய்வே 70

சாரணைக்காயம்-2

வெள்ளுள்ளி முருங்கைப் பட்டை வெண்கழற் பருப்புச் சுக்குத்
துள்ளுசா ரணையிந் துப்புத் துலங்குசிற் றேரண் டெண்ணெய்
உள்ளநேர் வாள மைந்தி னுடனரைத் தொன்றாய்க் காய்ச்சி
மெள்ளவே காய முண்ண விட்டகன் றோடும் வாய்வே 71

கொன்றையிலைக்காயம்

நிலபாகல் பிரமிகொன்றை யிலையின் சாறு
நின்றசா ரணையுள்ளி சுக்கிந் துப்பு
நலகாயங் கடுகுபொரி கார மோடு
நவில்சழற்சிப் பருப்புநேர் வாளங் கூட்டிப்
பலமாக விடித்தரைத்துக் காயஞ் செய்தே
பருகவரேற் பகர்வாயு பக்க வாயு
குலமான குடல்வாத மண்ட வாயு
குலைந்தோடிப் போமெனவே கூறும் வேதம் 72

கொம்மடிக்காயெண்ணெய்

அலகைதரு கொம்மடிக்காய்ச் சாறு நாறு
மளவாக நாலுபடி சிற்றீற ரண்டம்
குலைவுமெண்ணெய் படியொன்று நிலத்தின் பாகல்
கூறுஇருக் கொன்றைதபிர் வேளை யோடு
வலியபெரு மருந்துவேர் பிரமி யெல்லாம்
வருசாறு படியொன்று வகைக்குக் கூட்டிப்
பலமுதவு சாரணையின் கிழங்கு பத்துப்
பலமதனிற் சாறுபடி பிழிந்து கொள்ளே 73

கொள்ளவினிக் கற்கவகை கடுகு மஞ்சள்
கொடியபெருங் காயமுடன் மிளகு நற்சீர்
உள்ளகடு ரோகணிநவச் சாரமித்துப்
புயர்சீனம் வெண்காரம் பொரியுங் காரம்
எள்ளலறு சவர்க்காரங் கழஞ்சொவ் வொன்று
மிருபதுநற் கடுக்காய்நன் விதையை நீக்கி
வெள்ளையுள்ளி தோல்போக்கிப் பலமு நாலு
மிகுவாள மொருபத்துச் சுத்தி செய்யே 74

சுத்திசெய்து பசுப்பாலி லவித்த ரைத்துச்
சொற்றவெலாங் கூட்டிமெழு காம்ப தத்திற்
சித்திபெற வடித்தெண்ணெய் கழஞ்சு வீதந்
தின்றுவரக் காலைக்காம் மாலை தன்னில்
வைத்தநல்ல குழம்புபற்ப மாதி யாகு
மலமடைத்தல் சலமடைத்தல் குன்மம் பாவை
கத்தலுறு குடல்வாதம் பக்க வாயு
கடியவண்ட வாயுமுதற் கலைந்து போமே 75

பஞ்சதிரவிய நெய்

சீராரும் பஞ்சகௌவியத்தி னெய்தான்
செப்புமைந்தும் வகையொன்று படியுங் கூட்டி
நேராரும் வெள்ளையுள்ளி பலமி ரண்டு
நிகழ்காய மிருகழஞ்சு தேவ தாரம்

பேராருந் திரிகடுகு கடுக்காய் மஞ்சள்
பேசுநவச் சாரமிந்து சீனக் காரம்
கூராருஞ் சவர்க்காரம் பொரியுங் காரங்
குலவியவெண் காரமுடன் சிற்றரத்தை 76

சிறுநாகம் பூக்குலக்காய் கடுகு ரோணி
செய்யவசு வாசிகராம் பிணைவகைக்குக்
குறையாமற் கழஞ்சொன்று வாளம் பத்துக்
கூறுவிதை கள்ளிப்பாலைங் கழஞ்சு
முறையாக வரைத்துவடித் துள்ளே கொள்ள
முன்னுரைத்த நோய்பலவு முதரந் தன்னிற்
கறையாக வருமாமை யெகுத்துச் சூலை
கடியபல நோய்களெல்லாங் கரைந்து போமே 77

கைமருந்துகள்

சாதிக்காய்-5-மிளகு-ஆழாக்கு. முடிதும்பைத்துளிர் பிடி-1 கூட்டியரைத்துப் பாக்களவு பனங்கட்டியிற்றின்றுவரப் பக்கவாயுமுதலியன தீரும்.

வெள்ளுள்ளி - பலம்-1- பெருங்காயம், கழற்சிப்பருப்பு, மிளகு, சுக்கு-வகை-கழ-2. அரைத்து முன்போற்கொள்ளவும்.

வேப்பங்கொழுந்து பிடி-1. உள்ளி, காயம், மிளகு, சுக்கு-கழ-2. முன்போலரைத்துக்கொள்ளவும்.

முருங்கைப்பட்டையும் உப்புந்துவைத்து ஆட்டுப்பாலிற் கொள்ளவும்.

தில்லையிலையும் தேங்காய்ப்பூவும் துவைத்துப் பிழிந்துகுடிக்கவும்.

வேதாளவாயுவுக்கு
கழற்சியெண்ணெய்

பூதவே தாளமுதல் வாய்வுக் கெல்லாம்
பொருந்தவொரு கழற்சியெண்ணெய் புகலக் கேண் மின்
சீதமறு கழற்சியுறு பருப்புத் தானுந்
திறமாகப் படியொன்றை யிடித்து நன்றாய்
ஏதமற நாலுபடி நீரி விட்டே
யெரித்திறக்கி யொருபடியாய்ப் பிசைந்தி றுத்துப்
போதமுறு மெள்ளெண்ணெ யோரண் டெண்ணெய்
பொருந்துமினுப் பெண்ணெய்.சிம்ப வெண்ணெ யோடே

எண்ணமுறு தென்னையெண்ணெய் படியொவ் வொன்று
மிட்டதிலே கழற்சிதனிற் பருப்பா மாக்கு
வண்ணமுற வரைத்தின்னஞ் சாதி லிங்க
மனோசிலைசெங் காந்தமொடு மாவின் றூரம்
திண்ணமுறு பாதரச நெல்லிக் கெந்தி
சிறந்தகல்நார் கல்மதநற் கடுகு ரோணி
நண்ணுகருங் குங்கிலியங் குக்கி லொன்று
நாற்கழஞ்சா மெட்டிவிதை நாற்பதாமே 79

ஆமின்னு கேர்வாளங் கொட்டை நாறு
மவித்தெடுத்த கழற்சியினீ ரதனு லாட்டித்
தாமின்னு மெட்டுநா ளடுப்பில் வெந்து
தருமெழுகு பதம்வடித்துச் சாரு மெண்ணெய்
நாமின்ன முறைத்திடக்கேள் சிரத்தில் வைத்து
நவில்கடுகு புகையூட்டி வெந்நீர் மூழ்கப்
போமின்னும் பூதவே தாள வாயு
பெருந்துடல வாயுமுதல் முயல கண்டன் 80

ஆதியாம் பன்னிரண்டு வலிக டாமு
மகலாத வலியதேத வதைக ளோடே
ஓதுமா வஞ்சனைகு னியங்கள் பெல்லி
யொழியாத பசாசுமுதற் பறந்து போகும்

வாதமாம் வெடிகரப்ப னொடிக்க ரப்பன்
வலிபெரு வாதமுதல் வாத சன்னி
சேதமாங் குடல்வத மண்ட வாயு
திருமென வேமுனிவர் செப்பி னாரே 81

சகலவாய்விற்கும்

திருக்கொன்றை யெண்ணெய்

திருக்கொன்றை யெண்ணெய்தனைச் செப்பக் கேண்மின்
சிறந்தகொன்றைச் சாறுதயிர் வேளைச் சாறு
உருக்கொண்ட பிரமியிலைச் சாறு வேலி
யோராளவு பெருங்காய மிக்துப் போடு
வெருக்கொண்ட வெள்ளுள்ளி யொக்கச் சேர்த்து
விளங்குமா மணக்கினெண்ணெய் விட்டுக் காய்ச்சி
மருக்கொண்ட பதத்தில்வடித் தருந்தக் குன்மம்
வலியகுடல் வாதமுதல் வாயுப் போமே 82

வாயு மாவிலங்கமெண்ணெய்

மாவிலங்கை முருங்கைநொச்சி யுவாபெ ருக்கு
வளர்கான்றை காற்றோட்டி கால டக்கி
தேவிலங்கு பெருமருந்து சித்ர மூலஞ்
சிவதையுடன் திருகுகள்ளி சதுரக் கள்ளி
காவிலங்கு புங்குதில்லை யசுவ கந்தி
கன்முரிசு களப்பன்னை செங்கத் தாரி
பூவிலங்கு தூதுசா ரணையிர் முட்டி
புகலுத்த மாகாணி குருந்து தோடை 83

தோடையுட னெலுமிச்சை யாடா தோடை
துடரியா முறிசங்கு கண்டங் காலி
நாடுகாக் கணங்கோவை குத்துக் காலி
னவில்சமட்டி யிராசமா மூருக்கு மிச்சுத்
தேடுமிரு வேலிவேர் பலமொவ் வொன்று
சிவியிடித் துத்தூணி நீர்பு கட்டிச்
சேடமுற நாலுபடி யாய்ப்பி ழிந்து
சேருமதி லெந்தெண்ணெய் படிபோவ் வொன்றே 84

ஒன்றுபடச் சாறுவகை யுரைப்பன் கான்றை
யுறுநொச்சி மாவிலங்கை யுத்த மாணி
நன்றுபடுங் காலடக்கி காக்க ணத்தி
ணவில்கோவை தோடையெலு மிச்சி தெல்லாம்
வென்றிபடு மிலைச்சாறு முருங்கை யர்க்கு
விளம்புமிவை வேர்ச்சாறு சதுரக் கள்ளி
துன்றுமதை யனல்வாட்டிப் பிழிந்த சாறு
சொற்றவெலா மொவ்வொர்படி கூட்டிப் பின்னை 85

கூட்டியே யடுப்பேற்றிக் காய்ச்சிக் கற்கஞ்
சொல்லிருசீ ரகமேலமிலவங் கத்தோல்
நாட்டுமதன் பத்திரிமுக் கடுக மூல
நவில்காயம் வெளுத்துள்ளி வசம்பு மஞ்சள்
கூட்டுமிரண் டரத்தைசிறு தேக்குச் சன்னி
கூறுவிதை யகில்தேவ தாரு மல்லி
கோட்டமுடன் கடுகுசத குப்பை வாசி
குலக்காய்கற் காராம்புமா மஞ்சள் மோடி 86

மோடியுடன் பூதவிர்க்க மரத்த சந்த
முதியவிழால் வெட்பாலை கடுகு ரோணி
நாடுசிறு நாகமலர் கணித பேதி
நவிலுமரி தாரமா மலகக் கெந்தி
பீடுதரு மனோசிலைகச் சோல மாஞ்சில்
பேசியகஸ் தூரிமஞ்சள் சாளி யாவும்
தேடுமிவை யொருகழஞ்சு வீதம் வாங்கிச்
சேர்த்திடித்துக் கலந்துடன்பன் னிருநாட் காய்ச்சே

காய்ச்சியபின் மெழுகுபதம் வடித்த ருந்திக்
கடுகவே மேற்பூசித் தலைக்கும் வைத்துத்
தேய்ச்சுமுழு கிடவாதம் வாய்வெட் டெட்டுந்
தீராத வலிகளவை யாறி மண்டும்

பேச்சலுறுஞ் சன்னிவகை யேழவா றுந்தான்
பெருகுநதி சூழ்கதிரை நகரின் மேவிக்
கூச்சமற வழிபடுமெய் யன்பர் தங்கள்
கொடும்பாவந் தீர்வதுபோற் குலைந்து போமே 88

உறட்டி

திரண்டுவரும் வாய்வுக்கு மருந்து கேளாய்
செப்புமுவாய் கொடுவேலி புங்கம் வேரும்
வரண்டவரை பொடிகாந்தம் வெள்ளைக் காரம்
வாரணத்தின் முட்டையில்வெண் கருவா லாட்டி
உருண்டிடுமே ரண்டவெண்ணெய் சற்றே குத்தி
யுவந்துறட்டி சுட்டருந்த வுதிர மாய்ப்போய்
அரண்டெழுந்த வாயுவது கலைந்து பின்ன
ரகன்றுவிடு நல்லெண்ணெய் மாற்ற தாமே 89

பெருங்காயச் சூரணம்

பெருங்காயந் திரிகடுகு கடுக்காய் நற்சீர்
பெரிதான தான்றிக்காய் கரிய சீரம்
விரும்புமச மோதகம்வெள் ளுள்ளி யிந்து
வீறுடைய வசம்புசம னாகக் கொண்டே
வருஞ்சரக்குப் பொன்னிறமாய் வறுத்தி டித்து
வகுத்துவெரு கடிகொள்ள வாயு வெல்லாம்
பொருந்தாம லகலுமென முனிவ ரானோர்
புகன்றனர்மா னிடர்தமக்குப் பொருந்து மாறே 90

நொச்சிச்சருகுச் சூரணம்

தேடுநொச்சி கொடிக்கழற்சி சருகி னோடு
திருந்தியவெள் ளறுகுடன்பச் சரிசி தானும்
ஈடுபட வொவ்வொர்பிடி யாயி டித்தே
யிந்துப்புக் கழஞ்சுபொடித் திதனிற் கூட்டிக்

கூடவே யரைத்தருந்தி வெந்நீர் கொண்டு
குளிர்ந்திடுநீ ரிற்குளித்துப் பத்தி யங்கார்
ஆடுமயில் வாகனன்றன் கருணை யாலே
யறைகின்ற வாயுவெலா மகன்று போமே 91

சிவதைவேர்ச் சூரணம்

காயமொன்று வசம்பி ரண்டு சித்ர மூலங்
சருதிய வேர்ப் பட்டையது மூன்று சுக்கு
நேயமுட ஞேலாம மைந்து பின்னு
நிகழ்கடுக்கா யாறுதிப் பிலியு மேழு
தூயவெள்ளைக் கோட்டமெட்டு மரிச மொன்பான்
றெழில்சிவதை வேர்பத்து வீதங் கொண்டே
ஆவின்பா லதில்வேடு கட்டி மேல்வைத்
தவித்துநிழ லுலர்த்திடித் தருந்த நன்றே 92

பிரண்டைச் சூரணம்

செப்பிடும் பிரண்டைத் தண்டினைத் தூளாய்த்
திருவுற வரிந்தத னோடே
உப்பினைக் கூட விட்டுடன் வறுத்தே
யுறுசிவப் புற்றிடு மாகில்
வைப்புறு முப்பைக் கழித்ததைத் தூள்செய்
மருந்துதிப் பிலியிந்து சுக்கும்
ஒப்பிடு மிங்கு மோமந்தூ ளருந்தி
லுதரத்திற் பொருமலு மாறும் 93

சூலைவாயுச் சூரணம்

பாதரசஞ் சாரணைவேர் கடுகு ரோணி
பகர்ந்தவிலை கழஞ்சொன்று சுக்கு நற்சீர்
தீதகலு மரிதாரம் விழால்வெட் பாலை
திப்பிலிநற் சதகுப்பை கார்கோ லோடு
சேதமறும் வெண்காரம் வகைக்கி ரண்டு
செப்புகொடிக் கழற்சிதனிற் பருப்பு மூன்று
கோதகலு நேர்வாளம் பதினைந் தாகக்
கொண்டுநொச்சி யிலைச்சாற்றி லரைத்தி டாயே 94

அரைத்தபின்னர் சில்லுப்போற் றப்பி யோட்டி
லமையவறுத் ததுசிவந்த பின்னெ டுத்தே
அரைத்ததனைத் தூளாக்கி நெய்யிற் கொண்டா
லகன்றுவிடுஞ் சூலை முதல் வாய்வ னைத்தும்
உரைத்தபஞ்ச தீபாக்னி யட்ட சூர்ண
முள்ளியினிற் குளிகைசூ ரணமே லேகியம்
விரைத்தகுழன் மடமானே யிவற்றால் வாயு
விட்டகலு மெனவேதம் விளம்பு மாறே 95

பிரண்டைக் குழம்பு

சாற்றிடும் பிரண்டைச் சாறு தான்படி நால தாகும்
ஊற்றிடு மியங்கு நொச்சி யுவாயிவை யிலையொவ் வொன்றும்
தோற்றிடும் வில்வம் வேநுஞ் சொற்றிடு தோடங் காய்போல்
ஏற்றிட வரைத்துக் கூட்டி யிருநழுஞ் சிந்து சீரம் 96

சீர்பெறு காய மூன்று திரிகடு குள்ளி யோமம்
கூர்பெறு கடுகு நாலு கழஞ்சுறக் கூட்டித் தூவி
ஏர்பெறு பனையின் வெல்ல மிட்டதி லெள்ளி லெண்ணெய்
வார்மெழு காம்ப தத்தில் வருபசு மோர்சேர்த் தூண்ணே 97

உள்ளிப்பால்

வெள்ளை யுள்ளி தோல்பேக்கி நாழி யொன்று மிகவரைத்துத்
துள்ளக் காய்ந்த சட்டியினி லிட்டு மசித்துப் பசுவின்பால்
கள்ள மறவே படியொன்று விட்டு மிளகோ ராழாக்கும்
அள்ளு முலுவாப் பொடிதூவிக் காய்ச்சி யருந்த வாயுவறும்

சூலைரோகம்.

ஆதிதன் னருளான் முன்னோ ரருளிய வாயுள் வேதத்
தோதிய சூலை யீரொன் பானுறு பெயர்கு ணங்கள்
தீதறு சாத்தி யங்க ளசாத்தியஞ் செய்ம ருந்து
கோதையே யிவைக ளெல்லாங் குறித்துநீ யாய்ந்து கொள்ளே

சூலைரோகத் தொகுப்பு

சுரமொன்று வாத பித்தஞ் சொல்லுசேற் பனங்கண் மூன்று
உரமுறு சன்னி பாதந் தொன்றுபாண் டுரோகத் தொன்று
திரமுறு பீந சத்திற் சேர்ந்திடு சூலை மூன்று
வருபிர மியத்தி லொன்று மாற்றருங் கிரந்தி யொன்றே 2

வாயுநீர் தசைசி ரத்தும் வருத்துந்தோல் நரம்பொ டாறும்
ஆயதோர் நிதம்ப சூலை யாகவே யீரொன் பானும்
மாயமா றுரோக மொன்றின் மருவிடுந் தொந்தம் வெவ்வே
றுயதோர் சாத்தி யங்க ளசாத்திய மறிந்து கொள்ளே 3

சூலை-18ல்-அசாத்தியம்-9
சாத்தியம்-9

சயசூலை சன்னி சூலை தசைச்சூலை நீரின் சூலை
சுயமுறு மத்தி சூலை கருதிய நரம்புச் சூலை
துயருறு பீந சத்திற் சுரோணித சூலை பின்னோர்
நயமறு நிதம்ப சூலை நாசமா மண்ட சூலை 4

சொல்லிய சூலை யொன்ப தசாத்தியந் தோகை யேகேள்
புல்லிய வாத சூலை பொருந்திய பாண்டு சூலை
அல்லல்செய் பித்த சூலை யறவுலர் சுரத்தின் சூலை
வல்லியே கிரந்திச் சூலை வாயுவின் சூலை யாமே 5

இவை ரோகங்களை, [illegible] விசேடம் [illegible]
ரோகங்களின் [illegible] பார்க்க
வேண்டும் - [illegible]

ஆகிய சிரத்திற் றுனை யருஞ்சல நீரின் சூலை
ஏகிய கிரந்திச் சூலை யிவையொன்பான் சாத்தி யங்கள்
ஆகிய குணங்க ளெல்லா மறிந்துநீ தெளிந்து கொண்டு
பாகமாய் மருந்து செய்யிற் பலன்றரு மறிந்து கொள்ளே 6

1-சுரசூலையின் குணம்

மண்டியே காயக் தன்னில் வருத்திடுஞ் சுரமென் மேலும்
கொண்டிடக் கால்க ளோய்ந்து குறுக்கினிற் பொருத்திற்குத்தும்
விண்டிட விரல்க ளெல்லாம் விருவிருத் துடம்பி னோவாம்
கண்டிடுஞ் சுரத்தின் சூலை யாமெனக் கழறி னாரே 7

கரமொடு கால்க ளோயுங் ¶கழுத்தடி நொந்து காட்டும்
உரமுறு பெலமுங் குன்று மூளையு மெரிந்து விம்மும்
சிரமுழு திடிக்குந் தண்டஞ் செம்பிடுஞ் செவியி ரண்டும்
சுரமுறு சூலை யென்று சொல்லுவர் முன்னோர் தாமே 8

அத்திசுரசூலை

அக்கினி மந்த மாகி யறவுலர்ந் தென்புக் காய்ச்சல்
மிக்ககா திரைச்சல் மந்த மிருந்திடு மூக்கி னீர்கள்
தக்கதோர் பித்தஞ் சோகை பாண்டுருக் கபால குன்மம்
கைக்குமாம் வாத பித்தங் கருத்தினிற் கண்டு கொள்ளே 9

குத்திடு நகக்கண் டோறுங் கொதித்திடு முடலெண் சாணும்
வற்றிடும் பாவை போல்நா வரண்டிடும் பல்லு நோகும்
புத்திமா றுட்டம் பண்ணும் பொருத்திடங் கனத்துக் கட்டும்
அத்திதன் சுரத்திற் சூலை யாமென வருளிச் செய்தார் 10

¶—கண்குழி என்றும்.

சிகிச்சை

உவாயிலைக்கிருதம்

பொருந்திடு மூவாயின் சாறு பொடுதலைச் சாறு கையான்
† திருந்துமூ விலையின் சாறு சேர்வகைக் குரிய தாக
அருந்திடு நறுநெய் நாழி யரியவெள் ளாட்டின் பாலும்
ஒருங்குற விட்டுக்கற்க முறைத்திடக் கேட்டி டாயே 11

ஆரதி மதுர மோம மரியநல் விளங்கங் கோட்டம்
சீரக மிரண்டு தேற்று திரிகடு கடுகோ டுள்ளி
பாரில வங்கஞ் சாதி பத்திரி கைப்புப் பச்சை
காரகி லெட்டி வித்துக் கருமிதான் றுகழுஞ்சி ரண்டே 12

ஏலவே யிடிபொ டித்த விதைநறு நெய்யிற் றூவிச்
சாலவே திரண்டு வெந்து தகும்பதத் திறக்கிக் கொண்டு
காலமே கரண்டி கொள்ளக் கடுஞ்சுர சூலை யெல்லாம்
ஞாலமே யறியத் தீரு மெனமுனி நவின்றிட் டானே 13

செங்கத்தாரியெண்ணெய்

செங்கத் தாரி வேர்ப்பட்டை சிறக்க விடித்துப் பலமொன்று
தங்குந் திரிகடு கிந்துப்புச் சார்வெள் ளுள்ளி யிருசீரம்
பொங்குஞ் சோமன் பொரிகாரம் பூத விருக்க மிவைகழஞ்சு
மங்கா தெண்ணெய்நாழியினில்வடிவாயரைத்துவெந்துகொள்ளே

கொள்ளா யெண்ணெய்நாற்பதுநாட்குறித்தேயினிப்புப்புளிதவிர
நள்ளார் சுரத்தின் சூலையெலா நாச மாகு மென முன்னோர்
தள்ளா துரைத்தா ரிதுசெய்யத் தரணி யோர்க ளறிந்திடுமின்
கள்ளார் குழலாய் கைகண்ட மருந்தென் றுரைத்தார் கற்றோரே

---

† திருந்திய குப்பைமேனி—என்றும்.

மேற்பூச எண்ணெய்

இருது கள்ளி வேர்ப்பட்டை சிறக்கத் தட்டிப் பிடியொன்றை
உரிய வெண்ணெய் தனிலிட்டே யூறிக் காய்ந்தால் வடிகொண்டு
இருகால் கரங்கள் பொருத்துகளி லிசையத் தடவி வெந்நீரில்
மருவும் புளியி னிலைகூட்டி மாதே வார்க்கில் வலிவிடுமே 16

தழுதாழையெண்ணெய்-முழுக.

வாத மடக்கி நீர்தூறணி வருமெள் ளெண்ணெ யிருநாழி
சீத மடக்குஞ் சிற்றமட்டி சிறந்த வேரும் பதின்பலமாப்
போத நறுக்கி நீர்பதக்கிற் புகட்டிக் காய்ச்சி நாலொன்றாய்க்
கோதை மடக்கிப் பிழிந்துவிட்டுக் கூட்டுங் கற்கங் கூறுவன்கேள்

கேளாய் கராம்பு சாதிக்காய் கிளரு மேல மிலவங்கம்
தாளா மதுரஞ் சரளமுடன் றகரங் கோட்டஞ் செண்பகப்பூத்
தூளா மரிச மதிவிடயந் துலங்க வொன்று காற்பலங்கொள்
வாளார் விழியாய் பொடிதூவி வருவெள் ளாட்டின் பால்விட்டே

விட்டே காய்ச்சிப் பதத்தில்வடி வெந்நீர் தன்னின் முழுகிவரக்
கட்டார் சூலைக் கடுப்பினொடு காந்து மந்தி சுரம்போகும்
தட்டா திதனைச் செய்யுமெனச் சாகா முனிவ னுரைத்தபடி
மட்டாய்ச் செய்ய வல்லீரேல் வருந்தும் வியாதி மாறிடுமே 19

எட்டிநெய்-உள்ளேகொள்ள

எட்டிக் கொட்டை யொருபிடிகொள்ளிடித்துத்தூள்நெய்யிருநாழி
விட்டுக் காந்தம் வெண்காரம் வெள்ளை யுள்ளி பலமொன்று
தட்டி யரைத்துக்கரைத்துவெந்து தானேய்பதத்தில்வடிகொண்டு
சிட்டி யளவு மண்டலங்கொள் தீராச் சூலை சுரம்போமே 20

எட்டிக்கொட்டையைப்பிளந்து உள்ளிருக்கும் மூளையை நீக்கிவிட்டு தேற்றாவேர்ச்சாற்றில் இருநாழிகை நேரம் அவித்துக்கழுவி உலர்த்திக் கூட்டவும்.

காந்தசூரணம்

காந்தங் கெந்தி பறங்கிவேர் கருதுங் குக்கில் சாதிபைந்து
போந்த சித்ர மூலிவேர் பொரியுங் காரங் குறுசாணி
சாந்த மான திரிகடுகு தகவே யொவ்வொன் றுருபலங்கொள்
ஆய்ந்தே யிடித்து வெருகடிதே னருந்தச் சூலை சுரம்போமே 21

—→※←—

வாதசூலை

தேக முழுதுங் கனப்புண்டாய்த் திமிர்த்து மெத்தவிருவிருக்கும்
பாகம் பற்றி விறைத்திருக்கும் பாதம்விர லுங்கெண்டையுநோம்
மோக மசைவை தனிற்றிரளு முடக்கு மூரி விக்கலுமாம்
தாக மன்றி மலஞ்சிக்குந் தானே வாத சூலையிதே 23

வாதசுரோணித. சூலை

§சிரமுறு நாடி யூடே சேருநீ ருடலிற் பாய்ந்தே
உரமுறு மசைவைப் பற்றி யூன்றியே கனத்து விம்மித்
திரமுறு வாயு மென்மேற் செறிந்துளே குத்தி நோவாம்
உரமுறு வாத ரத்த சூலையென் றோதி னாரே 23

வாதவாயுச்சூலை

பிடர்முள்ளந் தண்டு பிட்டி பெருந்துடை மன்னை முட்டி
உடல்விலா நெஞ்சு கைக ளுளைந்தவை குத்தி நோவாம்
கடலுறு திரையே போலக் கதறியே வயிறி ரைக்கும்
அடர்வினை வாத வாயுச் சூலையென் றருளி னாரே 24

---

§இச்செய்யுள் சிலபிரதிகளில் 'வாதசூலை' என்றதலைப்பில் இரண்டாஞ்செய்யுளாகவும், மற்றுஞ்சில பிரதிகளில் 'வாதவாயுச்சூலை' என்றதலைப்பில் முதற்செய்யுளாகவும், காணப்படுகின்றது. இதன் நாலாமடியும் அவ்வேறுபாட்டிற்கேற்ப முறையே 'வாதசூலையென்றுதானோதினாரே' என்றும் 'வாதவாயுச்சூலையென்றோதினாரே' என்றும் வேறுபடுகின்றது.

வாதநீர்ச்சூலை

கைகால் விரல்கள் வீக்கமுடன் கனத்துத்திமிர்த்துவிருவிருக்கும்
மெய்யேகுளிரும்வேர்வையுண்டாம்வெதும்புங்கண்ணுமுகத்தலையும்
ஐயும் பித்து மேற்கொள்ளுமாகம் புண்போல் நோவாகும்
உய்யும் வாத நீர்ச்சூலை யென்றே முனிவ ரோதினரே 25

சிகிச்சை

குடிமருந்து

ஆண்டுநூறளவு சென்ற கிம்பத்தோ லதனைவெட்டி
நீண்டதோர் பலமு நூறு நேர்ந்தெடு கடுக்காய் நூறு
ஈண்டுகோ சலமுந் தூணி யிவையொரு சாடி யிட்டு
வேண்டுமோர் சட்டி கொண்டு மேன்மூடி மண்ணைப் பூசே 26

பூசியே மேதி நிற்குந் தொழுவினிற் புதைத்துப் போட்டு
வாசமண் டலமுஞ் சென்றால் வடித்தெடு தினமு மூக்கு
நேசமாய்க் காலமே கொள் நீக்கிடு புளிபு முப்பும்
நாசமாம் வாத சூலை நாடிமண் டலங்கொள் வாயே 27

குடிமருந்து-2

வேசரி லத்தி யக்நீர் விரவியே துவைத்து மண்ணில்
வாசமாம் பாண்டத் திட்டு ‡வகுத்தநீர் நாழி விட்டு
வீசிய விரவு சென்று விடிந்தபின் தெளித்துட் கொள்ள
நாசமாம் வாதசூலை நவின்றனர் முனிவர் தாமே 28

இரசசூரணம்

செருப்படி கழற்சி மேனி சிவன்வேம்பு முருங்கை தும்பை
கருக்குவாய் நொச்சி யெட்டு மருந்துளிர் பிடியாய்க் கொண்டு
விரிச்சநெல் லரிசி மாவு மேவிய சிறங்கை கூட்டித்
தரித்திடா விரச மூன்று காசிடை தானுங் கூட்டே 29

---

‡வகுத்தநீர்—மேற்கூறிய வேசரிநீர். வேசரி-கழுதை-சுத்தசலம் என்பர் சிலர்.

கூட்டியே யிடித்த தூளைக் கொடுவெந்நீ ரைந்து நாளும்
மீட்டுமே லேது பத்து நாள்விட வினைவு குத்துச்
சேட்டமே செய்யும் வீக்கஞ் சுரோணிதஞ் சதைக ளைந்து
காட்டிலே யோடும் வாத சூலையா மென்று காணே 30

வங்கப்புகை

வங்க முருகு முகந்தன்னில் வாரா யிரண்டு கழஞ்சிரசம்
பொங்குந் துரிசு மெலிமருந்தும்பொருந்துங்கார்கோல்கருஞ்சீரம்
அங்குஞ் சொன்னே மரிதார மரிய மஞ்ச ளரிதகியும்
குங்கு லியமு மிவையொன்று கூட்டுஞ் சமனுய்க்குறிக்கொள்ளே

கொள்ளு மிரச வங்கவெட்டை குறையா தேழு பங்கிட்டுக்
கொள்ளும் பொடியு மெழுபங்காய் கூறுந் துணியி லுறமுடிந்து
கொள்ளும் புளியம் பொருக்கதனைக் கொளுத்தித்தழலாயானபின்பு
கொள்ளுங் †கிழியை யதிலிட்டுப் புகையை யூட்ட வல்லீரே 32

வல்ல புகைகள் தானேழும் புகைக்க வயிற்றில் மலத்தோடே
புல்லுங் குருதி கழிவதெனிற்பொருந்தாவெண்ணெய் கஞ்சியினில்
மெல்ல நுகர்ந்து வெந்நீரும் விட்டே யெண்ணெய் முழுகிவரச்
சொல்லும் வாத சுரோணிதமுஞ் சூலை தானும் விரைந்தோடும்

பாஷாணப்புகை

கௌரி வெள்ளை சாதிலிங்கங் கேளீ ரிரசந் துரிசுதுத்தம்
கதியா தோரோன் றரைக்கழஞ்சு கள்ளிப் பாலா லரைத்துப்பின்
இவைதான் சீலை தனி லூட்டி யிசைபாக் களவா யுண்டைசெய்து
தவிரா தொருநா ளொன்றாகத் தானே யேழு புகைகட்டே 34

கட்டாய் நீரி லுட்கிடத்திக் கருது மெண்ணெய் முழுகிவர
விட்டே யோடும் வாதங்கள் மேவுஞ் சுரோணி நீர்வாயு
கட்டுச் சூலை முடக்கும்போங் கைகா லுளைத விவையகலும்
மட்டா யிதனைச் செய்துவரின் மாறாச் சூலை மாறிடுமே 35

---

†கிழி—மேற்கூறிய இருவகைமருந்துமிட்ட முடிச்சு.

பறங்கிப்பட்டைப்பதங்கம்

சங்கங் குப்பிச் சாறதனிற் சாற்றும் பறங்கி வேர்சீவி
அங்கு நாலு பலமிட்டே யந்நீர் சுவறி வற்றியபின்
துங்க மான நவபாஷாணத் துள்ளே சூத மிருகழஞ்சு
பொங்குங் கெந்த ராசியுடன் பொருந்துஞ் சாதி லிங்கமுமே 35

மேவுங் குக்கில் கர்ப்பூர மிவையோ ரொன்று கழஞ்சுகொண்டு
தாவு மதன்மேல் வேடுகட்டித் தக்க பட்டை யதிற்பரப்பிப்
பாவுஞ் சட்டி கொடுமூடிப் பரிவாய்ச் சீலை மண்செய்து
தூவுங் கனலை யரைச்சாமந் துளங்கா தெரித்தங் காறவையே

வையாய்ச் சீலை மண்ணீக்கி வண்டிற் பட்டை தனையெடுத்துத்
துய்தா யிடித்துப் பொடியாக்கித் துலங்குந்தேனில்வெருகடிகொள்
எய்து மிச்சா பத்தியமா யிசையப் பத்து நாளுண்டு
வெய்ய வெந்நீ ராமணக்கி னெண்ணெய் தேய்த்து முழுகிடுமே

மேவுஞ் சூலை கிரந்தி தட்டம் வெய்ய சுரோணி வெடிசூலை
தாவுங் கடுப்பு வலிப்புளைவு சலதோஷங்கள் பீநசம்போம்
கூவு முடக்கு நாம்பிசிவு குராவி னரிப்பு மிவைதீரும்
பாவித் திதனைச் செய்துவரிற் பறங்கி ரோகம் பாறிடுமே 39

குடோரி

முழங்கால் மூட்டில் நீரரத்த மோதிக் கனத்து விம்மிநிற்கில்
விளைந்த குடோரிக் கொம்பாலே வாங்கி யிரத்தந்தனையெடுத்துக்
களைந்தே நீக்கி விட்டதற்பின் கடுகோ டுள்ளி மிளகுசுக்குப்
பழஞ்சேர் கடுக்கா யிவையரைத்துப் பூசச் சூலை பாறிடுமே 40

ஆயிலெண்ணெய்

மேவிநீர் கரிய ரத்தம் விலகிடா தடர்த்து விம்மிற்
காவியங் கண்ணி னுளே கருதியே முழுக வெண்ணெய்
தாவுமா யிற்றேரல் வில்வஞ் சாற்றிடு மிளகு தான்றி
காவினன் னாரி முத்தங் கதித்திடு சிற்ற மட்டி 41

முன்னைவேர் நொச்சி வாத மடக்கிவேர் முசிய வேம்பு
சொன்னகா ரகிலும் வெங்கை துலங்கமுக் கிராவேர் சீந்தில்
சின்னிவே ரோடு கையான் றிரிபலை முசிறை மாடம்
மின்னனுய் மிளகு சந்தம் வெட்டிவேர் லாமிச் சாமே 42

ஆனவெள் ளாட்டு மாம்ச மவையபி கஷாய மாக
¶ ஆனவேப் பெண்ணெய்தேங்காயெண்ணெயாமணக்கெண்ணெய்
ஆனவெள் ளாட்டின் பாலு மாவின்பா லிளநீர் தானும்
ஆனமுற் கஷாய மெண்ணெ யவையெலாங் கலந்து காய்ச்சே

காய்ச்சிடு கற்கங் கோட்டஞ் சந்தனங் கராம்பு பத்ரி
கூச்சகில் தேவ தாரங் கூறு முக் கடுகு மஞ்சள்
பாச்சிடு மரிசி யாறு பகர்ந்திடு குக்கில் பட்டை
வாய்ச்சதி மதுர மாஞ்சில் மஞ்சிட்டி புழுகு சட்டம் 44

தக்கோலம் வாச மைந்து சாத்திர பேதி கல்நார்
கற்பாசி செண்ப கப்பூக் காணெரி யரிசி யின்பால்
கர்ப்பூரஞ் சிவந்த சந்தங் கழஞ்சு மூன் றனைவே யாகக்
கற்கமே யரைக ரைத்துக் காய்ச்சியே பதத்தில் வையே 45

வையே தயிலம் வகைப்படியே வடித்து வெந்நீர் முழுகிவாக்
கைகால் சுரந்த வீக்கமும் போங் கனத்த வாத சுரோணிதநீர்
நையும் வாயு வுடற்கடுப்பு நடுக்கந் திமிர்ப்பு விருவிருப்பு
உய்யும் படியே திருமென வுரைத்தார் முனிவ ருலகோர்க்கே

பித்தசூலை

கைகா லுளைந்து வாய்கசந்து கண்ணு முகமு மஞ்சணித்து
மெய்யே நடுக்கித் தலைவலித்து மேனி வரண்டு வெளுப்பாகித்
துய்ய நீர்மஞ்சணித் தெரித்துத் துலங்கப்பொருத் தெல்லாமுளைந்து
வெய்நாய்த் திரண்டு விருவிருக்கும் பித்த சூலை யெனவிளம்பே

¶ மானமா மெண்ணெய் மூன்று மருவுவேப் பெண்ணெ யொன்று—என்றும் பாடம். எண்ணெயென்பது எள்ளெண்ணெய்.

நெஞ்சொடு விலாவும் வற்றி நீர்மல முகஞ்சி வந்து
பஞ்சுபோல் நாவுங் கண்ணும் பாண்டமும் வெளுப்ப தாகி
மிஞ்சவே யூதை யுண்டாய் வெடித்திடுந் தேக மெல்லாம்
வஞ்சமாம் பித்த சூலை யென்றுதான் வழுத்த லாமே 48

பித்த விஷநீர்ச்சூலை

இருவிழி யிதழ்பல் நாவு மிருதந்தங் கறுத்துக் காயம்
பொருமியே யூதை விம்மிப் பொருத்துறு மிடங்க ணோவாம்
திருகியே வலிக்கு மூர்ச்சை சேர்ந்திடுங் கைகால் கட்டும்
பெருகிடும் விடநீர் பித்த சூலையா மென்று பேசே 49

சிகிச்சை

பறங்கிப்பட்டை நெய்

சூலவும் பறங்கிப் பட்டையது குறுகச் சீவி நாலுபலம்
நலமாய்த் தண்ணீர் பதக்குவிட்டு நவிலு மிரண்டு படியாக்கிச்
சொலவே வடித்து நெய்நாழி தோன்ற விட்டு மென்மருந்து
பெலமாங் குக்கில்சுத்திபண்ணிப் பேணிப்பலமொன் றதிற்கரையே

கருது மரிசி வகையாறு கடுகு ரோணி வெண்கோட்டம்
அரிய மதுரம் வாய்விளங்க மரத்தைதிப்பிலி மூலநார்
துரிசு துத்த மதிவிடயஞ் சுத்திக் கெந்தி சாதியைந்து
மருவு திரிபலை திரிகடுகு சிவதை வகைக்குப் பலங்காலே 51

காலத் துடனே யரைத்து வெந்து கரண்டி யளைமண்டலமருந்திச்
சீலத் துடனே புளிபுப்பு நீக்கித் திடமு யிருப்பீரேல்
மேலைக் குத்தி விறைத்தவலி வெடித்த விடநீர் சுரோணிதமும்
ஞாலத் துள்ளோர்க் குழும்பித்த சூலை நாச மெனவறியே 52

வெண்ணெய்க்கடுகு
விஷபித்தசூலைக்கு

ஆவின் வெண்ணெய் நாழிதனி லரிய லிங்க மொருகழஞ்சு
பாவுங் கெந்தி திரிகடுகம் பறங்கிக் கிழங்கு திரிபலையும்
மேவு மரிசி வகையாறு விளங்கம் விடயம் வெள்ளுள்ளி
கூவுங் காசுக் கட்டியிவை கூட்டிக் கடுகாய் வெந்துகொள்ளே

மிரியாதி கிருதம்-முழுக

மிளகு வறுத்துப் பொடியுழக்கு மேவு நறுநெய் படியொன்றில்
¶அளவாய் விரவிச் சாதியைந்து மவினும் பணத்தி னிடைகூட்டி
வளமாய் வெந்து வடிபதத்தில் மதித்து வெந்நீர் முழுகிவர
உளதாம் பித்த விடசூலை யெல்லா மோடி யொளித்திடுமே 54

வாதபாண்டுச்சூலை

அரையுந்துடையுங்கனத்திருக்குமசந்தேதிமிர்த்துவிறைத்திருக்கும்
உரையும் பொருத்து மிகக்கூடி யூதிக் கனக்கும் வயிறுமுகம்
புரையாய் வீங்கும் புறங்காலும் பொருமு மூதை திரைபோல
உரையா விந்தக் குணம்வாத பாண்டுச் சூலை யெனவோரே 55

பித்தபாண்டுச்சூலை

கண்ணு முகமு நீர்மலமுங் கருதும் பல்லு மஞ்சணிக்கும்
நண்ணும் வயிறுந் துடைகனக்கு நையக்குத்தும்பொருத்துகளும்
விண்ணிற் சுழலு முகமதைக்கும் வெதுப்பு மேலு மிகக்கனக்கும்
மண்ணிற் பிறந்தோர் பித்தமுறும் பாண்டுச் சூலை வகையாமே

சேற்பனபாண்டுச்சூலை

உரமும் வற்றி நரம்பெழுந்தே யூதை மிகுந்து நெஞ்சிடிக்கும்
சுரமு மென்மேன் மாறுது தோன்று மெலும்பு தொறுங்கட்டும்

¶அளவாய் விரவிஎன்பது சாதியைந்து என்பதனோடு சென்றியையும்.

காமுங் காலுந் தளர்ந்துவருங் கண்ட நொந்தே யிருமலுமாம்
திரஞ்சேர் சேற்ப பாண்டுவினாற் சேருஞ் சூலை யிதுவாமே 57

சன்னிபாத பாண்டுச்சூலை

மெய்யெலாந் தழன்று விம்மி வேர்த்துநாக் குழறிப் பேசும்
கைகள்கால் சந்து கட்டுங் கடுத்திடும் பொருத்துந் தோறும்
துய்யதோர் செவியு மந்தந் துடித்திடு முடலெண் சாணும்
தையலே சன்னி பாதபாண்டுவின் சூலை சாற்றே 58

விஷபாண்டுச்சூலை

உடம்பினி லோர்பால் வீங்கு முளைந்திடு மென்பிற் கட்டும்
தடங்கண்ணு முகம்வெ ளுக்குந் தாகமுந் தவன முண்டாம்
அடர்ந்திடு மூச்சுத் தொய்வு மாகமுங் கனத்து விம்மும்
இடம்படு விடத்தின் பாண்டுச் சூலையீ தென்று செப்பே 59

மூலபாண்டுச்சூலை

தேகம்வரண்டுருகம்வெளுத்துத் திமிர்த்துக்கைகாலுளைவுண்டாய்
பாக மொக்க வீங்கிவற்றும் பாதா இத்துக் கண்டுங்கும்
சோக மிகுந்து மலஞ்சிக்குந் தோன்றும்பொருத்திற்கட்டுண்டாம்
ஆகந் தானு மிகக்கனக்கு மூல பாண்டு வதின்சூலை 60

பாண்டுச்சூலை ஆறில்

அசாத்தியம்-3

சாத்தியம்-3

சாற்றிடுஞ் சூலை யாறிற் றருங்கரும் பாண்டுச் சூலை
தோற்றிடுஞ் சன்னி பாத பாண்டுவின் சூலை யோடு
ஆற்றரும் விடத்தின் பாண்டுச் சூலையா மிவைகண் மூன்றும்
மாற்றரு மசாத்திய மாகு மருமூன்றுஞ் சாத்தி யம்மே 61

சிகிச்சை

மூலபாண்டுச்சூலைக்கு காந்தபற்பம்

சுத்திசெய் காந்தங் கெந்தந் தாயமை பொடியிம் மூன்றும்
ஒத்திடு மரைப்ப லங்கொண் டுற்றமென் மருந்து சேராய்

வைத்தமுக் கடுகி னோடு முப்பலை விளங்க மோமம்
அத்தித்திப் பிலியே செய்ய கடுகுவெள் ளுள்ளி காயம் 62

காயநற் கராம்பு பத்ரி கடுகுரோ கணிவெண் கோட்டம்
நேயமார் கிவதை யொன்று நிறையரைப் பலம்பொ டித்துத்
தூய்வெரு கடியா யுண்ணச் சொலுமூல பாண்டு சூலை
போய்விடு மென்று முன்னோர் புகன்றன ரறிந்து கொள்ளே 63

சகலசூலைக்கும் திரிலோகபற்பம்

இரும்புகா ரீயஞ் செம்பு மிவைமூன் றும் பொடிய ராவி
விரும்பியே பலமோ ரொன்று வெவ்வேறு சுத்தி பண்ணித்
திருந்தவே குமரிச் சாற்றாற் றிரண்டிட வரைத்து வட்டி
வருந்தியே புடமும் பத்து வைத்திடு சிவக்கும் வண்ணம் 64

வைத்ததை கையான் சாற்றில் மறுபடி புடமு மூன்று
முத்தின நாவற் பட்டைச் சாற்றினின் முப்பு டந்தான்
ஒத்தமுக் கழஞ்சு சூத மூரியகெந் தகமுந் தாரம்
வைத்திரு கழஞ்சு சுத்தி மகிழ்ந்ததை தேசிச் சாற்றில் 65

காவியங் கண்ணி னுளை கருதிய புடமு மூன்று
மேவிய மருந்து தன்னை மென்முருக் கிலைநீர் தன்னாற்
றாவியே யரைத்து மூன்று புடம்வைத்துத் தவறு றாமற்
பாவையே நுணுக்கிக் கொண்டு மேற்பொடி பகரக் கேளே 66

பகர்ந்திடு பறங்கிப் பட்டை பாலினிற் சுத்திக் கெந்தி
மிருந்திடா தொன்றி ரண்டு பலமது மென்ம ருந்து
உகந்திடு கடுக மூன்று பலைமூன்று துரிசு துத்தம்
சுகந்தமாஞ் சாதி யைந்து சொல்பஞ்ச வாசங் கூட்டே 67

கூட்டி யிடித்துவெருகடி தேன்குழைத் தப்பற்பம்பணவிடை தான்
ஈட்டு மரைமண் டலமேகொண் டிதமா யெண்ணெய் முழுகிவரச்
சூட்டும் வாத பண்டு முதல் வெடிக்குஞ் சூலை யோராறும்
வாட்ட மறவே தீருமென வருத்தார் முனிவர் மானிலத்தே 68

இக்திராணித்தைலம்

கடம்புமா விலங்கை புங்கு கருங்காலி வாகை வேங்கை
அடம்புநன் னரி கோடை யழுக்கிரா வேப்பு கான்றை
முடங்கல்சா ரடையிர் முட்டி முன்னைவா மிச்சு வெட்டி
தடங்கணு யொன்று பத்துப் பலமது தறித்துக் கொள்ளே 69

கொள்ளே தூணி நீர்விட்டுக் கொதிக்கக்காய்ச்சிக் குறுணிகொண்டு
கள்ளார் குழலா யாட்டின்பால் காண மவித்த நீளதிர்
தள்ளா தேநீர் வெவ்வேறு சாருங் கஷாயஞ் ச கூட்டி
எள்ளா வெண்ணெய்நாலிலொன் றினியவேம்பி னெண்ணெய் யிட்டே

விட்டே கற்க மட்ட வர்க்க பேவு மரிசி வகையாறு
கட்டாய் பஞ்ச வாசமுடன் கருதுஞ்சாதி யைந்து கச்நார்
சட்டக் தேவ தாரமதி மதுரஞ் சாந்தஞ் சடாமாஞ்சில்
மட்டா ரேல மிலவங்கம் வருமுக் கடுகு முப்பலையே 71

பலமோவ் வொன்று கால்கூட்டிப் பரிவா யிடித்த பொடிதூவிச்
சலம தறவே காய்ந்து வற்றித் தானே மெழுகு பதமானால்
நலமாய் வடித்து வெந்நீரில் நன்றாய் முழுகி வரும்போது
குலமாம் பாண்டுச் சூலையெலாங் குலைந்தே போகுங் குவலயத்தே

பித்தபாண்டுச்சூலைக்கு
திரிலோக சூரணம்

நவ்வற் பட்டைச் சாறுதனில் நவிலு மரபொடி பதின்கழஞ்சு
செவ்வே வெயிலில் வைத்தூறிச் சேர்ந்தா விருப்புக் கிட்டமது
தவ்வித் தகர்த்துப் படியொன்று சாகினி மேதி யாநீரும்
நவ்வு நரர்நீ ரிவையொன்று நாழி கூட்டி யதனுளிட்டே 73

இட்டே காய்ச்சிக் கிட்டந்தா னிளாவி யிறுகி வரினுலர்த்தி
மட்டார் காந் தங் கெந்தகமு மருவு மரிசி வகையாறும்

இட்ட முறுநற் சீர்கருஞ்சீ ரோலந் திரிபலை திரிகடுகும்
தட்டா தோமம் விளங்கமிந்து சாதி யைந்து காரமைந்தே 74

கார மைந்து சாரமைந்து கடிய வுள்ளி யிவையெல்லாம்
ஓரொன் றரையாம் பலங்கொண்டே யுறவா யிடித்துச் சூரணித்துக்
கூறு மிஞ்சிச் சாறதனில் வெருகடி மண்டல முட்கொள்ளச்
சோரும் பித்த பாண்டுவுருச் சூலை விரைந்து போய்விடுமே 75

கரிசாலையெண்ணெய்

கையான் றகரைச் சாறுவாய் கழற்சிச் சாறு பொற்காணி
துய்ய தேசிப் பழச்சாறு துளசிச் சாறு வல்லாரை
மையார் கூந்தற் சாறது மஞ்ச ளிலைச்சா றவுரியுமே
வையா யிளநீர் வெள்ளாட்டின் மருவும் பாலு மிவைசரியே 76

சரியா யெண்ணெ யுடனிட்டுச் சாக்கு மிளகு படி நுணுக்கிக்
கருகா தெரித்துப் பதத்தில்வடி காலை வெந்நீர் தனில்முழுக
அரிதாம் பாண்டு சூலையெலா மகன்றே யோடிப் போகுமெனப்
பெரியோர்சொன்னார்முறையறிந்துபேணிச்செய்வாய்பெய்வளையே

சிலேற்பனபாண்டு சூலைக்கு
குக்கில் நெய்

சுத்திசெய் குக்கில் காந்தஞ் சோமன்வெள் ளுள்ளி மஞ்சள்
வித்தக விளங்க மோமம் வெந்தயங் கடுகு மேதை
சித்திர †மூலம் வெட்டி சிவதைரோ கணியிந் துப்புக்
குற்றமி லபினு மொக்கக் கூட்டிநெய் நாழி விட்டே 78

விட்டே வெள்ளாட் டின்பால் வெந்திடிற் கடுகி னோடே
கட்டா யரைமண் டலங்கொள்ளக் கபஞ்சேர் பாண்டுசூலையெலாம்
மட்டாய்த் தீருமென முன்னோர்வழுத்தும்வகைகளறிந்துகொண்டு
தட்டா திதனை யுண்டுவரிற் சயங்கள் சுவாத காசமும்போம் 79

---

†மூலமெட்டிஎன்றும் பாடம்.

சன்னிபாத பாண்டுச்சூலைக்கு

இரசகாந்தக்குளிகை

காந்த மிரசங் கெந்தகமுங் கதித்த நாவி யரிதாரம்
போந்த குக்கில் திரிகடுகு பொரியுங் காரம் வெள்ளுள்ளி
சேர்ந்த வசம்பு கடுரோணி சிவதை யிந்து முப்பலையும்
ஆய்ந்த நிம்பத் தோற்சாற்று லாட்டித் தேற்றி னளவுருட்டே

வேயைப் பொருந்தும் புயமின்னே விரும்பித் தசமூலிச்சாற்றில்
தோயக் கரைத்துக் கொடுப்பீரேற் சூலை பாண்டு தோஷமுதல்
மாயப் பித்த மிவையெல்லா மாறு மெனமுன் னோருரைத்தார்
நேயத் துடனே யாராய்ந்து நினைவா யிதனைச் செய்வீரே 81

விஷபாண்டுச்சூலைக்கு

கோசலக் குழம்பு

கோவினீர் குறுணி தன்னிற் கூறிய கடுக்காய் நூறு
தாவுமிந் துப்புக் காந்தஞ் சாத்திர வேதி கல்நார்
காவுறு சித்ர மூலங் கடுகுரோ கணிவ சம்பு
பாவுறு குக்கில் மஞ்சள் பகர்திரி கடுகோ டுள்ளி 82

ஓதிய கார மைந்து முப்பைந்து சார மைந்து
ஈதெலாஞ் சமனுய்க் கூட்டி யிடித்ததிற் றாவி வெந்து
மாதுகேள் புன்னைக் காய்போன் மண்டல முண்டு வந்தாற்
காதிய விஷத்திற் பாண்டுச் சூலைநோய் கடுப்பும் போமே 83

பிரமேகசூலை-4 வகையின்குணம்

சுக்கிலங் கபமி ரத்தந் தோன்றிடுஞ் சதைக ளுனு
மிக்கநீர் தன்னில் வீழ்ந்து மெய்யெலா நையக் குத்தும்
அக்கியு மிகுந்து கைகா லவயவங் களிலே கட்டும்
இக்குணம் பிரமே கத்தின் சூலையென் றியம்ப லாமே 84

அறவுலர்ந் தென்பு தொன்றி யருக்கிடு முணவு காணு
துறமடக் கசைவு தோறு மூர்த்தியே கனத்துக் குத்தும்
திறமற மடக்கிக் கொள்ளுஞ் செய்மியே விக்க மாகும்
உறுமிவை குணங்கள் கண்டா லுரையிர மேக சூலை 85

அவையிலிந் திரியம் விழு நோயசாத் தியமா மென்று
சவையுறத் தெரிந்து கொண்டு சாத்திய சூலைக் கெல்லாம்
கவையுறுங் குணங்கள் கண்டு கட்டசாத் தியத்தை நீக்கி
அவையற மருந்து தன்னை யறைந்திடக் கேட்டி டாயே 86

சிகிச்சை

பஞ்சகல்யாணித்தைலம்

திருவே யெண்ணெ யிரண்டுபடி சித்ர மூலஞ் சாதியைந்து
கருவேல்வெள்வேல்விளாவிவற்றின்கனி தோல்பிசின்கல்நார்மதுரம்
அரிசி யாறு சிற்றரத்தை யவின்கா கோளி யதன்வர்க்கம்
உரிய பஞ்ச வாசமுட னேம மொன்று முக்கழஞ்சே 87

சேர நிறுத்தே யிடிபொடித்துத் திரண்டு வெந்து பதத்தில்வடித்
தாரக் கரண்டி யளவு கொண்டே யடைவே யுடம்பு தனிலுமிட
நீரிற் கடுப்புத் தாதுவிழல் நெரிர்க் கைகால் குத்துளைவு
தீரும் பஞ்ச கல்யாணி யென்றே பெயருஞ் செப்பினரே 88

குக்கிற்கிருதம்

சுத்திக் குக்கில் பலமொன்று துவரின் சிகையு மட்டவர்க்கம்
கொத்துச் சாதி வகையைந்து கோதில் கெந்த வர்க்கமுடன்
சத்திச் சார மெவச் சாரஞ் தகரங் கோட்டஞ் செண்பகப்பூ
அத்தித் திப்பி லரிசிவர்க்க மருவெண் துருக்கங் குறுசாணி 89

சாதி லிங்கம் பறங்கிவேர் சாத்ர பேதி துரிசுதுத்தம்
ஓதும் பத்ரி முப்பலையு மோம முடனே குளவிந்தம்
ஈதோ டொன்று முக்கழஞ்சா யிடித்து நறுநெய் பால்நாழி
மாதே தூவிப் பதத்தில்வெந்து வடித்துச் சீனி யதில்விரவே

விரவிக் கரண்டி மண்டலங்கொண் மேவு மூப்புப் புளிதவிர்ந்தால்
உரைசேர் மேகமதில்விழு முதிரம் விந்து கபமாதி
புரையாய் வீங்குங் கடுப்புளைவு பொருத்துத்தோறுங்கட்டுவதும்
திரமாய்த் தீருமெனமுன்னோர் செப்புங் குக்கிற் கிருதமிதே

கிரந்திசூலை

பொருந்திடுந் திரிதோஷத்தாற் புடைத்தெழு கிரந்தி யாலும்
வருந்திடுஞ் சூலை செய்யுங் குணமதை வழுத்துக் கேளாய்
இருங்கரங் கால்கடோறு மிடருற வுளைந்து கட்டி
உரம்பெற வலித்து வீங்கி யூதையு மிகவுண் டாமே 92

மேவியே யசைவு தோறும் வெடித்ததிற் சலநீர் வீழும்
தாவிய கரங்கா லோய்ந்து தவனமே பற்றி நிற்கும்
சீவிய தாது நாச மெரித்துடல் சிறுநீர் வீழும்
காவியங் கண்ணி னுளே கிரந்தியின் சூலை காணே 93

சிகிச்சை

இரசதாரக்கிருதம்

கழற்சிநொச்சி புனமுருங்கை சரியுமேனி பொடுதலை
காறிடும் பிரண்டை தும்பை வேநெடுஞ்சமன்பெருந்
துளிப்பிழிந் துழக்கதாய் வடித்தபின் கலந்திடு
சூதமுக் கழஞ்சுகெந்தி தாரமுங் கழஞ்செடு
பழக்கமுற்ற சாதி லிங்க மிருகழஞ்சு சுத்திசெய்
பட்டைகுக்கி லிருகழஞ்சு பண்புறப் பொடித்துமே
உழக்குநெய் யதிற்செறித் திடும்பதம் வடித்துமே
புண்ண வெட்டு நாட்கிரந்தி சூலையோடு முண்மையே 94

குக்கில் ரசாயனம்

குக்கில்பட்டைகெந்தகஞ் சூறித்தொல் லொன்று முப்பலங்
கொண்டுசுத்தி யானபின்பு கூட்டிடும் மருந்துகேள்
தக்கசீர மரிசியாறு கடுகமூன்று முப்பலை
சாளமுள்ளி சோமனுப்பு துரிசு துத்த மேலமுங்

தொக்க சாரஞ் சயிலகங் கடுகுருந் துருக்ககமுந்
துய்யகற் காரம்பு பத்ரி சாதிமேவு காயுமே
மிக்கபத்ரி விடயமோம மலிளிவை சமனெடு
வெதுப்பியே யிடித்ததூள் விரவுதேனு நெய்யுமே 95

செய்யசீனி கதலியின் பழத்தொ டிஞ்சி சேரவே
மெய்ய ளாவி யேபிசைந்து மேவியே யருந்திடக்
கைகள் கால்கள் மேவுசூலை கரடிவன் கிரந்தியும்
மெய்சொ றிந்து காதுகண் சொறிந்திடுங் கிரந்தியும் 96

மோதிடுங் கிரந்தியும் முதலிஷங்கள் கடிவிஷம்
தீதுறுந் திமிர்விதங்கள் நினவுநாசி பீடமும்
மோதிடுங் கபங்களும் முனியும்வாத வாயுவும்
ஓதிடும் பவுந்தி ரங்க ளொக்கவோடு முண்மையே 97.

இராசசேகரக் குக்கிற் சூரணம்

சுத்தியான குக்கில் பட்டை கெந்தகந் துவர்ச்சிகை
தூயகார சாரமைந்து சாதி யைந்து தூபமும
அத்திதிப்பி லீய ரத்தை கற்கட சிங்கியும்
மதிவிடய மானமஞ்சள் நாகுதேவ தாரமும்
கைத்தல்பாடல் குங்குலும் கஞ்சமிந்து மோகனி
காதுமுக் கடுகுபாலை கல்விறாந மதமுமே
தக்கசீர யோதமுள்ளி முந்திரிகை மதூரமுஞ்
சாற்றுவில்லை வாசமைந்து மூன்றுபத் திரியுமே 98

துரிசுதுத்த மவிமெழுகுந் தூயகற்க வகையெலாஞ்
சொல்லுமொன்று முக்கழஞ்சு தூளதா யிடித்துமே
அரியவஸ்தி ரந்தனில் வடித்தெடுத்த சூரணம்
மளவுசீனி கூட்டியே யளவுநல்ல தேனினில்
பருகியே புளிப்பிறே டுப்பையும் மறந்திடு
பறங்கிசூலை யொடுகிரந்து யெரிவு குட்டம் புண்புரை
அருகியோடு மோடுமென் றகத்தியன் மொழிந்தன
ஞறமா முகத்துவள்ள லருணினைந்து முன்னமே 99

அரிதாரபற்பம்

தக்கதார மிருபலங்கொள் சுத்திசெய் செருப்படிச்
சாறுவிட் டரைத்துமேவு வட்டதா யுலர்த்தியே
மிக்கவேல் புரசரசு புளிமரத் தோலிவை
வெந்தசாம்பல் விரவுசட்டி மீதுமேலுங் கீழுமாய்ப்
புக்கசீலை மண்பொதிந் தெரிப்பையாறு சாமமும்
பூவையே பிரித்தெடுத்து மேவுதேனி லெட்டுநாள்
நக்கவேர் பணங்கொளந்தி சந்திவிட்டி டாமலே
நாசமாங் கிரந்திசூலை சேற்பசூலை மூழ்குமே 100

உலர்த்துசூலை

காயம் வற்றிக் கடுப்புண்டாய்க் கைகா லுளைந்து கனத்திருக்கும்
நோயு மிருந்து நொந்துடப்பு நோக்கங் கெட்டுத் தாதுக்கிச்
சேயின் வடிவா யுளவங்கந் திரங்கிக் கிழம்போ லாமேனி
வாயு வுலர்த்து சூலையென வகுத்துப் பேசும் வாகடமே 101

வாயுச்சூலை

கைகா லுளைந்து கணைதிரண்டு கொட்டும்பொருத்துத் தலந்தோறும்
மெய்யே நடுக்கும் விறைவிறைக்கும் விரல்கடோறும் விருவிருக்கும்
நொய்ய மேனி மெலிந்துவற்று நோகக் குத்து நகக்கண்ணில்
வெய்ய வாயுச் சூலையென விளம்பு மாயுள் வேதமதே 102

சிகிச்சை

அமுக்கிராவெண்ணெய்

மேவு மமுக்கிரா வெண்ணெய்தனை மேதினியிற்
பாவலரே வைக்கும் பரிசுகேள்-காவில்
வளரு மமுக்கிரா வாகைவேர் வேங்கை
தளைவு சாதாவேரி சீந்தில்-மிளகரணை
சாரணைவேர் நொச்சிவேர் சங்குப்பி வேரினுடன்
கூறிடு கொட்டை குரோட்டைவேர்-மீறிய

பம்பந் திராய்நாற் பான்மரத்தோல் லாமிச்சு
நம்புந் திரிகடுகு நன்னாரி-கொம்பாரும்
முப்பலை வெட்டிவேர் முன்னை முசுட்டைவேர்
செப்பு மிருவேலி சேரவே-ஒப்பாக
ஓரொன்று முப்பலமா யுறுசலிலந் நாலுபடி
வாரெட்டி லொன்றாய் வடித்ததற்பின்-சேரத்தில்
வெள்ளாட்டுப் பாலிளநீர் மேவுமெண்ணெ யோரளவாய்த்
தள்ளாத கற்கவகை சாற்றக்கேள்-விள்ளும்
மதுர முடன்றார மஞ்சளொரு நாலு
பொதியவிழ் கோட்டம் புழுகு-விதசட்டம்
குக்கில் கொடுவேலி கோரக்கர் மூலியுடன்
மிக்க சிறுமூல மேதைவகை-தக்கதோர்
சாதியைந்து செண்பகப்பூச் சடாமாஞ் சரத்தை கல்நார்
ஓது மரிசிவகை யோராறும்-போதவே
ஒவ்வொன்று முக்கழஞ்சா யொக்கவிடி பொடித்துச்
செவ்விநா யெண்ணெ யதிற்சேர்த்துத்-தவ்வா
மெழுகு பதமாய் விரைய வடித்து
வளமாப் முழுகிவர மானே-அழுகண்ணி
குட்டமொடு சூலை குளிர்வெதுப்பு நீள்கிரந்தி
வட்டமுறு புண்புரைகள் வாதநோய் முட்டுளைவு
வாயுவின் சூலையது மாதர் கனமயக்கும்
ஓயும் விடபாக முள்ளிருமல்-நோயிவைகள்
தீருமென முன்னோர் தெரிந்துரைத்த தன்மையினால்
ஆருமிது செய்வீ ரறிந்து. 10

அசாத்தியம் 9ல்
சிலேற்பனசூலை

தேகம் வரண்டே யிருமலுமாய்த் தியக்க மிருந்து கோளைவிழும்
ஆகம் புண்போ லேவுண்டா மசைந்த பொருத்துக்கிடைகட்டும்
பாகம் பற்றி விறைவிறைக்கும் பதறக் குத்துங் கண்டேங்கும்
தாகம் மண்டி யுவாந்திமிகுஞ் சயத்தின் சூலைக் குணந்தானே

கண்டங்கத்தரி லேகியம்

கார்குழலாய் கேள் கண்டங் கத்தரியின் லேகியத்தைச்
சீர்பெறவே வைத்தருந்தச் செப்புவேன் - நேர்கண்டங்
கத்தரிநற் றாதுவளை காவில் வளர்பிரமி
உற்றசிறு முள்ளி யுடன்றொடை - குற்றமறும்
காரை யிசங்கு கருந்துளசி காணியுடன்
நேரான தேற்று விலையிவையே - ஒரொன்
றரைத்துப் பலமுன் றவிகலநீர் விட்டுக்
கருத்துறவே யெட்டொன்றாய்க் காய்ச்சிப் - பொருத்தமாய்ச்
சீலைவடி கொண்டு செறிந்த கஷாயமதில்
மேலு மருந்து விளம்பக்கேள் - கோல
முறுபறங்கிப் பட்டை யுடன்முப் பலையும்
மறுவில்தேற் றுவாச மைந்து - சிறுமூலம்
சித்திர மூலந் திரிகடுகு குக்கிலதும்
ஒத்ததிரி பத்திரியு மோமமுள்ளி - கொத்தமல்லி
சித்தரத்தை நாகஞ் சிவதை கடுரோணி
மூத்த மதிமதுர முந்திரிகை - உற்றதோர்
சாதியைந்து காந்தஞ் சயிந்த லவணமோ
டோதுமிவை யோரொன்று முக்கழஞ்சு மாதே
இடித்துவடி கட்டி யெடுத்தபொடி முன்னே
வடித்த கஷாய மதில்விரவித் - தடித்தபின்
சீனிகற் கண்டுடனே சேர்ந்தற பொரிமாவும்
ஈனமறக் கூட்டி யிறுகியபின் - ஊனமறும்
இஞ்சிநீர் வார்த்தே யிளம்பாகு போலிறக்கித்
தஞ்சமுற மண்டலங்கொள் சாருநோய் - எஞ்சாது
மேவுஞ் சயசூலை மேலிளைப்புக் கால்கரங்கள்
தாவு முடக்குச் சயகாசம் - கோபிக்கும்
வட்டமுறு புண்புரைகள் வாந்திவிக்க லாதியவும்
தட்டமறத் தீருமெனச் சாற்று,

சன்னிபாதசூலை

நாளுற வுடம்பு நோவாய் நையவே கொதித்துக் குத்தும்
கோளதா யுளைந்து வீக்கங் கொண்டிடும் பொருத்துத் தோறும்
பாழதா நாவ ரண்டு புளிப்பினிற் பகைமை செய்யும்
தாளுற வயருஞ் சன்னி பாதத்தின் சூலை தானே 106

கிம்பாதித் தைலம்

சொல்லுவேப் பெண்ணெய் நாழி தும்பைநீர் நொச்சிச் சாறு
புல்லிய வேளை மேனி பெருந்தலை வீழிச் சாறு
கல்லிவெள் ளுள்ளி யிஞ்சி நீரிடிய முருக்கின் சாறு
வல்லிநீயா லொன்று நாழி வாங்கிடு மருந்து கேளே 107

திரிகடு கடுகோ ரெள்ளி சிறுதேக்கு வசம்பு குக்கில்
மறுவில்லெகந் தகத்தி னோடு மஞ்சிட்டி மாஞ்சின் மஞ்சள்
உறுபறங் கிபின்வேர் சாதி யோமகற் காந்த மொக்கக்
குறியுற முக்கழுஞ்ச கூட்டியே வெந்து கொள்ளே 108

கொடுத்திடு மண்ட லந்தான் கூறிய வுட லுந் தேய்க்கில்
நடுக்கிடுஞ் சன்னி பாத சூலைபு நாச மாகும்
மடக்கொடி புளியு முப்பு மாற்றியே வேது வார்க்கிற்
கடுப்புடன் முடக்குக் கட்டுக் கருதிய வாதம் போமே 109

மாங்கிஷசூலை

இயம்பிடு பொருத்துத் தோறு பென்புறு மிடங்க டோறும்
தயங்கவே கனத்து நொந்து தசையுற வெடித்து நோவாம்
வயங்கிழை மானே கேளாய் வரட்சியா யுடம்பு வற்றும்
மயங்கெடப் புலால்போல் நாறும் மாங்கிஷ சூலை தானே 110

சிகிச்சை

இவ்வுரோ கத்தை மாற்றி லெழுந்திடுந் தசையை நீவி
வவ்வவே காரஞ் செய்து மருவிய பின்னர்த் தானே

நவ்வியங் கண்ணி னாளே நவிலரி தார பற்பம்
தவ்விடா தருந்தும் போது தசையினிற் சூலை போமே 111

நீர்ச்சூலை

மேவிய புறங்கை கால்கள் வீக்கமுந் தினவு மாகித்
தாவிய பொருத்துத் தோறுந் தறுகிடக் குத்தி நோவாம்
சீவிய கொப்பு ளம்போற் றிரண்டது வுடையுங் கண்டாய்
தாவிய நீரின் சூலை தான்செயுங் குணங்க ளாமே 112

இதற்குப் புகை

ஈயங்கால் தனையு ருக்கி யிரசமோன் றரையும் விட்டு
நேயமாய் [illegible]ட்ட தாக்கி நெல்லிக்கெந்தகமுந் தாரம்
தூயெலி மருந்து துத்தந் துரிசுகார் கோளுந் தூபம்
ஆயதோ ரிலுப்பைக் கட்டி யருமஞ்சள் கழஞ்சொவ் வொன்றே

எலவே நறுக்கிக் கொண்டே யிரதமு மதனுட் சேர்த்துச்
சாலவே கிளியாய்க் கட்டித் தழலிடைப் புகைத்தி டாய்பின்
கோலவா மணக்கி னெண்ணெய் முழுகிடக் கூறுஞ் சூலை
மேனுநீர் கிரந்தி குட்டம் வெடித்திடும் பறங்கி போமே 114

விஷநீர்ச்சூலை

மேவிய கிரந்தி யாலும் விஷக்கடி தன்னி னாலும்
பாவிய வுடம்பு வற்றிப் பலபடக் குத்தி நோவாம்
சீவிய பொருத்துத் தோறு மென்புகள் தெறித்து வீழும்
மேவிய விஷநீர்ச் சூலை யென்றுதான் விளம்ப லாமே 115

நரம்பிடை யனல்போற் காந்தி நையவே கொதித்துக் குத்தும்
சுரங்கொளு மூதை விம்முந் துய்யநீர் கடுத்து வீழும்
மரம்பெறத் திமிர்ப்புண் டாகி மணியணி விரல்கள் வீழும்
உரம்பெறு விஷநீர்ச் சூலை தானென வோதி னாரே 116

சிகிச்சை

சித்திரமூல ரசாயனம்

சித்திர மூலி வேருஞ் சிறியநீ ரெட்டி வித்தும்
ஒத்தசேங் கொட்டை சுக்கி லோடுகெந் தகநல் லெள்ளும்
இத்தொடு பறங்கி வேரு மினியநற் சாதி யைந்தும்
குற்றமில் துவர்ச்சை மேதை குலவுவெண் குந்த ருக்கம் 117

சாதியா மரிசி யாறுந் தக்கமுக் கடுகு காந்தம்
ஓதிய விளங்க மோம மோரொன்று பலமே கொண்டு
தீதற வறுத்தி டித்து விளாவுறக் கஷாயங் கூட்டிப்
போதுறு தேனெய் யிஞ்சிச் சாறொடு புட்டிப் பாகாய் 118

பாகது மண்ட லங்கொள் பரிந்துப்புப் புளியு நீக்கி
ஏகுறு மாக மெல்லா மிளகளவு வெந்நீர் விட்டாற்
சாகுறி போலும் வெய்ய சூலைநோய் கிரந்தி தானும்
போகுறும் விஷநீர்ச் சூலை தானெனப் புகன்றார் நல்லோர் 119

என்புச்சூலை

முழந்தாள் கைகள் பொருத்து முட்டுமோதி யெலும்புமிகப் புடைக்கும்
உளைந்து குத்திக் கடுப்புண்டாய் வெடித்தேதியாடுவு மதிற்பாயும்
வளைந்தேத மூக்குங் கைகாலு மயமூங் கெட்டுத் தாதுக்கும்
விளைந்த வென்புச் சூலையென வாயுள் வேதம் விளம்பிடுமே

சிகிச்சை

இரசகாந்தக்குளிகை

சொல்லு நெல்லிக் கெந்தகமுந் துலங்குங் காந்தம் பொரிகாரம்
வெல்ல வோரொன் றிருகழஞ்சு மேவுஞ் சூத மொருகழஞ்சு
புல்லுந் தவிடு பனைவெல்லம் பொருந்தப் பாக்கி னளவுகொண்டு
முல்லை நகையீர் கையாலீ ரரைத்தே முண்டை விழுங்கிடுமே

உண்டே புளிப்புக் கைப்புப்புத் துவர்ப்பு வகைக ளவைநீக்கிக்
கொண்டே வெந்நீர்த்தாரைகொண்டுகுறித்தாமணக்கெண்ணெயினால்
வண்டே தேய்த்து முழுகிவர வடியுமொடுநீ ரொன்பிவைகள்
பண்டே விழுந்த வெடிசூலை கிரந்திச் சூலை பறந்திடுமே 122

நரம்புச்சூலை

உடல்கை கால்கள் மேற்படர்ந்தேயுறிபோல்நரப்புமுடிச்சுவிழும்
அடைவே குழைவு மில்லாம லழியும் புறமுங் கனத்திருக்கும்
திடமாய் நடக்க வொட்டாது முடக்கி னுலுக் கிமிர்வெரிதாம்
இடரே செய்யுங் குணநரம்பின் சூலை யிதுவு மசாத்தியமே

நிதம்பசூலை

தோற்புரை வழிய தாயங் குரித்தது கனத்தே யேறி
நீர்ப்புக வாயுக் கோத்து நிரம்பியே முளைத்தெங் காய்போல்
ஏற்கவே சவ்வு முற்றி யிறுகியே திரளு நாளில்
நீர்ப்பொசிந் திருக்கு மென்னி னிதம்பமாஞ் சூலை தானே 124

பிள்ளைப் பெற்ற விடந்தன்னிற் பெருத்த யோனி தனில்வாயு
உள்ளே குருதி தடைப்பட்டே யொதுங்கிப்புடைபட்டொடுவாகி
மெள்ளக் கனத்தோர் பால்வீங்கி வெடித்தே வலியு மாயிருக்கும்
வள்ளைக் குழலா யிக்குணந்தா னிதம்ப சூலை வகைதானே 125

வெய்யதோர் கிரந்தி தன்னுன் மேவிய யோனி மீதே
மொய்பனை யதின்காய்த் தோல்போன் மோதியே கனத்துக்கட்டி
நைபுநீ ரொடுவு மாறு நத்தையிற் சதைபோ லுந்தும்
உய்விலா நிதம்ப சூலை தானென வோதினோரே 126

சிகிச்சை

புகை

பாம்புக் கண்டங் குந்துருக்கம் பருக்கை படாமற் பொடிசெய்து
சாம்பல் போக்கித் தழலிலநித்துச் சட்டி தனிலிட் டூலுள்ளே
சோம்பா தூரலா லழல்மூடிச் சுகமா யானே யதிலிருக்கித்
தேம்பப் பொடியை யதிற்றூவித் திறமாய்ப் புகைக்கவலிவிடுமே

புகை-2

தக்க வோமம் வெள்ளையுள்ளிச் சருகு சர்ப்பக் கண்டமுடன்
சுக்கு மிளகு திப்பிலியுஞ் சோமன் வசம்பு குந்துருக்கம்
மிக்க வெளுத்த லவைநறுணுக்கி மேவுமுடம்பி லெண்ணெயிட்டே
ஒக்க விருத்திப் புகையூட்ட யோனிச் சூலை யோடிடுமே 128

சிறுகுறிஞ்சி யெண்ணெய்

அடைவுபெறு சிறுகுறிஞ்சிச் சாறு நாழி
யதனுடனே முடக்கொற்றான் சாறு நாழி
இடமுடைய நல்லெண்ணெய் தானு நாழி
யிதிற்காயஞ் சீரகங்கார் கோவு மேலம்
திடமுடைய குந்துருக்கஞ் சன்ன சாலை
திரிகடுகு வசம்புள்ளி மதுரங் குப்பை
பொடிபடவே தூவிவடித் துள்ளே கொள்ளப்
பொருநிதம்ப சூலைவலி யொடுவும் போமே 129

அண்டசூலை

வாயுவினால் நீரினால் மாங்கிஷத்தா லிரத்தத்தால்
ஆயபல சூலைநோ யண்டமோர் பால்நின்று
சேயகுட லுள்ளே செனித்திறங்கு மிக்குணங்கள்
ஆயவ சாத்தியமா மென்றறிந்து கொள்வதுவே 130

சிகிச்சை

கிரைகுத்த

வாயுத் தசையிரண்டு மாற்றிநீ ரேற்றமெனில்
ஆயப் படுநரம்பி லந்நரம்பை யுந்நீக்கி
நேயப் படுங்கார நீவைப் பனவளவு
சேயப் படுஞ்சிகிச்சை யாவையுங்கேள் சேயிழையே 131

காரத்தால் வெந்திடத்தே கட்டறவே நற்சருவி
கோரத்தா னத்துட் குறித்தழுத்தி நீரிரத்தம்
பாரிற்றுன் வீழ்ந்தாற் பதப்படவே யொற்றியிட்டு
ஊரப்புண் மீதே யுதிரநீர் மாற்றியிடே 132

உட்கொள்ள

பறங்கிப்பட்டைச் சூரணம்

மாற்றியிடும் பின்னு மதித்தாத்த நீர்வந்து
தோற்றியிடா துன்னச் சொல்லுதுங்கேண் மேன்மருந்து
சாற்றியிடும் பறங்கி வேர்நெல்லிக் கெந்திருக்கில்
சிற்றமிரு தாரசிங்கி சேரொன் றிருபலமே 133

மேவியநற் சுத்திசெய்து மிக்க திரிகடுகும்
பாவுந் திரிபலையும் பண்டேலஞ் சீரியரும்
கூவியநற் சாதியைந்துங் கூறமிரு ளோமமுமே
காவியங்க ணல்லாய் கடுகு சமனிவையே 134

ஏலவே நன்ற யிடிதேன் வெருகடியுண்
பாலதா மண்டத்தி னுள்ளபல சூலைநோய்
மேலு மிரத்தம் விழுந்துளைந்த வேதினைநோய்
நாலுளோர் தீருமென நோக்கி யுரைத்ததுவே 135

அண்டவாயுச்சூலை
(பக்கசூலை)

வந்து பொருமு மண்டத்தில் வலித்து மிகவுஞ் சுரந்தோன்றி
நொந்தே யுடம்பு புண்போல நோவி னுடனே தலைவலியும்
இந்த வடைவே குணந்தோன்றி லிதுவே பக்க சூலையெனத்
தொந்தத் துடனே வருவதெனச் சொல்லுங் குறிக ளிவையாமே

கொண்டிடுங் குடலிற் றங்குங் குறைந்தொரு பாலிற் றோன்றி
மண்டியே விரைகுழி லொன்றை வலித்தற வுடலுள் வாங்கும்
பண்டிதா னண்ட வாத பரிச குணமா மென்று
அண்டரு முனிவர் தாமு மறியவே யுரைக்க லுற்றார் 137

அந்திரசூலை

கொண்டதோர் பிரமேகத்தின் குணமொரு பாலில் வீங்கி
விண்டிடக் குறகி நொந்து மிருசுரம் பிடரி நோவாம்
பண்டிதா னண்ட வாதம் பற்றியே குடலுள் வாங்கும்
அண்டரு மறியச் சொன்னே மந்திர சூலை தானே 138

சிகிச்சை
குடிநீர்

கழல்பணி வெள்ளை யுள்ளி கடியதோர் முருக்கின் பட்டை
அழலுடை சுக்குக் கொள்ளு மஞ்சிரண் டாகக் கொள்ளில்
குழலிடை யோசை போலக் குமிறிடுங் குடலில் வாதம்
பழகிய சூலை குன்மம் பறந்திடும் பக்க வாய்வே 139

குடிநீர்-2

பெருக்குங் காயம் வெள்ளுள்ளி பேணு மிரிசு வேர்க்கொம்பு
முருக்குஞ்சாரடையோரொன்றுமுன்னேர்படியெட்டொன்றாக்கித்
திருத்த மாகக் கொண்டிடுகிற் செப்பு மண்ட சூலைநோய்
ஒருத்த ரார்க்கும் வாராம லோடும் பக்க சூலையுமே 140

வெண்காயக்குளிகை

சாரணைக் கிழங்கிந் துப்புத் தழுவிடு சுக்க துள்ளி
சீறுசித் திரத்து மூலஞ் ‡செம்பொனின் ரூரம் வாளம்
வீறதா யரைத்தே ரண்ட வெண்ணெயில் விழுங்கு வீரேற்
கூறிய வண்ட சூலை வாதமுங் குலைந்து போமே 141

உள்ளி-பலம்-1 மற்றைச்சரக்குகள்-வகை--கழ-1 கள்ளிப்பால்-கழ-2 ஆமணக்கெண்ணெயிற் காய்ச்சியும் கொள்ளலாம்

உள்ளியாமணக்கெண்ணெய்

சாறணை சித்ர மூலி தகுவீழி வேரிந் துப்புக்
கூறிய பலமொவ் வொன்று கூடுள்ளி யொருப லங்கொள்
வீறுயர் கார மெட்டுக் கழஞ்சுடன் காயம் வாளம்
பேறுள கள்ளி யின்பால் பேரா மணக்கி னெண்ணெய்படி 142

படியே தேங்காய்ப் பால்நாழி பகருந் தும்பை பொடுதலைநீர்
அடைவே முருக்குத் §திருமேனி யதுவே டுவாயு மிஞ்சியினீர்
விடுநீர் கடுகு திரிபலையும் விரும்பி யரைத்து வெந்துவரும்
படிகுந் துருக்கப்பொடிதூ விப்பதத்தில்வடித்துக்கொள்ளுகவே

கொடுநீ கரண்டி மண்டலத்திற் கூறு மண்ட சூலைபல
இடரே செய்யுங் குடல்வாயு விரைக்கு மந்தர வாயுகுன்மம்
கொடிதாஞ் சலப்ர மேகமதாற் கூறுந் தொந்த சூலையெலாம்
பொடியாம் பக்க சூலையுடன் போகு மென்று புகன்றனரே 144

சூலை முதலியவற்றிற்கு பொதுச் சிகிச்சை

குக்கிற்சூரணம்

கூறிய குக்கில் நாலு பலமது சுத்தி கொண்டு
சீரிய கடுவி ளங்கந் திரிகடு பலையோ டோமம்
சாருறு துரிசு துத்தந் தகரங்குங் குமப்பூக் கோட்டம்
நேரிழை தேவ தார நிகரிலா வரிசி யாறே 145

‡செம்பொனி னிரசம் என்றும் பாடம்
§திருகுகள்ளி யொடுவினடக்கி என்றும் பாடம்

ஆனவெண் குந்து ருக்க மரத்தைதகா ரவின் பூச் சாதி
¶ காஞ்று மேலங் கஞ்சாக் கார முஞ் சார மைந்தும்
பானலங் கண்ணி ஞானே பகர்ந்திடு முப்போ ரைந்தும்
தானமாம் பஞ்ச மூலஞ் சாதிபத் திரியு மாமே 146

மேவுநற் சத்த வர்க்கம் விடயம்வெள் ளறுகி னோடு
தாவுயர் வேப்பம் பட்டை சாற்றிய மருந்து மின்னும்
பாவுநற் சீனப் பட்டை பாரங்கி மஞ்சள் நாலு
பூவையே சமன தாகப் பொடித்திடு புகலக் கேளே 147

ஓவிய மனைபா லொக்கச் சயன்கொண்டு நாவி லொன்று
தாவுகெக் தகமுஞ் சுத்தி தான்செய்து மருந்திற் கூட்டித்
தூவிடாய் நெய்தே னிஞ்சிச் சாற்றொடு தோயக் கூட்டிப்
பாவனை யாகக் கொள்ளப் பாறிடும் பலநோய் சூலை 148

இருமலி னோடு காச மிளைப்புடன் பலகி ரந்தி
வருபெருங் கிரந்தி குட்ட வகையெலா மேகு மென்று
திருமறை முனிவர் முன்னாட் செப்பினர் புளியு முப்பும்
வருபல கிரந்தி நீக்கி யருந்திடு மருந்து காணே 149

பச்சிலைச் சூரணம்

நொச்சி பிரண்டைசிவன் வேம்புநவ லும்வெலிப்பருத்திகையான்
தைச்ச வியங்கு செருப்படியுங் கழற்சி முருக்கு வெற்றிலையும்
பச்சைப் பசிய நிம்பவிலை பச்சிலை வர்க்கம் பிடியொன்று
நச்சு பிரசங் கழஞ்சிரண்டு நிறுமென் மருந்து நவிலக்கேள் 500

கெந்தகங் கருஞ்சீ ரோமங் கிளர்திரி கடுகி னோடு
வெந்தயம் விளங்கங் காந்த மேவிய கழஞ்சு வீதம்
சிந்திடா திடித்துத் தூளாய்ச் சேர்த்ததை கல்வந் தன்னிற்
கொந்தலர் குழலி ஞானே கொடுப்பதேழ் பொழுது தானே 151

தானே யொருநா ளாறவிட்டுத் தனிவெந் நீரி லேகுளித்து
மானே பின்ன ராமணக்கி னெண்ணெய்த் தலையில் வைத்தின்னும்

¶ காஞுறுமேலம்—பேரேலம்

ஊறு ருடம்பு தனிற்றேய்த்து முழுகி யுப்புப் புளிமறக்கிற்
சீநீர் கிரந்தி சூலையுடன் கரப்பன் முதலாய்த் தீர்ந்திடுமே 152

கரிசாலைச் சூரணம்

கையான் றகரை வேம்பினிலை காறும் பிரண்டை நாயுருவி
மையா ரவுரி சிவன்வேம்பு வன்னி மூல நிலவாகை
மெய்யார் சிந்தில் வேருடனே மேவு மியங்கு சித்ரமூலம்
தொய்யின் முலையாய் முக்கடுகு சோம னுப்பு முப்பலையே 153

மோதங் கடுகு வசம்புமஞ்சள் முப்பத் திரியோ டதிமதுரம்
காதுங் கோட்டங் கற்கடக சிங்கி கஞ்சா வரியாறு
சீத லவணங் காந்தமிவை சேர்முக் கழஞ்சு வகையொன்று
மாதே வறுத்துப் பொடியாக்கி மதுநெய் யிஞ்சிச் சாறருந்தே

தீரும் வியாதி செப்பக்கேள் சேருங் கிரந்தி யுறுசூலை
கோர மான பவுந்திரத்திற் கொடிய சூலை கரப்பனுடன்
சோரும் வாத மிகுசூலை சொறியுங் குட்ட முறுசூலை
தீரு மெனவே முனிவரர்முன் செப்பு மாறு செய்தறியே 155

நெல்லிமுள்ளிச் சூரணம்

நெல்லிப் பருப்பு மிளகுமஞ்சள் நேராங் கடுக்காய் சிவன்வேம்பு
நல்வெள் ளறுகு கொடிவேலி நன்னா ரியின்வே ரிலங்கம்வேர்
புல்லுங் கருடக் கொடிசீந்தில் பொரியுங் காரம் வசம்புசுக்குச்
சொல்லுந்திப்பிலிசோமனுப்புத்துலங்கச்சமன்கொண்டிடிபொடியே

பொடிவெரு கடியே தேனிற் குழைத்திரு போது முண்ண
முடுகிய வாயு பித்த மொழிந்திடுஞ் சிரங்கு குட்டம்
குடலுறு கிராணி வாயுக் குன்மநோய் பாண்டு சூலை
வெடியுறு கரப்பன் றீரும் விரேசன சுத்தி யாமே 157

குக்குடப்பட்டைச் சூரணம்

கோதையே சினப்பா குக்குடத்தி விட்டவிக்கும்
தீதில்லாச் சூரணத்தைச் செப்பக்கேள்-வதமறும்

பட்டையொரு நாலுபலம் பாங்காக வேசீவி
இட்டமுறு குப்பிச்சாற் றிட்டூறிக்-கட்டாய்
நிழலுலர்த்தி யேன்மருந்து நேரான காந்தம்
வளமருவு முக்கடுகு வாசம்-தெளியும்
அரிதாரங் கெந்தகமு மாஞ்சாதி லிங்கம்
பொரிகார மோமமுடன் போதந்-தெரிசாதிக்
காய்பூவும் பத்திரியுங் கார்நோல் துரிசுதுத்தம்
தூயதொரு சாரணைந்து தோகையே-வாயு
விளங்கமிரு சீரகமு மேலமில வங்கம்
வழங்குகுரா சானியவின் மாதே-களங்கமறும்
குக்கில்குள விந்தங் கொடுவேலி வேர்த்தொலியும்
நற்கடுகு வெந்தயமு நார்மதமும்-தக்க
அரிசிவகை யாறு மடர்சோம னுப்பும்
வருசிவதை ரோணி மருந்தோன்-றுரிய
நிறைகாற் பலங்கொண்டு நேரா யிடித்து
மறுகால் வடிகொண்டு மாவாய்க்-குறியான
பட்டைப் பொடியோடு பாங்காக வேவிரவிப்
பெட்டைக் கருங்கோழி பின்கொணர்ந்து-கட்டான
கால்தலை ரோமங் களைந்து குடல்போக்கி
யேல்மருந் தெல்லாம் விரவியிட்டு-நூல்கொண்டு
தைத்தொரு தாழி தனிற்கோ சலங்குறுணி
அத்தொடு காணச்சா றங்குணி-குற்றமறு
சித்ரமூலிச் சாறு சிறுதும்பை நொச்சிகள்ளி
உத்தமா காணி யுடன்மேனி-முத்தின
வேலை பொடுதலையும் வேறொன்று நீர்நாழி
தாளாமுன் னீருடனே சாரவிட்டுக்-கேளாய்நீ
கோணியற்பட் டால்வேடு சட்டியொருகுடத்தைப்
பேணியதில் வைத்துப் பிரளாதே-காணும்
இடையினில்மண் பூசி யிதமா யெரித்தே
அடைவே சுவறி னெடுத்து-உடனே
எலும்பெல்லாம் போக்கி யுலர்த்தி யிடித்து

Dr. T. K. SIVAGNANAM
L. R. M. P. (Cey)

நலம்பெற நாற்பது நாட்கள்-துலங்கிய
தேனில் வெருகடிதூள் தின்றுபுளி யுப்பிவைகள்
ஆனவித மெல்லா மறநீக்கி-மானேகேள்
வெள்ளா டுடும்புமுயல் மேவு கவுதாரி
உள்ளான் சிவல்காடை யூர்க்குருவி-தள்ளாத்
திருக்கைசுறு நெய்த்தோல் தெளிவரால் போத்தி
விரித்துலர்த்திக் கொள்கறிகண் மேலும்-பருத்த
துவரம் பருப்புடனே தூதுளையின் காயும்
அவரை முருங்கை யதின்பிஞ்-சுவரில்லாக்
கீரையின் றண்டுங் கிளர்ந்த சுரைக்கொழுந்தும்
சீர்கதலிப் பிஞ்சு சிறுகீரை-நேரான
கோழியின் முட்டையுடன் கோநெய் யிவையருந்தித்
தாழா மணக்கெண்ணெய் தான்முழுகில்-ஆழான 158

குட்டமவை யெட்டினொடு குத்தழல் கடுப்பிவைகள்
முட்டினை முடக்குவலி முக்குதலை-கட்டிபிடு
சூலைபடர் தாமரைகள் கால்தலைகள் மேல்சொறிவு
சீல்புரைகள் மேலுளைவு தேகமதில்-ஆலமென
வந்துறு கிரந்திகள் பறங்கிகள் வரண்டிடுதல்
நொந்திடு சிலந்திகள் பவுந்திரமும்-மந்தமுறு
கோரைவலி வாதமொடு கோபமுற ஆறுதலை
பாதவெடி மேவுகடி பாகவலி-காதுகளுட்
பொருமலது வயிறழிவு பொடுபொடென விரவுகொளல்
இருமியுறு கோழைவிழ லெரிவுகொளல்-செருமியே
மண்டையிடி துண்டமதில் வந்ததை சலங்களொடு
தொண்டையுறுபுண்புரைகள்தொங்கல்விழல்ஒண்டொடியே
புற்றெழுதல் மொத்திகொளல் பொத்திகடி யத்திசுரம்
மொய்த்தகப விக்கலொடு முக்குதலை-சிக்கியே
நீரடைத்திடல் நீழ்தசைக் கொளல் வீடனத்துதல்
ஊர்சொறிக்கொளல் மேல்பொருக்கெழல்-தீரா

Dr. T. K. IVAGNANAM
L. M. P. (Cey)

ஊனை யப்புதல் வாதை மீக்கொளல்
நேராம் பலபிணி யாராய்ந் ததிலுறு
சீராந் தெரிகுறு மறிவோர்கள்
உளபல பிணிகள் விதமுட னகல
முனிவரனிதனை யுலகினி லுரைசெய்
யருமறை தெரீவார் விதமுறைபுணரும் பெரியோரே 159

பறங்கிப்பட்டைலேகியம்

பட்டையோ ரெட்ட தாகும் பகருங் கெந்தகமு நாலு
சட்டமா மசுவ நாலு தழல்கொடு வேலி ரண்டு
மட்டமா யிடித்து நெய்யு மருவுசர்க் கரையுங் கூட்டில்
நட்டமாஞ் சூலை மேக நயந்துபுண் தீரு மன்றே 160